
ஜூன் 28 - ஜூலை 04, 2004 24 பக்கங்கள் 16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


# சுடர் ஒளி


THE SUDAR OLI සුඩර් ඔළි
வார மலர்











## அலி ஸாகிர் பலிக்கடா!!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## போர் முனை நோக்கிய ஜனாதிபதியின் ஆர்வங்கள்

## யாழ் சமூகமும் தில்லுமுல்லுப்படும் அரசாங்க நிறுவனங்களும்

யாழ்ப்பாணம்

கடந்த 8ஆம் திகதியன்று ஹெல உறுமயவினரை நாடாளுமன்றத்தில் வைத்துத் தாக்கியதற்காக தனது கட்சியினருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி ஊடகங்களுக்கு செய்தி வெளியிட்டிருந்தார்.

அந்த அறிவிப்பு வெளியாகி இருவாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும் எந்த நடவடிக்கையும் இதுவரை ஜனாதிபதியால் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

10ஆம் திகதி இரவு தமிழ்க்கட்சி எம்.பிக்களிடம், புலிகள் விடுத்துள்ள கோரிக்கைக்கு தான் இணங்குவதாக ஒப்புக்கொண்ட விடயங்களை அவர் 12ஆம் திகதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது மறுத்துவிட்டார்.

அந்த உரையில், புலிகளுடன் பேசப் போகும் விடயங்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் எனினும் அதுபற்றி தற்போது தாம் ஆராய்ந்துகொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

பயணிப்பதற்கான அனுமதி படைத்தரப்பால் நிராகரிக்கப்பட்டது.

கடந்த 11ஆம் திகதி பலாலி விமான நிலையத்துக்குச் சென்ற அமெரிக்கத் தளபதி குடாநாட்டின் பாதுகாப்பு நிலமைகள் தொடர்பாக படை அதிகாரிகளிடம் விசாரித்து நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

இந்த நிலையில், சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி இரட்டைவேடம் போடுவதாக விடுதலைப்புலிகள் சாடியிருக்கிறார்கள். விடுதலைப்புலிகள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், சர்வதேச சமூகம் ஜனாதிபதியின் இரட்டைவேடத்தை நன்கு உணர்ந்து கொண்டு கொள்கைப்பற்றும்,நேர்மையும் கொண்ட அரசியல் தீர்வுக்கான அழுத்தங்களை அரசுக்கு கொடுக்க வேண்டுமென அறிவித்திருக்கிறார்கள்.

**தென்னிலங்கை அமைப்புக்களின் கண்டனங்கள்**

சச்சரவுகள், அரசின் உத்தரவையும் மீறி படையினர் யுத்தத்துக்குள் செல்லக்கூடிய அளவுக்கு நிலமைகள் மோசமாக மாறியுள்ளன.

கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதி லண்டன் சென்றிருப்பது சமாதான முயற்சிகளுக்கு அப்பால், அரசைக் கொண்டு நடத்துவதற்கு அவசியம் தேவைப்படுகிற நிதியை ஐரோப்பிய உலகத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கான ஒரு முயற்சியாகவே தென்படுகிறது.

லண்டன் சென்றிருந்த ஜனாதிபதியை இந்திய வெளியுறவுச் செயலரும் சந்தித்துப்பேசியுள்ளார். எவ்வாறாயினும் ஜனாதிபதியின் விஜயம், தன்னால் குழப்பப்பட்ட சமாதான முயற்சிகள் பற்றிய பழியை புலிகள் மேல் போட்டு தனக்கு நல்ல பெயரை சர்வதேச சமூகத்திடம் பெற்றுக்கொள்வதே பிரதான நோக்கமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கூடவே கொழும்பின்

ஏற்படும்போது சமாதானப் பேச்சை தொடர்வதற்கு ஒப்புதலளிப்பதும், நாடாளுமன்ற நிலைமைகள் தமக்கு சாதகமாக இருக்கும்போது பேச்சுக்களை கைவிடுவதுமாக பல சந்தர்ப்பங்களில் தான் ஒப்புக்கொண்டதற்கு மாறாக ஜனாதிபதி நடந்துகொண்டிருக்கின்றார்.

இப்போது பேச்சுக்களைக் குழப்பிய பழி தன் மீது இல்லை, அது ஜே.வி.பியும் அது சார்ந்த அமைப்புக்களின் தலையிலுமே போய் விழுந்துவிட்டதாக தனக்குள் கருதிக்கொண்டு, பேச்சுக்கள் குழம்பியிருப்பதை கண்டும் காணாதிருக்கவே ஜனாதிபதி விரும்புகிறார்.

மறுபுறத்தில், கருணாவின் நடவடிக்கை ஜனாதிபதிக்கு வசதியாக இருப்பதாகவே தென்படுகின்றது.

கருணாவும்-புலிகளும் மாறி மாறி கிழக்கில் குழப்பங்களை புரிந்துகொள்வதன் மூலம், வடக்கு-கிழக்கு என்ற பதம் அரசியலில் உபயோகிக்கப்படுவதை இல்லாமற் செய்வதற்கு ஜனாதிபதி விரும்புவதாகத் தெரிகிறது.

எப்படியோ பௌத்தவாத அமைப்புக்கள் ஹெல உறுமயவையும் கூடவே, புலிகளுக்குச் சார்பான எதிர்க்கட்சியின் நாடாளுமன்றப் பலத்தையும் குழப்பியடித்ததில் ஜனாதிபதிக்கு மிகவும் உள்ளூர மகிழ்ச்சியே.

# போர்முனை நோக்கிய ஜனாதிபதியின் ஆர்வங்கள்

கடந்த 14ஆம் திகதியன்று நெதர்லாந்து நாட்டின் தூதுக்குழுவினரைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்புஎம்.பிக்கள், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவு எதுவும் இல்லாது தளம்பலான நிலையில் ஜனாதிபதி இருப்பதால் பேச்சுக்களை தொடர்ந்தும் முன்னெடுப்பது சிரமமான காரியமாக மாறிவிட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

பதிலுக்கு எதிர்க்கட்சியினரும், ஜனாதிபதி அடிக்கடி சமாதானம் தொடர்பில் நிலை தடுமாறுபவராக இருக்கிறார் என்றும், இவரால் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை தொடர முடியாது எனவும் கூறி இருக்கிறார்கள்.

பேச்சுக்களை மீண்டும் உடனடியாக தொடங்க வேண்டும். புலிகளை சமாதானப் பேச்சுக்களுக்குள் உட்படுத்த வேண்டும் என வெளியே ஜனாதிபதி கூறிக் கொண்டாலும், பேச்சுக்கள் மீண்டும் தொடங்கப்படுவதற்கான கால எல்லையை இழுத்தடிப்பதன் மூலம் யுத்தத்தை நோக்கிய ஆர்வங்களில் ஜனாதிபதி குறியாக இருப்பதாகவே தென்படுகிறது.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும்படி கடந்த 14ஆம் திகதியன்று நோர்வே தரப்பிடம் ஜனாதிபதியின் சமாதான செயலகத்தின் பணிப்பாளரான ஜயந்த தனபால கேட்டிருக்கிறார்.

பதிலுக்கு, நோர்வேயும் ஜனாதிபதியிடம் பேசப்போகும் விடயங்கள் தொடர்பாக எழுத்து மூல ஒப்புதலொன்றைக் கோரியிருக்கிறது. ஆனால் எந்தவித எழுத்து மூல உடன்பாடும் ஏற்பட்டதாக இதுவரை செய்திகள் வெளியாகாத நிலையில் நோர்வே தூதுவர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்பு திரும்பியிருக்கிறார்.

இதன் பின்பு,லண்டனில் அன்ரன் பாலசிங்கமும், எரிக் சொல்ஹெய்மும் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியிருக்கிறார்கள்.

**அரசு-புலிகள் முறுகல் நிலை**

மன்னாரில் இரு பெண் புலிகளை சோதனையிட முயன்ற படையினரை இடைமறித்த பெண்புலிகள், பெண் பொலிஸாரே சோதனையிட வேண்டும் என ஆட்சேபித்ததைத் தொடர்ந்து இந்தச் சர்ச்சையில் புலிகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டதாகக் கூறி பொதுமக்கள் பலர் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பில், கடந்த 14ஆம் திகதியன்று பெரும் எடுப்பிலான தேடுதல் நடவடிக்கை ஒன்றில் நகர்ப்பகுதி முழுவதும் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் எவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. கனரக ஆயுதங்களுடன் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் இந்தத் தேடுதலில் கூட்டாக இணைந்து சோதனை நடத்தியிருக்கிறார்கள்.

அத்துடன் கடற்படையினர் விதித்த மூன்று நிபந்தனைகளுக்கு புலிகள் இணங்கவில்லை என்ற காரணத்துக்காக முல்லைத்தீவில் இருந்து திருமலைக்கு புலிகளின் உறுப்பினர்கள்

நீதிமன்ற உத்தரவை ஹெல உறுமயவினர் மீறியமை காரணமாகவே 8ஆம் திகதிய நாடாளுமன்றத்தில் குழப்பங்கள் ஏற்பட்டதாகவும், பிக்குகளை பிக்குகளே கடத்துவதாகவும் பௌத்த அமைப்புக்கள் ஹெல உறுமயவைச் சாடியிருக்கின்றன.

தமிழ்த்தரப்பினரின் தன்னாட்சி அலகு தொடர்பான நாடாளுமன்ற உரையின்போது ஹெல உறுமயவினர் மௌனமாக இருந்ததைக்காரணம் காட்டி புலிகளுக்கு சார்பாக ஹெல உறுமய செயற்படுவதாகவும் பௌத்த அமைப்புக்கள் தமது கண்டனங்களை தெரிவித்திருக்கின்றன.

தேசிய சமாதானப் பேரவை இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தின் மீதான சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பாதிக்கும் வகையில்,நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்றிருப்பதால் இந்த நிலை மேலும் தொடராதிருப்பதை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென கருத்துத் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு கட்சிகளின் தலைவர்கள் இணைந்து மதிப்புக்குரிய பிரஜைகள் குழு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் சமாதானப் பேரவை கோரியுள்ளது.

மறுபுறத்தில், வெளிநாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காக அவசரமாக சமாதான முயற்சிகளில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில், உடனடியாகப் பேசுங்கள். இல்லாவிட்டால், கடன் இல்லையென வெளிநாடுகள் நிர்ப்பந்தித்திருப்பது புலிகளின் தனி நாட்டுக்கோரிக்கைக்கு வசதியாகப் போய்விடும்; எமக்கு கடன் வழங்கும் நாடுகளோ அமைப்புக்களோ எமது சமாதானப் பேச்சுக்களின் போக்கினை தீர்மானிக்க முடியாது என்று அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

பதிலுக்கு ஜே.பி.யினரும், தமிழ்க்கூட்டமைப்புடனான 10ஆம் திகதிய சந்திப்பில் ஜனாதிபதி ஒப்புக்கொண்ட விடயங்களை நிராகரித்திருக்கிறார்கள்.

தன்னாட்சி அடிப்படையிலான பேச்சுக்கு தயார் என ஜனாதிபதி கூறியிருப்பது அவரது தனிப்பட்ட கருத்து என்றும், இதுபற்றி தமக்கு எதையும் ஜனாதிபதி தெரியப்படுத்தவில்லை. என்றும் ஜே.வி.பியினர் தெரிவித்துவிட்டார்கள்.

பிந்திய நிலமைகளின் போக்கினை அவதானிக்கும்போது தமிழ்த் தேசத்தினை நோக்கிய ஒரு போருக்குக்காக ஜனாதிபதி நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதையே நிலைமைகள் வெளிப்படுத்துகின்றன.

வன்னியிலும்,கிழக்கிலும் படைத்தரப்புகளுடனான புலிகளின்

பாதுகாப்புக்களை பலப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

கொழும்பில் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கலாம் என புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ள தகவல்களை அடுத்து கொழும்பின் பல பகுதிகளிலும் தேடுதலை தீவிரப்படுத்துவதற்கான பணிகளை அரசு மேற்கொண்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி தொப்பிகல காட்டுப்பகுதியில் புலிகளுக்கிடையில் கடும்மோதல்கள் நிகழ்வதாகவும் பல சடலங்களை அரச படையினர் மீட்டுள்ளதாகவும் அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்ட செய்திகளை புலிகள் வன்மையாக கண்டித்திருக்கிறார்கள்.

தமக்கெதிராக கருணா குழுவை அரசு பயன்படுத்த முயற்சிக்குமாயின், பெரும் அழிவை சந்திக்க வேண்டிவரும் என விடுதலைப்புலிகள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நிலைமைகளைத் தொகுத்து நோக்கும்போது அரசைத் தொடர்ந்து நடத்துவதற்கான அனைத்து வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் ஜனாதிபதி தானாகவே கைவிட்டிருப்பதையே அண்மைக்கால நிலைமைகள் தெளிவுபடுத்துகின்றன.

அரசு எதிர்நோக்கியுள்ள பெரும்பான்மைப்பலத்தை நிரூபிப்பதற்கான நெருக்கடியை, தென்னிலங்கையின் தேசியவாத சிறுபான்மைக்கட்சிகள் புலிகளுக்கெதிரான தமது முன்னெடுப்புக்கு வசதியாக ஜனாதிபதியையும் இணங்க வைப்பதில் வெற்றி கண்டிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

அரசின் இருப்புக்கு நெருக்கடி

விடுதலைப்புலிகளுடன் குறைந்த பட்ச இணக்கத்துக்கான வாய்ப்புகளையும் கோட்டைவிட்ட நிலையில், அரசின் நிதித் தேவைக்காக வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு அரசின் நிதி நெருக்கடிகளைத் தீர்க்க ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சியே ஜனாதிபதியின் லண்டனுக்கான விஜயமாகும்.

லண்டனில், பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொது நலவாய அமைப்பின் விவகாரங்களுக்கான அமைச்சர் ஜக்குல்ரோவை ஜனாதிபதி சந்தித்து நீண்ட நேரம் உரையாடியுள்ளார்.

அது மட்டுமன்றி அமெரிக்கா, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளின் தூதுவர்களையும் ஜனாதிபதி லண்டனில் சந்தித்துப்பேசியுள்ளார்.

எப்படியோ தன் தலையின் மேல் பழிவிழாமல் சமாதானப் பேச்சுக்களை குழப்புவதற்கான முயற்சியில் ஜனாதிபதி வெற்றி கண்டுவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

பிந்தியதாக, லண்டனில் சந்தித்த அன்ரன் பாலசிங்கமும், எரிக் சொல்ஹெய்மும், நீண்ட நேரம் உரையாடியது பற்றிய செய்தி யுத்தத்துக்கு வழி சமைக்குமா இல்லை சமாதானப் பேச்சு தொடர வழியை ஏற்படுத்துமா என்பது அனேகமாக இன்னும் சில தினங்களில் தெரிந்துவிடும்.

-சாலையூரான்-

## வாசகர் இதயம் பேசுகிறது

*பொ.கிரிதரன் – விசுவமடு நாதன்குடியிருப்பு.*

நீ பிரசுரிக்கும் அனைத்து ஆக்கங்களும் தரமானவை அதிலும் பித்தன் பதில் கிரைம் டயறி ஆகியவை எனக்கு பிடித்தமானவை நீ இன்னும் கோடி ஆண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

*அ.நதியா – மணற்காடு.*

எனது அன்புள்ள சுடர்ஒளியே! உனக்கு எனது முதற்கண் வணக்கம்.

எனதுயிர் ஒளியே, உனது புதிய வாசகி எழுதிக்கொள்ளும் முதல் மடல் இது. உமது படைப்புக்கள் அனைத்தும் அதி உன்னதமான உயர்ந்த படைப்புகளாகும். கூடுதலாக அவை எமக்கு இன்பத்தைத் தரக்கூடிய வகையில் அமைந்துள்ளன. அதிலும் சிறுகதைகள், பித்தன் பதில்கள் சிறார்களின் கைவண்ணம், கவிதைப்புனல் போன்றன என்னை மிகவும் கவர்ந்துள்ளன. ஒளியே உன்பணி என்றென்றும் ஓங்கி வளர என் வாழ்த்துக்கள் பல கோடி. நன்றி.

*எஸ்.மீனா, நாரம்பிட்டி.*

அன்பின் சுடர் ஒளியே!

உனது ஆக்கங்கள் அனைத்தும் என்னை மிகவும் கவர்ந்தவை. கவிதைப்புனல் பகுதியில் நீ அனைவருடைய ஆக்கங்களுக்கும் சந்தர்ப்பம் கொடுப்பது வரவேற்கத் தக்க விடயம். மேலும் தேரடி அரட்டையை சில இதழ்களில் காணவில்லையே ஏன்? மசாமிக்ஸ், கவிதைப்புனல், சிறுகதைப் பகுதிகள் மிக அற்புதம் உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.



*மேரிஜா– புத்தூர்.*

எட்டுத்திசையும் சுடர் சுடர் விட்டுப்பிரகாசிக்கும் சுடர் ஒளியே! உனக்கு முதலில் வணக்கத்தைக் கூறிக் கொண்டுதொடங்கிறேன்.

நான் விரும்பிப்பார்க்கும் பத்திரிகைகளில் நீயும் ஒருத்தி. உன்பத்திரிகையில் என்னை மிகவும் கவர்ந்தவை பித்தன் பதில், சிறுகதை, கவிதைப்புனல் போன்றவை ஆகும். சுடரே உனது சேவை மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள். நன்றி.




### தேர்தலுக்கு முன் ஓட்டு தேர்தலுக்குப் பின் வேட்டு

''முன்பு அம்மாவின் ஆட்சியில் அரலி மரத்தின் கீழ் குடியிருந்த ஜொலிபப்பா இப்ப அடிக்கடி கால்சட்டையும் சேட்டுமாக காணப்படுகிறார். இப்ப ஆள் ஒரே குஷிதான் போலும்'' என்று கம்பளை ரத்னத்தாரிடம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார் நண்பர்.

''வாங்க மாப்பிளே... ஒரு மனுசன் கொஞ்சம் ஜொலியா இருக்கிறது. ஊட ஒங்களுக்கு புடிக்காது போல'' என்றார் கம்பளை ரத்னம்.

''அப்படி ஒன்றும் இல்ல. கொஞ்ச நாளாக சூம்பிப்போய் இருந்தார். அப்பன் பிள்ளை சண்டையால் களுத்துறை மெங்குஸ் மரங்கள் கூட காய்க்க மறுத்து விட்டனவாமே.''

''நீங்க சொல்லுறது நல்ல கதைதானே மாப்புள்ள, வீட்டுக்கு வீடு வாசல்படி. அது மாதிரித்தான் அப்பா பிள்ளை சண்டையும். லெக்ஷன் முடிந்ததோடு எல்லாம் சரியாகிவிட்டது'' என்றார் ரத்ன.

''நான் அந்த சண்டையைச் சொல்லவில்லை. இந்த ஜொலிபப்பா மீண்டும் சபைக்கு வருவதற்கு முன் களுத்துறை மாவட்டத்தில் உள்ள எல்லாத் தோட்டமக்களிட்டையும் போனார். தேர்தலின் பின் அப்பக்கமே போவதில்லை. ஆனால், அதற்குப் பின் தான் களுத்துறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் இடம் பெற்று வருவதாக குறை கூறுகின்றனர். ஒருவேளை பாதுகாப்புக்கு பிரதியாக செயல்படுவதால் இந்த மாற்றமோ என்று பேச்சு அடிபடுகிறதே'' என்றார் நண்பர்.

''என்ன மாப்புளே அப்படி கல்லைத் தூக்கிப் போட்டுப் புட்டீங்க. இது சிந்திக்க வேண்டிய விசயம்தான்''.... என்றார் கம்பளை ரத்ன.

''இல்லை இல்லை. தேர்தலுக்கு முன் வாக்குக் கேட்டார். தேர்தலுக்குப் பின் வாக்கு போட்டார்களா என்று தாக்கப்பட்டார்களாமே'' என்று நண்பர் மீண்டும் கேட்க ''*மாப்புளே அது எல்லாம் இப்ப விசாரணையில் இருக்கும் பார்ப்போம்*'' என்று விடை பெற்றார் கம்பளையார்.

### மலைக் கோட்டையில் குத்து வெட்டு

''ஆறுமுகசாமிக்கு அச்சுறுத்தலாக இருந்ததே அந்த மலைச்சந்திரனின் கோட்டை தான். இந்தப் பாவிகள் அதையும் கெடுத்துப் போட்டாங்களோ'' என்று கூறிக் கொண்டே வெளியே வந்தார் குளிர்பிரதேச சட்டவாதி.

''என்ன ஐயா தனியாக புலம்பிக் கொண்டு வருகின்றீர்கள்! என்ன நடந்தது? மேடையில் பேச மனப்பாடம் பண்ணிக் கொண்டு வாரீங்களே'' என்றார் நண்பர்.

''அடடா... வாங்க சார் உங்களுக்கும் மூக்கு வேர்த்து விட்டது போலும். அது தான் சரியான் நேரத்துக்கு வந்துவிட்டீர்கள்'' என்றார் சட்டவாதி.

''அப்படி என்ன விஷேசம் விரைவாகச் சொல்லுங்களே!'' என்று கிண்டினார் நண்பர்.

''ரொம்ப ரொம்ப விஷேசம் தான். இந்த மாகாண சபைத் தேர்தல் வந்தாலும் வந்தது. நேற்று சிரிச்சுப் பேதியவனும் இன்று முறைத்துக் கொண்டு போரான்'' என்றார் சட்டவாதி.

''இது வழமை தானே! தேர்தல் காலம் என்றால் அப்படித்தானே இருக்கும்? இது ஒன்றும் புதுமை இல்லையே?'' என்றார் நண்பர்.

''உங்களுக்கு இன்னும் புரியவில்லையே சார். எதிர்க்கட்சிக்காரர் முறைத்தால் அது வழமை. ஆனால், ஒரே கட்சிக்குள் குஷ்தி அடிக்கிறானுங்களே அது தானே வம்பாப் போச்சு'' என்றார்.

''அது சரி உள்வீட்டுக்காரர்கள் ஏன் மோதிக் கொள்கின்றனர்?'' என்றார் நண்பர்.

''அப்படிக் கேளுங்கள் விடயத்தை. நம்ப சிவத்தார் வசிக்கும் கொட்டக்கலையில் தான் அந்த கரும்பண்ணைச் சாமியாரும் இருக்கின்றாராம். சிவத்தாருக்கும் கருப்பாருக்கும் ஏற்கனவே ஒத்து வருவதில்லையாம். அடிக்கடி மோதல் ஏற்பட்டுள்ளதாம். பட்டியலில் எல்லோரது பெயர்களும் இடம்பெற்றாலும் வரப்போவது இருவரோ மூவரோதான். இதற்காக எல்லோரும் ஏன் கஷ்டப்பட வேண்டும் என்று நினைத்த ஒருவர் ஆறுமுகசாமியின் ஆட்களுடன் கூடி அவர்களுக்கு ஆதரவு திரட்டினாராம். இது எப்படியோ கட்சிக்குத் தெரிந்து விட்டதாம்.

இந்த மனிசன் யாருக்காவது வேலை செய்து தொலையட்டும். உண்மையாகவே கட்சிக்கு விசுவாசமானவர்களுக்கு ஆதரவு திரட்டும் இடத்துக்கு ஏன் வரவேண்டும்.

வந்தவர் சும்மா இருக்க வேண்டாமா? மேடையில் ஏறிப் பேசவும் வேண்டும் என்று அடம்பிடித்தாராம்.

இதனால் ஆத்திரம் அடைந்தவர்கள் கள்ளத்தனமாக ஊரானுக்கு சப்போட்பண்ணிப் போட்டு இப்ப வந்து மேடையிலயும் பேச வாரியா என்று மொத்து மொத்தென்று சாத்தி விட்டனராம்'' என்றார் சட்டவாதி.

''இப்படியான புல்லுருவிகளை எல்லாம் நம்பித்தான் இந்த மலைச் சந்திரன் வீணாப் போகப் போகுது. என்ன செய்வது? மலைக் கோட்டைக்குள் குத்து வெட்டு என்பதால் மலை உச்சியில் இருக்கும் ஆறுமுக சாமியின் அடியார்களுக்கு கொண்டாட்டமாகிவிட்டதாம்.

A/L Exam அடுத்து என்ன?... ஆங்கிலம் கற்கலாமே
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி ELI யின் இலவச தபால் மூல ஆங்கில பாட நெறிகள்
ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க, 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்
* ஆங்கிலத்தை ஆரம்பம் முதல் இலகுவான முறையில் வீட்டில் இருந்த வாரே கற்கமுடியும்.
* தமிழ் விளக்கத்தில் கூடிய பாடத் தொகுதிகள்.


அழகிய கீடெக் ஒன்றுடன்
2500 சொற்களுக்கும் மேல் உள்ளடக்கப்பட்ட
30 Days Easy Way English புத்தகம் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு ₹.50/– பெறுமதியான 8 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. Box 083, Kandy.
Tel No.: 0777 802849, 0777 220002

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)
இளம் சமுதாயத்திருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)
பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்
Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)
மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.
வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு
எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
கொழும்பில்...
ஜுன் 24 - 28 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205
கல்முனையில்..
ஜுலை 03, 04 ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205
வவுனியாவில்...
ஜுலை 10, 11, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205
யாழ்ப்பாணத்தில்...
ஜுலை 13 - 28 வரை
A.S.N. கற்றுலாவிடுதி
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399
கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்
தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்
பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,
வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்
ரூபா.250/– தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/–
தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்
மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 250/–

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு–11.
தொலைபேசி : 2421398

ஊடகமே உலகம்
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
DIPLOMA IN MASS MEDIA
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. in. M.M. (Sri Lanka)
DIPLOMA IN BROADCASTING
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. in. B.C. (Sri Lanka)
சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்
தபால் மூலம்
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி,
உடனே என்னை வந்து சந்தியுங்கள்

K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.
எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, கால தாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.
ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.
RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்
(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)

சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.
நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூல ரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.
500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.
வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.
Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.

நூலகம்
யாழ்ப்பாணம்

சுடர் ஒளி
ஜூன் 28 — ஜூலை 04, 2004
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்.

அரசுத் தரப்பினர் நாடாளுமன்றத்தில் புரிந்து வரும் பயங்கரவாதச் செயல்கள் மற்றும் அராஜகங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் மகஜர் ஒன்றில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 114 எம்.பிக்கள் கைச்சாத்திட்டு சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த இருவர் இன்னும் நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை. இவர்களும் கையொப்பமிடும் பட்சத்தில் இந்த எண்ணிக்கை 116 ஆக உயர்ந்துவிடும்.

நாடாளுமன்றத்தில் உள்ள மொத்த எம்.பிக்களின் எண்ணிக்கை 225. இவர்களில் சபாநாயகரை விட்டால் 224 பேர். ஆகவே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு 108 பேர் மட்டுமே தற்பொழுது இருந்து வருகிறார்கள். எனவே தற்பொழுது நாட்டை ஆளுவது ஒரு சிறுபான்மை அரசு என்பது உறுதியாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் எந்த ஒரு தீர்மானத்தையும் தோற்கடிக்கும் நிலையில் எதிர்க்கட்சியினர் இருந்து வருகிறார்கள்.

நாடாளுமன்றம் கூடும் ஒவ்வொரு தடவையும் ஆளும் கட்சியினர் குழப்பம் விளைவிப்பதும், நாடாளுமன்றத்தில் தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படுவதை தவிர்க்கும் நோக்கத்துடன் நாடாளுமன்றக் கூட்டத்தை நீண்ட நாட்களுக்கு ஒத்தி வைக்கச் செய்வதும் இதனால் தான்.

இத்தகைய நிலையில் தான் அரசுக்கு எதிரான பெரும்பான்மைக் கூட்டை உடைக்கும் முயற்சியில் ஜனாதிபதியும், ஆளும் தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றம் ஜூலை 20 ஆம் திகதி மீண்டும் கூட இருக்கிறது. அதற்கு முன்பு எதிர்க்கட்சியினரின் கூட்டை உடைப்பதில் இவர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

பொதுத்தேர்தலில் 9 ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தில் பக்கம் சாராக் கொள்கையைக் கடைப்பிடிக்க முடிவு செய்திருந்தது. அரசு கொண்டுவரும் தனக்கு நியாயமானது என்று தென்படும் தீர்மானங்களை ஆதரிக்கவும் அது திட்டமிட்டிருந்தது.

ஆனால், சபாநாயகர் தெரிவின் போதும் இதன் உறுப்பினர் ஒருவரின் சத்தியப்பிரமாணத்திலும் ஆளும் கட்சியினர் நடந்து கொண்ட மிக்வும் கீழ்த்தரமான முறையினால் வேறு வழி இன்றி அரசுக்கு எதிரான கூட்டுக்குள் ஹெல உறுமய இணைந்து கொண்டுவிட்டது. தேசியப்பிரச்சினையான இனப்பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகளில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் ஓரளவு நெருக்கமான உடன்பாடுகள் இருந்தபோதிலும் நாடாளுமன்றச் சம்பவங்கள் ஹெல உறுமயவை விலக்கி வைத்துவிட்டன.

அதே போன்றுதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும். முஸ்லிம் காங்கிரஸை பிளவுபடுத்தும் முயற்சி, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட குமாரி கூரே விவகாரம் ஆகியவையால் முஸ்லிம் காங்கிரஸ், ஆளும் கட்சியுடன் சேரும் நிலைமை அறவே இல்லை.

தமிழ் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறலாம் என்ற நப்பாசையில் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி அவசரமாக ஆரம்பித்தார். அதுவும் தற்பொழுது ஆமை வேகத்திலேயே நகர்ந்து கொண்டிருக்கிறது. அரசை எதிர்க்கும் தமிழ் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இது வரை தென்படவில்லை. கருணா விவகாரத்தைப் பயன்படுத்தி தமிழ் கூட்டமைப்பை இழுக்கும் முயற்சியும் கைகூடப்போவதில்லை.

இத்தகைய நிலையில் தான் இ.தொ.காவுக்கு வலை வீசும் முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இ.தொ.காவின் நிபந்தனைகள் ஏற்கக்கூடியவையாக இல்லாததால் அதுவும் எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று தெரியவில்லை.

அதே சமயம் அரசின் கெடுபிடிப் போக்குகள் அதிகரித்து வருகின்றன. முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்காவை கைது செய்யும் முயற்சியும் இத்தகையதொன்றே.

அறுதிப்பெரும்பான்மையுடன் இருந்த, ஐக்கிய தேசிய முன்னணி அரசை அதன் ஆட்சிக்காலம் முடிவடைய முன்னமே கலைத்தவர் ஜனாதிபதி. தற்பொழுது அறுதிப்பெரும்பான்மை இல்லாத ஒரு நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு குறுக்கு பாதையில் பயணம் செய்யும் போக்கைக் கடைப்பிடித்து நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி வருகின்றார். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்.

# அலி ஸாகிர் பலிக்கடா!!

கருணா விவகாரம் கடந்த வாரம் கொழும்பு அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

கருணாவும் அவரது சகாக்களும் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்குத் தப்பி வருவதற்கு உதவிய ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பி அலி ஸாகிர் மௌலானா தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு வெளிநாடு சென்று விட்டார். கருணாவுக்கு தாம் உதவி செய்த விவகாரம் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைக்குத் தெரியாது என்று அவர் கூறுகிறார். ஆனால், இந்த விவகாரத்தில் அவர் பலிக்கடா ஆகிவிட்டார் என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் இருந்து கருணாவை வெளியேற்றும் போரை புலிகள் ஆரம்பித்த சமயம் கருணாவும் அவரது சகாக்களும் மட்டக்களப்பில் இருந்து வெளியேறி கொழும்புக்கு வந்த சமயம் அரசியல் வாதி ஒருவர் இவர்களுக்கு உதவினார் என்று ஏற்கனவே தகவல்கள் கசிந்திருந்தன. யார் அந்த அரசியல்வாதி என்பது தற்பொழுது தான் வெளிவந்து பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருக்கிறது. கருணா காலத்தில் மட்டக்களப்பு -- அம்பாறை மகளிர் விசேட தளபதியாக இருந்தவர் நிலாவினி. கருணாவுடன் கொழும்புக்குத் தப்பிச் சென்று மீண்டும் மட்டக்களப்பு திரும்பி விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட நிலாவினி மூலமே அலி ஸாகிர் மௌலானா தான் அந்த அரசியல்வாதி என்பது வெளியாகி இருக்கிறது.

### கருணாவின் வெளியேற்றம்

ஏப்ரல் 11ஆம் திகதி கருணாவுடன் நிலாவினியும் மற்ற மூன்று பெண் போராளிகளான தீந்தமிழ், லாவண்யா, பிரேமினி ஆகியோரும் கருணாவின் பேச்சாளர் வரதனும் மற்றும் நெருங்கிய சகாக்கள் 15 பேரும் மட்டக்களப்பு, குடும்பி மலையில் உள்ள கருணாவின் முகாமில் இருந்த புறப்பட்டனர்.



நிலாவினி

புலி பாய்ந்த கல்வீதி, பொண்டுகள் சேனை வீதி, நாலாம் முறச்சந்தி வீதி ஊடாக அவர்கள் கொழும்பு வீதியை அடைந்தனர். அங்கு வாகனங்களுடன் வந்த அலிசாகிர் மௌலானா பொலிஸ் பாதுகாவலுடன் இவர்களை கொழும்புக்கு அழைத்துச் சென்றார்.

இந்த விவகாரம் வெளி வந்தபோது கருணா தப்பிச் செல்வதற்கு தாம் உதவியதை அலி ஸாகிர் மௌலானா ஏற்றுக்கொண்டு விட்டார். தாம் கருணாவின் பாலியநண்பன் என்றும் தாம் உதவிய விவகாரம் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைக்குத் தெரியாது என்றும் அவர் கூறி இருக்கிறார்.

இந்தப் பிரச்சினையில் இரு விடயங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன. கிழக்கில் பல குழப்பங்களுக்குக் காரணமாக இருந்த கருணா படையினரின் பாதுகாப்பில் தான் இருந்தார், இருக்கிறார் என்பது ஒன்று. மற்றது இந்த விவகாரத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு உதவப்போய் அலிஸாகிர் மௌலானா தனது எம்.பி பதவியை இழக்க வேண்டி ஏற்பட்டது என்பது. அதுமட்டும் அல்ல அவர் வெளிநாடு செல்லவும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

### பின்னணி என்ன?

தனிப்பட்ட ஓர் ஆளாக தனிப்பட்ட ஓர் எம்.பி என்ற முறையில் அலிஸாகிர் மௌலானா இந்த வேலையைச் செய்திருக்க முடியாது. கட்சித் தலைவர் ரணிலின் ஆசீர்வாத்துடனும் ஒப்புதலுடனும் இந்த விடயத்தில் அவர் செயற்பட்டார் என்பது உறுதியாகி இருக்கிறது.

ஏப்ரல் முதல் வாரத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் இதனை கோடிகாட்டுகின்றன.

பொதுத்தேர்தல் நடந்து ஏப்ரல் 2 ஆம் திகதி. எந்தக் கட்சியும் தனித்து அரசமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. மட்டக்களப்பில் இருந்து தெரிவாகிய தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் நால்வரும் கருணாவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள் என்ற செய்தி அப்பொழுது வெளியாகி இருந்தது. ஏப்ரல் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் வீட்டில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் கூட்டத்தில் மேற்படி நான்கு எம்.பிக்களும் பங்குபற்றினர். இந்த சந்திப்பு முடிவடைந்தவுடன் இவர்கள் கொழும்பில் தங்கவிடப்படாமல் படையினரால் பலவந்தமாக மட்டக்களப்புக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர்.

ஐக்கிய தேசியக்கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பும் தமது தேசிய பட்டியல் எம்.பிக்களின் விவரத்தை ஏப்ரல் 9 ஆம் திகதியளவில் தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தன. கிழக்கில் கருணா குழு மீதான தாக்குதலை ஏப்ரல் 10 ஆம் திகதி புலிகள் ஆரம்பித்திருந்தனர்.

ஏப்ரல் 11 இல் கருணா தனது குழுவினருடன் கிழக்கிலிருந்து கொழும்புக்குத் தப்பிச்சென்றனர்.

இவை தான் நடந்து முடிந்த சம்பவங்களின் வரிசை.

கருணாவும் அந்த நான்கு எம்.பிக்களும் தமது செல்வாக்கின் கீழ் இருப்பதாக காட்டிக் கொண்டது மூலமே அலிஸாகிர் மௌலானா தேசியப்பட்டியல் எம்.பி. பதவியைப் பெற முடிந்தது என்று நம்பப்படுகிறது.

கட்சியின் மூத்த உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர்கள் திலக்மாரப்பன, டிரோன் பெர்னாண்டோ, ஏ.எச்.எம் அஸ்வர் போன்றோருக்கும் கூட கிடைக்காத தேசியப்பட்டியல் எம்.பி.பதவி அலி ஸாகிர் மௌலானாவுக்குக் கிடைத்ததன் ரகசியம் இது தான்.

கொழும்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தின் பின்பு இந்த நான்கு எம்.பிக்களையும் மட்டக்களப்புக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளையும் அலிஸாகிர் மௌலானாவே செய்திருந்தார் என்றும் நம்பப்படுகிறது.

கருணாவுக்கு உதவிய விவகாரத்தில் ஐக்கிய தேசியக்கட்சித் தலைமைக்கு நெருக்கடி ஏற்படாமல் காப்பாற்றுவதற்காகவே அவரை இராஜினாமாச் செய்யும்படி கட்சி வட்டாரங்கள் வற்புறுத்தின என்றும் அதை அடுத்தே வேறு வழி இன்றி அவர் தமது இராஜினாமாவைச் சமர்ப்பித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கருணாவுக்கு உதவிய விவகாரம் பூதாகரமானதை அடுத்து தனது எம்.பி. பதவியைத் துறந்தது மூலம் கட்சியின் தலைமைக்கு நெருக்கடி ஏற்படாமல் காப்பாற்றி இருக்கிறார் அலிஸாகிர் மௌலானா.

### நம்பிக்கையை உடைத்த கருணா விவகாரம்

புதிதாகப் பதவி ஏற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசு மீது புலிகள் நம்பிக்கை வைத்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தடங்கலாக இருந்து வரும் விவகாரங்களில் கருணா விவகாரமும் ஒன்று.

தமிழ் தேசியத்துக்கு மாபெரும் துரோகம் இழைத்த கருணாவுக்கு சந்திரிகா அரசு பாதுகாப்பளித்து வருகிறது என்று புலிகள் குற்றஞ்சாட்டி வந்தனர். அது தற்பொழுது நிரூபிக்கப்பட்டு விட்டது.

படையினரின் பாதுகாப்புடன் கருணா கொழும்பு வந்தார், கொழும்பில் தங்கி இருந்தார் என்ற விவகாரம் அரசுக்குப் பெரும் நெருக்கடியை அளித்துவிடுகிறது. படையினரின் பாதுகாப்புடன் கருணா கொழும்பு வந்ததும், தங்கி இருந்ததும் அரசுக்குத் தெரியாமல் இருக்க முடியாது.

அரசும், அரச படைகளும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் கருணா விவகாரத்தில் இப்படி நடந்துகொண்டிருப்பது தமிழர் தரப்புக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

சிங்கள பேரினவாதக்கட்சிகள் இந்த விடயத்தை தமது அரசியல் லாபத்துக்காக எவ்வாறு பயன்படுத்தி இருக்கின்றன என்பது வெட்டவெளிச்சமாகி இருக்கிறது.

கருணா விவகாரத்தில் அரச படைகள் சம்பந்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து விசாரணை செய்யப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கருணா விவகாரத்தில் படையினரின் தொடர்பு கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவையெல்லாம் வெறும் பம்மாத்துத் தான்.

கருணா விவகாரத்தைப் பயன்படுத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவதை தடுத்து விடலாம் என்று அரசு நம்புவதாகத் தெரிகிறது.

புலிகள் மத்தியில் பிளவை ஏற்படுத்தி சமாதானப் பேச்சைக் குழப்பியடிப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டம் என்றும் கருணா விவகாரத்தில் முக்கிய சூத்திரதாரி ரணில் விக்கிரமசிங்க தான் என்றும் மங்கள முனசிங்க குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

### கருணா எங்கே?

தமிழ்த்தேசியத்துக்கும், தமிழ் மக்களுக்கும் மாபெரும் துரோகம் இழைத்த கருணா தற்பொழுது எங்கு இருக்கிறார் என்பது தெரியாது. அவரை கொழும்புக்கு அழைத்து வந்த பின்பு அவருடன் தொடர்பு எதையும் வைத்துக்கொள்ளவில்லை என்கிறார் அலஸாகிர் மௌலானா. அப்படியானால் கருணா எங்கே என்பதே இன்று எழும் கேள்வி.



அலிஸாகிர் மௌலானா

கருணா தேசிய ஜனநாயக நீரோட்டத்துக்கு வருவதற்கு விரும்புகிறார் என்று ஈ.பி.டி.பி செயலாளர்நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் பின்பு புலிகளைத் தவிர, தாங்கள் அனைவரும் தேசிய ஜனநாயக நீரோட்டத்துக்குள் வந்தது போன்று கடந்த அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் கருணாவும் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்ள விரும்புகிறார் என்று டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸி தமிழோசைக்குத் தெரிவித்துள்ளார். இந்திய —இலங்கை ஒப்பந்தமும் பிரபா—ரணில் புரிந்துணர்வு ஒப்பந்தமும் 50 ஆண்டுகளுக்கு மேலான தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு என்று இவர்கள் கருதுகிறார்கள் போலும்.

### யுத்தம் ஒன்றுக்கு தயாராகும் ஜனாதிபதி

புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட கருணாவை பாதுகாப்பாக ஒளித்து வைத்துக்கொண்டு யுத்தம் ஒன்றுக்கான முயற்சியில் ஜனாதிபதி இறங்கி இருக்கிறார் என்று புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஷ் குற்றஞ்சாட்டி இருக்கிறார். கிழக்கில் இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான மாதாந்த சந்திப்பும் ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

யுத்தமா அல்லது சமாதானமா என்று அரசு முடிவு செய்ய வேண்டும். அரசு இரட்டை வேடம் ஆடுகிறது என்று புலிகள் குற்றஞ்சாட்டி உள்ளனர். ஆகவே கருணா விவகாரத்தை தென்னிலங்கை பேரினவாதம் கையாண்ட முறையே தற்போதைய நெருக்கடிக்கு எல்லாம் காரணம்.

–சஞ்சாரன்–

# மனதில் உறுதி வேண்டும்

பொழுது சாய்ந்து விட்டது. இருள் சூழ்ந்து வருகின்ற இந்த இராப்பொழுதில் வித்தியாசம் இருந்தது. இதுவரை வந்து போன இரவுகள் போன்று அல்லாது மனதிலே ஒரு வித பதற்றத்தையும் தவிப்பையும் உணர்ந்தாள் கிருபா.

வீட்டின் சூழ்நிலையும் மிகவும் அசாதாரணமாகவே இருந்தது. இது மாதிரியான ஒரு சூழ்நிலையை அவள் அனுபவித்தது கிடையாது. பெற்றோரின் அரவணைப்பிலும், அன்பு மழையிலும் இத்தனை வயதுவரை இல்லாதிருந்த மாதிரியான இன்றைய இந்த சூழ்நிலையின் அழுத்தத்தில் கொஞ்சம் அதிகமாகவே திணறிப் போய் குழப்பத்துடன் இருக்கிறாள்.

நிலா இல்லாத இந்த இரவில், கிருபா தன் வாழ்வில் ஒளியேற்றப்புறப்படத் தயாராகிக்கொண்டிருக்கிறாள்.

உச்சில் புலனேஸ்வரி அம்மன் ஆலய, குளத்தடி ஆலமரத்தடியில் ஆனந்தன் அவளுக்காகக் காத்து நிற்பான்.

கிருபா கடிகாரத்தைப் பார்த்தாள். தமிழீழ நேரம் ஒன்பதைத் தாண்டிவிட்டது. ஊரே மனித நடமாட்டமற்ற மயான பூமியாகக்கிடந்தது. போர் நிறுத்த ஒப்பந்தக்காலம் ஆதலினால் சாத்தான்களின் பயம் இல்லை.

நாய்கள் மட்டும் ஆங்காங்கே எப்போதாவது குரைப்பது தொலைவில் கேட்கிறது. அது அவளுக்கு பழக்கப்பட்டுவிட்டதால் அவள் ஒன்றும் அச்சம் கொள்ளவில்லை.

அம்மாவின் துணையும், டோச்சுமின்றி இரவில் வெளியே செல்லப் பயப்படுகின்ற அவள் இன்னும் சிறிது நேரத்தில், ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாது கருமைத்திரை விழுந்திருக்கும் காரிருளில் அம்மன் கோயில் வரை தனியே போகப் போகிறாள். கூப்பிடு தூரம் தான் என்றாலும் இந்த நேரத்தில் பெண்மைக்குரிய பயம் எழவே செய்தது.

ஆனந்தன் அவளது வீட்டு வாசல் வரை வருவதாகக் கூறியபோதும் அவள் தான், யாராவது பார்த்துவிட்டால் ஆபத்து என்று மறுத்துவிட்டாள்.

இப்போது பயமாகத்தானிருந்தது. அவள் தனது அறைக்கு வந்து சத்தமின்றி ஒரு சிறிய பையை எடுத்து, இரண்டொரு மாற்று உடுப்புகளை மட்டும் எடுத்து அதனுள் வைத்தாள்.

கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். மனதின் இருள் முகத்தில் அப்பிக் கிடந்தது. கிருபாவுக்கு நிமிடங்கள் யுகங்களாகக் கடந்துகொண்டிருந்தன. அப்பாவும் அம்மாவும் எப்போ தூங்குவார்கள் என்று மனது படபடத்தது.

வெளியே வந்து அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தை விரித்தாள். அம்மா சாப்பிட அழைத்தாள். கிருபா இன்னமும் லேசாய் குனிந்த தலையோடு புத்தகத்தில் ஆழ்ந்திருப்பது போல அமர்ந்திருந்தாள். அம்மாவின் அழைப்பு மறுபடியும். இம்முறை திரும்பிப்பார்க்காமலே ''பசியில்லை'' என்று கூறினாள். ''கொஞ்ச மாஎண்டாலும் சாப்பிடு பிள்ளை'' என்று அம்மாவின் அன்பான வேண்டுதலில் மனது புரள்கிறது.

சாப்பிட்டால் தான் அம்மா படுப்பா என்ற எண்ணமும், அம்மாவின் கையால் சாப்பிடப்போகும் கடைசிச் சாப்பாடாக இருக்கலாம் என்ற நினைப்பும் அவளை எழவைத்தன.

உணவு பரிமாறப்படுகிறது. பசி இல்லை. அவளுக்கு அழுகை அழுகையாக வருகிறது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு இயல்பாக இருப்பதாகக் காட்ட முயன்றாள்.

''கறி ருசியே பிள்ளை?'' அம்மாவுக்கு தன் சமையலுக்கு எப்போதும் யாராவது சான்று பகரவேண்டும். அம்மாவின் கேள்வியில் எண்ண ஓட்டங்கள் கலைந்துபோக, 'ம்' என்றாள் கிருபா. எண்ணக் குமுறலில் சொற்கள் புதையுண்டு போயின.

அவளது ஒவ்வொரு உணர்வலையின் அசைவுகளையும் யாரும் கவனித்துவிடக் கூடாது என்று அவதானமாக இருந்தாள்.

மனதின் பரபரப்பை மறைத்தபடி, மீண்டும் வந்தமர்ந்த கிருபா சாதுப்பிள்ளை போல மீண்டும் புத்தகத்துள் தஞ்சமடைந்தாள். அந்த சூழ்நிலையில் அவளது மனதில் எழக்கூடிய உடைவுகள், சோகங்கள், ஏக்கங்கள், அனைத்தையும் எதிர்க்கும் ஓர் உறைவு அவளிடமிருந்தது.

பின்னால் சற்றுத் தொலைவில் அம்மா அமர்ந்திருப்பதை கிருபாவால் உணரமுடிகிறது. எனினும் கடைசி நிமிட தரிசிப்புகளின் தாக்கங்கள் மனதை உடைத்துவிடக் கூடும் என்பதால் திரும்பிப் பார்க்காதிருந்தாள். வழமைபோல் அம்மாவின் மடியில் தலைவைத்தபடி உரையாட மனதில் உந்துதல்கள் கிளர்ந்தெழுந்தும் கூட மனம் இயல்பிலேயே அவற்றைத் தவிர்க்க விரும்பியது.

****

காதல் என்பது பருவத்தில் வருவது தான், எனினும் அது எப்பொழுதும் சொல்லிக் கொண்டு வருவதில்லை. அவளுக்கு அது மலர்ந்த வேளையில் மனதில் ஆனந்தனே மையப்படுத்தப்பட்டான்.

பல்கலைக்கழகத்தில் தொடங்கிய அறிமுகம், வேலையற்ற பட்டதாரிகளாக நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்று வருகின்ற போதும் தொடர்ந்து, அது இனிமையானதொரு நட்பாகி பின்னர் அதுவே திசைமாறி காதலாய் உருக்கொண்டது.

அந்த வேளையில் தான் அவன் ஒருநாள் இங்கிதமாக அவளிடம் நேராக அணுகினான். ''கிருபா, என்னையும் மீறி என்மனதில் எழுந்துவிட்ட எண்ணத்தை இனியும் உங்களிடம் கூறாமலிருக்க முடியாது. வாழ்க்கைப் பயணத்தில் என் துணையாக உங்களோடு இணைந்து இறுதிவரை வாழ விரும்புகிறேன்.''

அவள் எதிர்பார்த்த ஒன்றுதான்? எனினும் அவன் கேட்டபோது அவளது கண்கள் பனித்தன.

''பதில் எதுவாக இருந்தாலும் சொல்லலாம். உங்கள் மன எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுப்பேன். இது வெறும் விண்ணப்பம் தான். ஏற்பதும், மறுப்பதும் உங்கள் கையில் தான்... என்னை பிடிக்கவில்லையா?''

அவள் அவசரமாகத் தலையாட்டினாள்.

''எந்தப் பெண்ணுக்குத்தான் உங்களைப் பிடிக்காது? சமுதாய விதிகளின் தாக்கங்களைத் தெரிந்திருந்ததால், ஆரம்பத்தில் எனக்கு உங்களைக் காதலிக்கும் எண்ணம் வரவில்லை. சாதி என்னும் சாத்தான் என் மனதிலும் பூச்சாண்டி காட்டிக்கொண்டுதான் இருந்தது. உங்களுடன் பழகிய போது, உங்கள் எளிமை, ஆற்றல், சாந்தமான குணம், பிறரை மதிக்கும் மனப்பாங்கு, ஆண்மை எல்லாமே எனக்குப் பிடித்து விட்டன. நானும் என்மனதை ஏற்கெனவே உங்களிடம் இழந்துவிட்டேன்.''

அவளது வார்த்தைகள் தந்த இனிமையில் அந்தக்கணம் சொர்க்கம் காலடியில் தெரிந்தது. அவன் பூரிப்பில் ஒரு கணம் உலகையே மறந்தான்.

''கிருபா முதலில் நான் உங்கள் அழகால் கவரப்பட்டேன். பழகியபோது உங்கள் இயல்பால், பண்பால், அன்பால் கவரப்பட்டேன். ஆனாலும் எமக்கிடையே இருந்த சாதிபேதங்களின் தாழ்வு சிக்கலால் மனதில் தோன்றியதைச் சொல்ல முடியாமல் தவித்தேன். இப்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா?''

ஆனந்தனின் வார்த்தைகளில் அவள் பிறவிப்பயனை அடைந்துவிட்டதான மகிழ்வில் திழைத்தாள். எனினும் சந்தோசம் நீடிக்க முடியாதபடி தடைகள் ஏற்பட்டன.


ஆனந்தன் வறிய குடும்பத்தவன், சாதியிலும் மாறுபட்டவன் என்பதையெல்லாம் புறம் தள்ளிவிட்டு அவள் மனதில் காதல் கனிந்தபோது, அதற்கான எதிர்ப்பு அலைகளும் வீறு கொண்டெழ அவளது காதலின் வேகமும் ஆர்முடுகலடைந்தது.

வீட்டில் விடயம் கசிந்த பின்னர் இப்போதெல்லாம் கிருபா, தனது மனப்பரப்பில் ஒரு கோடையின் வெம்மை இறுகத் தொடங்கியதையும், இடையிடையே தென்றலாக வந்து வீசும் இனிய காதல் நினைவுகள் மனதில் கோலமிட்டு அவ்வெம்மையைத்தணிப்பதையும் உணர்ந்தாள்.

சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்பதனால், ஆனந்தனின் வீட்டிலும் அப்படியொன்றும் ஆதரவு அலை வீசவில்லை. எமது குடும்பம் முன்னேற வேண்டுமானால் தமது உறவில் தான் செய்ய வேண்டும் என அவனது அப்பா தனது நியாயத்தை எடுத்துரைத்தார். இந்தக் காதலின் எதிர்காலம் என்னவாகப் போகிறதோ என்று மனது சஞ்சலம் பட்டுக்கொண்டே இருந்தது. திக்குத் தெரியாத காட்டில் விடப்பட்ட சிறு குழந்தைபோல அவள், என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தாள்.

இதற்கிடையில் பெற்றோர் அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கவே அவள் முழுவதுமாய் உடைய ஆரம்பித்தாள். மேலும் அவள் விரும்பியவனைக் கைப்பிடிக்கவிடாமல் வீட்டில் அவளுக்கு பல உபதேசங்கள் இலவசமாக வாரி வழங்கப்பட்டன. அவளது உறுதியைக் கண்ணுற்றதும், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் என்று அவள் மனதை உடைய வைத்தார்கள்.

''படிச்சாப் போல என்ன? அவனை இன்னார் என்று அறிந்த பின்னுமா மனம் வைத்தாய்? எங்கட குடும்பத்திற்கும் அவங்கட குடும்பத்திற்கும் ஏணிவைச்சாலும் எட்டாது. நாளைக்கு எந்த முகத்தோட வாழப்போறாய்? உன்னை நடுத் தெருவில் விட்டுட்டுத்தான் போவான்?' இப்ப நாங்கள் பேசுற பகுதி நல்ல இடம். நல்ல உத்தியோகம், சம்பளம், வீட்டிலும் பொறுப்பு இல்லை'' அம்மா அடுக்கிக் கொண்டே போனாள்.




\- ச.முருகானந்தன் -

''தாயக விடுதலைக்குப் போராடுகிற இந்தக் காலகட்டத்தில் கூட எங்களுக்கிடையில சின்னன் பெரிசு பார்க்கிறது வேடிக்கை தானம்மா. அவருடைய படிப்புக்கு சொந்தத்திலேயே நான் நீ என்று போட்டி போடுகினம். அவருக்குக் கிடைக்க இருக்கிற பெரிய சீதனத்தை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு காதலிச்சவளையே கைபிடிக்க வேணும் என்று நினைக்கிற பெரிய மனசு அவருக்கு..'' கிருபாவும் தனது பக்க வாதத்தை முன் வைத்தாள்.

அவளது பேச்சுக்கள் வீட்டில் எடுபடவில்லை. பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று நிராகரித்தனர்.

''அம்மா, மனசைப் புரிஞ்ச ஒருவர் கூட வாழுற வாழ்க்கைக்கு நிகராக வேற எதுவும் வராதம்மா'' கிருபா இறைஞ்சினாள்.

''நாங்க பேசுறவர் கூட நல்லவர் தான். உன்னுடைய மனசைப் புரிஞ்சு நடக்கக் கூடியவர் என்று நம்பு பிள்ளை, எங்களையும் மீறி நீ வேற ஏதாவது முடிவு எடுத்தால், எங்களை உயிரோடை காணமாட்டாய்'' காலம் காலமாகத் தொடரும் ஆயுதத்தையே அம்மாவும் பிரயோகித்தாள்.

கிருபாவுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இப்படித்தான் முடிவு இருக்கப் போகிறது என்று தெரிந்துவிட்டால்கூட, சூழும் இறுக்கங்களிலிருந்து ஒரு சுதாகரிப்பு செய்து கொள்ள முடியும் என்று தோன்றியது. வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவங்கள் திருப்புமுனையாக மாறி மனித மனசை எப்படி எல்லாமோ மாற்றி விடுவதுண்டு. மனிதன் நினைப்பதெல்லாம் இலகுவில் நிறைவேறி விடுவதில்லை தானே?

கிருபா ஆனந்தனுக்கு நிலமையை விளக்கி கடிதம் வரைந்தாள். எல்லாக் கட்டுக்களையும் உடைத்துக்கொண்டு வெளியேறிட ஊக்கமளித்த அவனது பதில் கடிதம் வந்தபோது உற்சாகத்தில் அவளது மனது குதூகலித்தது. கடிதத்தைக் கைகள் தொட்டபோது அவனையே தழுவியது போன்ற ஒரு சிலிர்ப்பு அவள் உடலிலும், உள்ளத்திலும் மின்னலைகளாய்ப் பாய்ந்தது.

வாழ்வின் வசந்தம் இனி அவனது திசையில் தான் என்ற உணர்வோடு, எப்படியும் அவனை ஒருமுறை கண்டு தீர்க்கமாக உரையாட வேண்டும் என எண்ணினாள். எடுத்திருக்கும் முடிவானது அவசரமாய் ஒரு தீர்மானத்திற்கு வரக் கூடிய விசயமும் இல்லைதான். இது அவர்களது வாழ்வின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதாய் மட்டுமல்லாமல், பல பரிமாணங்களைக் கொண்டதாய் உணர்ந்தாள்.

நினைக்க நினைக்க விசித்திரங்களாய் பல வித எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. எனினும் அவை நிஜங்கள் என்பதால் ஆனந்தனுடன் கலந்தாலோசித்து ஒரு உசிதமான முடிவை எடுக்க வேண்டும் என மனது உந்தித் தள்ளியது.


மனதில் நிகழ்ந்த போராட்டத்தை எவருடனும் பகிர்ந்து கொள்ள முடியாது அடக்கி வைத்திருந்த நெஞ்சின் வலிகள் குமுறி எழுந்தபோது அவனைக் சந்திக்கும் முயற்சியில் இறங்கி, அதில் இரண்டு நாட்களுக்கு முன்னர் வெற்றியும் கண்டாள்.

கிருபாவும் ஆனந்தனும் பலதரப்பட்ட பிரச்சினைகள் பற்றி எதிர்வுகூறி, ஆராய்ந்து அலசியபோது, அவளது வலிகள் அவனதும் ஆயின. எடுக்கப் போகும் முடிவினால் அவளது குடும்பத்திலும், அவனது குடும்பத்திலும் ஏற்படப்போகின்ற பாதிப்புகளும் தாக்கங்களும் எவ்வாறானவையாக இருக்கக்கூடும் என அவர்களது புத்திஜீவி மனது அசைபோட்டது. ஒரு குடும்பச்சிதைவினைத் தடுக்கும் அம்சங்களாக தம் உயர்வுக்காக ஆனந்தனை முற்றுமுழுதாக நம்பியிருக்கும் அவனது வறிய பெற்றோர் சகோதரங்களும், கிருபாவின் வீட்டில் இந்த முடிவினால், பின்நாளில் பாதிக்கப்படப்போகின்ற சகோதரிகளின் திருமணமும், குடும்ப கௌரவமும் இவர்களது இணையும் முடிவை, புறமுதுகு காட்டி சிதைக்க முயன்றதெனினும், இந்தச் சமூகம் வகுத்திருக்கும் எந்தப் பாகுபாட்டையும், கட்டுப்பாட்டையும் எடுத்தெறிந்து. இரு தமிழ் உள்ளங்கள் ஒன்று சேரும் நோக்கில் சிந்திக்கத் தொடங்கின.

''என்ன தான் முடிவு செய்யலாம்?'' அவள் அவனுடைய பக்கம் பந்தை வீசினாள். இது மாதிரியான ஏதோ ஒரு பொறிக்குள் இப்பிரச்சினை தலையைக் கொடுத்துவிட்டுத் திணறும் என்பது முதலிலேயே எதிர்பார்த்தது தான். இம்மாதிரியான அசாதாரணமான கணங்களை உடைக்கவல்ல ஒரு பதிவேனும் தன்னிடம் உறுதியாய் இல்லாததை எண்ணிக் கவலையுற்றான். கடந்த இரவு அம்மாவின் கண்ணீரில் இவன் இதயம் கரைந்து கூழாகிப் போயிருப்பதை இவள் தெரிந்திருக்க நியாயமில்லை தான். கடிதமூலம் பதிலளித்த போதிருந்த வேகம் ஆர்முடுகளாகிவிட்டதனால் எழுதிய அத்தனை வார்த்தைகளும் ஏதோ ஒரு கணத்தில் செத்துப்போய்விட்ட பிரமை அவனுள் உண்டாகியது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைக்கு லீவு விட்டதால் குதூகலம்



பாடசாலையில் தவணைப் பரீட்சை நடைபெற்று லீவும் வந்து விட்டால் மாணவ, மாணவிகளுக்கு கொண்டாட்டம்தான். அந்தக் கொண்டாட்டத்தில் இந்த மாணவி ஈடுபட்டு கல்லூரியின் நீரூற்றில் கல்லூரி சீருடையுடனேயே நீராடிக் குதூகலிக்கும் காட்சி. பிளெடில்பியா மாகாணத்தின் தலைமைக் கல்லூரியில் எடுக்கப்பட்ட படம் இது.

## பாரம்பரிய தொப்பி அணிந்து மரியாதை



தொப்பி அணிந்து கொள்வதில் ஐரோப்பிய வெள்ளையர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். குளிர் வாட்டுவதால்தான் இந்த நிலை. அத்துடன் நாய் வளர்ப்பிலும் அவர்களுக்கு நாட்டம் அதிகம். வளர்ப்பு நாய்களுக்கு விதம் விதமான ஆடை அணிகளை அணிவித்து அழகு பார்ப்பதிலும் அவர்களுக்கு கொள்ளை ஆசை. ஜேர்மனியில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் நாய்களை அழகுபடுத்தும் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. அழகிய தொப்பி அணிந்து இந்த நாய் அழகு காட்டுவதைப் படத்தில் காணலாம்.

**மசாலா மிக்ஸ்**

## ஒலிம்பிக் ஜோதிக்கு தேவதை வரவேற்பு



கிரேக்கத்தில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு ஒலிம்பிக் ஜோதி உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அவுஸ்திரேலியாவில் ஒலிம்பிக் ஜோதி இரு தினங்களாக ஊரெல்லாம் எடுத்துச் செல்லப்பட்டது. சிட்னியில் ஒலிம்பிக் ஜோதி வந்த போது தேவதைக் கோலத்தில் இந்தப் பெண்கள் வரவேற்றனர்.

## பிள்ளைகள் மீது பாய்ந்து ஆசி வழங்கும் சடங்கு!

பிள்ளைகள் வீட்டுத் தரையில் படுத்திருக்கும் போது அவற்றின் பாதுகாப்பு குறித்து நாம் எவ்வளவு அவதானமாக இருப்போம். ஆனால், இந்தப் படத்திலோ கீழே படுக்க வைக்கப்பட்டிருக்கும் நான்கு குழந்தைகள் மீது வேகமாகப் பாய்ந்து செல்கிறார் ஒருவர். ஸ்பெயினில் நடைபெற்ற ஒரு கிராமிய பண்டிகையில் இந்தச் சடங்கு இடம் பெற்றது. பிள்ளைகளுக்கு எது வித இடரும் ஏற்பட்டு விடாமல் தெய்வ ஆசிபெறும் சடங்கு இது என்று எல் கொலாக்மகோ இனத்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.



## கால்பந்தின் மீது அடங்காத ஆசை



காஸ்பந்தாட்டத்தில் அளவு கடந்த ஆர்வம் கொண்டவர்கள் இந்தோனேசியர்கள். கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றால் பெரும் எண்ணிக்கையில் கூடுவார்கள் இந்தோனேசிய ரசிகர்கள். ஜகார்த்தாவில் நடைபெற்ற ஒரு கால்பந்தாட்டத்தின் போது ரசிகர்கள் கால்பந்து வடிவிலான தொப்பிகளை அணிந்து தமது அணி வீரர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தினர்.

## ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜூன் 21, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ரம்யா கிருஷ்ணன். சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. சி.முகமது, 134/14, மோதரை வீதி, அளுத்மாவத்தை. 2.சி.கந்தரூபன், பிரதான வீதி, பருத்தித்துறை. 3.எ.நவநீதன், கண்டி வீதி, கிளிநொச்சி. 4. வெ.சுகுமார், கே.கே.எஸ். வீதி, மல்லாகம். 5.கே.செந்தில், கடற்கரை வீதி, திருகோணமலை.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் அதிகம் தேசபக்தி மற்றும் அக்ஷன் படங்களில் நடித்துள்ளார். இவரது படங்கள் பல வருகைக்காக ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்..

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி கீழ்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



# அறிவியல் அதிசயம்

பரந்து விரிந்து கிடக்கும் இந்த உலகில் ஒவ்வொரு நாளும் பல அற்புதங்கள் நிகழ்கின்றன. கற்பனைக்கு எட்டாத, விஞ்ஞான ரீதியில் விளக்கம் கூற முடியாத விவகாரங்களில் ஒன்று 'பறக்கும் தட்டுகள்' மற்றும் அதில் பயணம் செய்யும் அயல் கிரகவாசிகள் என்று நம்பப்படுபவர்கள்.

ஆங்கிலத்தில் இதை யூ.எவ்.ஓ. (U.F.O. - Unidentified Flying Objects) என்று அதாவது அடையாளம் காணப்படாத பறக்கும் பொருள்கள் என்று அழைக்கிறார்கள். விஞ்ஞான வளர்ச்சியில் நாங்கள்தான் ஜாம்பவான்கள் என்று மார்தட்டிக் கொள்ளும் மேற்கத்திய நாடுகளை இந்த 'பறக்கும் தட்டு சமாச்சாரங்கள் கதிகலங்க அடித்து வருகின்றன. அவ்வப்போது மின்னல்போல் தோன்றி அதே வேகத்தில் சென்று மறையும் இந்த பறக்கும் பொருள்கள் இன்னமும் புரியாத புதிர்கள்தான்.

கிடைக்கப்பெற்ற தகவல்படி பறக்கும் பொருள்களின் வேகம் திகிலூட்டும் விதமாக உள்ளது. ஒரே இடத்தில் அப்படியே ஆடாமல் அசையாமல் அந்தரத்தில் நிலைகொண்டு பின்பு சடாரென்று வேகத்தை அதிகப்படுத்தி 'விர்' என அசுர வேகத்தில் பறக்கும் தன்மை கொண்டவை. இவற்றின் வேகம் விமானங்களின் வேகத்தை விட அதிகம் என்றால் கற்பனை செய்து பாருங்கள்.



இவற்றினால் வான்வெளியில் மிகவும் குறைவான வேகத்தில் நகரவும் முடியும். செல்லும் பாதையில் இருந்து சடாரென்று செங்குத்து கோணத்தில் திரும்பவும், சடாரென்று வேகத்தை அதிகப்படுத்தவும் முடியும். எனவே நம்மால் பறக்கும் பொருள்களின் திறன் இவ்வளவு தான் என்று உறுதியாகக் கூற இயலவில்லை.

அதுமட்டுமல்ல மேற்கூறிய திறன்களை எல்லாம் ஏன் இவைகள் கொண்டிருக்கின்றன என்பதும் மர்மமாகவே இருக்கிறது. ஒரு துளிகூட சந்தேகமே எழுப்ப முடியாத அளவிற்கு பறக்கும் பொருள்களின் படங்கள் கிடைத்திருக்கின்றன. பறக்கும் பொருள்களின் புகைப்படங்கள் இயற்கை நிகழ்வுகளை (வினோதமான மேகக்கூட்டங்கள் போல) கொண்டிருக்கிறது. அல்லது ஒரு கமெராவிலிருந்து கசியும் ஒளியைப்போல் இருக்கிறது.

பறக்கும் பொருள்களின் மிகச் சிறந்த புகைப்படங்கள், 1950 ஆம் ஆண்டு ஒரேகான் மின்வில்லே நகரிலும், 1954 இல் பிரான்சில் உள்ள ரேயானிலும், 1958 ஆம் ஆண்டு பிரேசிலில் உள்ள கடற்கரை அருகிலும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

நியூயோர்க்கில் உள்ள ஹட்சன் பள்ளத்தாக்கிலும், பெல்ஜியத்திலும் பறக்கும் பொருள்களின் வீடியோவே எடுத்திருக்கின்றனர். இந்தப் புகைப்படங்களை எல்லாம் நீங்கள் ஊரிலுள்ள நூலகத்தில் பறக்கும் தட்டுகள் பற்றிய புத்தகத்தில் காண முடியும்.

இருந்தாலும் புகைப்படத்தை வைத்துக் கொண்டு பறக்கும் பொருள்களை நம்ப மறுக்கிறார்கள் ஆய்வாளர்கள். ஏனென்றால் ஒரு புகைப்படத்தில் ஏகப்பட்ட தில்லுமுல்லு வேலைகள் செய்யலாம் என்பதால் தான்!



முதன் முதலில் மக்களுக்கு பறக்கும் பொருள்கள் எப்போது தென்பட்டன?

உலக சரித்திரத்தின் ஆரம்ப காலக் கட்டத்திலிருந்தே பறக்கும் பொருள்களின் தென்பட்டு வருவதாக பல பறக்கும் பொருள்களின் ஆராய்ச்சியாளர்கள் கூறிவருகின்றனர். பறக்கும் பொருள்களின் பற்றிய கற்பனைகளும், கட்டுக்கதைகளும் ஏராளம். ஏனென்றால் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் இந்தக் கதைகளைப் பற்றிய உண்மைகளை அறிவதற்காக நேரடியாக சோதனை முயற்சியில் இறங்குவதில்லை. மேலும் இவையெல்லாம் உண்மையில் நிகழ்ந்ததா? என்று தீர்மானிப்பது மிகவும் சிக்கலான காரியமாக இருந்து வருகிறது.

1980 ஆம் ஆண்டு வட அமெரிக்கா முழுவதும் பரவலாக மக்களுக்கு பறக்கும் பொருள்கள் தென்பட்டிருக்கின்றன. இவை ஒரு வினோதமான உரு அமைப்புக் கொண்ட பறக்கும் கப்பலாக இருந்திருக்கிறது. மிகப் பிரகாசமான முகப்பு விளக்குக் கொண்ட இது, தோட்டங்கள் மற்றும் நகரத்தின் மீது பறந்து சென்றது. இந்த பறக்கும் தட்டின் விமானிகளையும் சில மக்கள் சந்தித்தனர் என்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ஆராய்ச்சியாளர்களோ இத் தகவலை முற்றிலும் புறக்கணித்ததோடு உண்மைத் தன்மையையும் பற்றிய சந்தேகமும் தெரிவிக்கின்றனர்.



மேலும் பலவித புலனாய்வு நிபுணர்களும் பறக்கும் தட்டு பற்றிய தகவல் ஒரு புரளிதான் என்றும், 'கப்ஸா' சங்கத்தின் (Liars Clubs) உறுப்பினர்கள் அள்ளிவிட்ட கட்டுக்கதை என்றும், தங்களது பத்திரிகையின் விற்பனையை அதிகரிப்பதற்காக எழுத்தாளர்கள் புனைந்த கதைதான் என்றும் கூறினார்கள். இருந்தாலும் யூஃபோலாஜிஸ்டுகள் இந்த ஆகாயக் கப்பல் தென்பட்டதுதான் வரலாற்றின் முதல் பறக்கும் பொருள்களாக நம்புகின்றனர்.

இரண்டாவது உலகப் போரின் போது விமானப்படை விமானிகள் பறக்கும் பொழுது ஒருவினோதமான ஒளியால் ஆன எரிபந்துகள் (Liars Clubs) உறுப்பினர்கள் அள்ளிவிட்ட கட்டுக்கதை என்றும், தங்களது பத்திரிகையின் விற்பனையை அதிகரிப்பதற்காக எழுத்தாளர்கள் புனைந்த கதைதான் என்றும் கூறினார்கள்.

இரண்டாவது உலகப் போரின் போது விமானப் படை விமானிகள் பறக்கும் பொழுது ஒரு வினோதமான ஒளி யால் ஆன எரிபந்துகள் (Glowing balls) விமானப்படைகளை பின் தொடர்ந்ததைக் கண்டிருக்கிறார்கள். இவற்றை இவர்கள் பூ வீரர்கள் (Foo Fighters) என்றழைத்தனர். Foo என்றால் தீ என்று அர்த்தம் கொடுத்தார்கள். முதலில் கூட்டணி படைத்தளபதி, இந்த பூ வீரர்கள் ஜெர்மனி நாட்டின் ரகசிய ஆயுதங்கள் அல்லது கண்காணிப்பு கருவிகளாக இருக்கலாம் என நம்பினர். ஆனால் போருக்குப் பிறகு தெரிந்தது என்ன வென்றால் ஜெர்மனிய வீரர்களும் இத்தகைய எரிபந்துகளைக் கண்டுள்ளனர்என்பது தான்.



இவர்களும் அமெரிக்கவிசை அல்லது பிரிட்னினது கண்காணிப்பு கருவிகள் என நினைத்ததுதான் வேடிக்கை.




# பசி எடுப்பதும் உடல் பெருப்பதும் நோய்க்கான அறிகுறியா?

**கேள்வி:— ஆண் வயது 20. நான் பிறந்து வளர்ந்தது திருகோணமலையில். கடந்த வாரம் குளிர் காய்ச்சலால் பாதிப்புற்று மருந்தெடுக்க அரசாங்க மருத்துவரிடம்சென்றேன். அவர் மலேரியா நோய் என்று நிதானித்து— எனது தோற்றத்தையும், இருக்கும் இடத்தையும் விசாரித்து விட்டு உங்களுக்கு சில மலேரியா தடுப்பு மாத்திரைகளை தர இயலாது. அவை உங்கள் இரத்தத்தை நீராக்கி விடும்— எனவே விலைகூடிய இந்த மாத்திரைகளை வெளிக் கடையில் வாங்கி உபயோகியுங்கள் எழுதித் தந்தார். மாத்திரைகளை உபயோகித்து சுகமடைந்து விட்டேன். ஆனால் மாத்திரைகள் கூட சாதி சமயம் பார்த்து வித்தியாசமான விளைவுகளைத்தருமா? இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது திருகோணமலையில் வந்திருந்த ஆபிரிக்க தேச போர் வீரர்களுடன் திருமண சம்பந்தம் வைத்துக் கொண்ட மக்கள் சிலரின் வம்சாவளிகள் நாங்கள் என்று எமது பாட்டனார் கூறுவார். எமது வம்சாவளியினர் கத்தோலிக்கர். எமது நிறம் சற்று கூடிய கருமைநிறம். தலைமயிர் ஆபிரிக்க மக்களைப்போல் குட்டையாகவும், சுருண்டும் காணப்படும். இந்த தோற்றத்திற்கும், வம்சாவளிக்கும், மலேரியா குளிசைகளுக்கும் என்ன தொடர்பு?**

பதில்:—நானும் சில காலம் திருகோணமலையிலும் அநுராதபுர மாவட்ட மருத்துவ நிலையங்களிலும் சேவை புரிந்ததனால் உங்கள் பிரச்சினை பற்றி நன்றாக விளங்குகின்றது. மருந்து மாத்திரைகள் சாதி சமயம் பார்த்து வெவ்வேறு விதமாக குணமளிப்பதில்லை. உங்கள் வம்சாவளியினருக்கு — பிற தேச மக்கள் இரத்த தொடர்பு இருந்ததனால் — அவர்களது GENES எனப்படும் பரம்பரை அலகுகள் இடையே கலப்பு ஏற்பட்டது . இதனால் இவர்களுக்கு G6 PD DEFIECIENCY என்ற ஒரு நோய் நிலை ஏற்படுகிறது. GLUCOSE 6 PHOSPHATE DEHYDROGENASE என்ற நொதியம் உடலின் இரத்த சத்து (HAEMOGLOBIN) உருவாக்கத்துக்கு தேவையானது. இந்த நொதியம் இல்லாமல் உருவாகும் இரத்தச்சத்துள்ள செவ்வணுக்கள் சில இரசாயனங்களோடு சேரும் போது பெருத்து உடைந்து அழிகின்றனை. இரத்தம் 'நீராகி' போதல் என்பது இதுதான். இதனை — HAEMOLYSIS என்பார்கள். இந்த நிலையைத் தரும் மருந்துகளில் மலேரியாவிற்கு கொடுக்கப்படும் PRIMAQUINE மாத்திரையும் ஒன்று. இந்த நோய் நிலையால் பாதிக்கப்படுபவர்கள் முன்னர் திருகோணமலை பாலையூற்று பகுதிகள், அநுராதபுர மாவட்டத்தில் மரதங்கடவல பகுதிகள் குருநாகலை மாவட்டத்தில் சில பகுதிகளில் செறிந்து வாழ்ந்தார்கள். இப்பொழுது தற்காலத்தில் ஏற்பட்ட நகரமயமாதல் (URBANISATION) சூழலால் இடம் பெயர்ந்து இலங்கையில் பல பாகங்களிலும் வாழ்கின்றார்கள். கலப்பு திருமணங்கள் பல இவர்களுக்கிடையே நடைபெற்றதனால் நீங்கள் குறிப்பிட்ட உருவ அமைப்பு கொண்டவர்கள் சிலர் தான் உள்ளார்கள். மற்றவர்கள் இரத்தப் பரிசோதனை, அல்லது தவறுதலாக ஒவ்வாத மாத்திரைகளை உபயோகிக்கும் போது கண்டறியப்படுவார்கள். இந்த நோய் பெண்களின் நிறமூர்த்தத்தில் (CHROMOSOMES) உள்ள பரம்பரை அலகுகளின் மூலமாக தலைமுறையாகப் பரப்பப் படுகின்றன. ஆனால் இந்த நோய் நிலையால் பாதிக்கப்படுபவர்கள் அந்த தலைமுறைகளில் உள்ள ஆண்கள் மட்டுமே. இப்பொழுது உங்கள் சந்தேகம் தீர்ந்திருக்கும். இந்த நொதிய குறைநிலை இலங்கையில் மட்டுமல்ல மத்தியதரைக்கடல் பகுதியை சூழவுள்ள ஆபிரிக்க நாடுகள், மத்தியகிழக்கு, தெற்காசிய நாடுகள் போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன.

**கேள்வி:— வயது 27. பெண் திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர். எனக்கு திடீரென்று பசி எடுக்கிறது. ஒவ்வொரு இரண்டு மணிநேரத்திற்கும் பசி எடுக்கிறது . இதனால் எனது உடலும் பருத்துக்கொண்டு போகிறது. பரிகாரம் கூறவும்.**

பதில்:— உங்கள் தைராய்ட்டு சுரப்பி கணையம் என்கின்ற PANCREAS என்பவற்றின் செயல் பாடுகள் அதிகரித்து இருந்தால் பசி உணர்வு அதிகரிக்கும். ஒரு தகுந்த வைத்தியரிடம் போய் தைராய்ட் சுரப்பியின் செயற்பாடுகளை புரிந்து கொள்ள T3,T4,T5H ஹோர்மோன்களின் வீதத்தை அறிந்து கொள்ளுங்கள். மற்றது இரத்தத்தில் சர்க்கரைச்சத்து பற்றி அறிந்து கொள்ளுங்கள். இந்த முடிவுகளில் ஏதாவது மாற்றங்கள் இருந்தால் அதற்குரிய சிகிச்சைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இவைகளில் பிழை ஏதும் இல்லையென்றால் உங்கள் மூளையில் உள்ள பீற்றீயூற்ரரி சுரப்பியின் செயற்பாடுகளை அறிய தலையை எக்ஸ்ரே எடுத்து, பீற்றீயூற்ரரி சுரப்பியின் அளவுகளை அளந்தறிய வேண்டும். பீற்றீயூற்ரரி (PITUITARY) சுரப்பியில் ஏற்படும் வீக்கம், வளர்ச்சி (TUMOR) கூட பசி உணர்வை அதிகரிக்கும். இவையாவும் பிழையற்று — சாதாரணமாக இருந்தால் உங்கள் உணவு பழக்கங்களை தவறாக நீங்கள் பின்பற்றுவதால் ஏற்படும் பழக்கம் தான் இந்த அடிக்கடி பசி எடுக்கும்



பழக்கம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். மூளையின் ஒரு பகுதியில் APPETITE CENTER பசி உணர்வை ஏற்படுத்தும் பகுதி என்று ஒன்று உள்ளது. இரத்தத்தில் குளுக்கோசு அளவு குறையும் போது இந்தபகுதி தூண்டப்பட்டு பசி உணர்வு ஏற்படுகிறது. அந்த நேரம் நாம் ஏதாவது சாப்பிட்டோமென்றால் இரத்தின் குளுக்கோசு அளவு அதிகரித்து — தூண்டல் உணர்வு நிறுத்தப்படுகிறது— பசியும் தீர்ந்து விடுகிறது. தவறான பழக்கத்தால் பிழையான அளவில் அதுவும் காபோஹைறேற்ஸ் (CARBOHYDRATES) என்ற சர்க்கரை சத்தை அதிகமாகதரும் உணவுப் பதார்த்தங்களை சாப்பிடுவதால் AP''ETITE பகுதி அடிக்கடி தூண்டப்பட்டு — பசி உணர்வு அடிக்கடி ஏற்படும். எனவே பசி எடுக்கும் போது கொழுப்பு சேர்ந்த உணவு பதார்த்தத்தையும் சேர்த்து சாப்பிடுங்கள் பட்டர்,மாஜரின் சேர்ந்த உணவுகள் நீண்ட நேரம் உணவை இரைப்பையில் வைத்திருப்பதால் பசி உணர்வு தூண்டப்படமாட்டாது. இப்படியாக உங்களை நீங்களே வழக்கப்படுத்தி உணவுப்பழக்கத்தை மாற்றிக் கொள்ளலாம்.

**கேள்வி:— எனது மகள் வயது15. பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கின்றாள். எவ்வளவு நன்றாகப் படித்தாலும், படித்த விஷயம் மனதில் பதிவதில்லை. ஞாபக சக்திகுறைவாக உள்ளது. சிறு வகுப்புகளில் கூடிய ஞாபக சக்தி கொண்டிருந்தாள். இப்பொழுது ஞாப சக்தி வர வர குறைகிறது. மற்றப்படி தேக ஆரோக்கியமாக உள்ளாள். மறைந்த அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரீகனும், இப்படி ஞாபக சக்தி குறைந்து குறைந்து இறுதியில் தன் மனைவி , பிள்ளைகளை க் கூட மறந்து போய் விட்டார் என சமீபத்தில் படித்தேன். ஞாபக சக்தி குறைவது ஒரு நோயா ? வல்லாரைக் கீரை அதிகம் உணவில் சேர்த்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும் என்கின்றார்களே — அது உண்மையா? எனது மகளின் ஞாபக சக்தி அதிகரிக்க வழி சொல்லுங்கள்.**

பதில்:—ஞாபக சக்தி குறைவது முதுவயதில் இயற்கையானதே. வயது செல்ல செல்ல மூளையில் உள்ள கலங்கள் — செயலிழக்கின்றன. இதனால் மூளையின் சில செயற்பாடுகள் முக்கியமாக ஞாபக சக்தி குறைகின்றது. முதுமை காலத்தில் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள் கூட மூளைக்கு போகும் இரத்த ஓட்டத்தை குறைத்து மூளையின் கலங்களை செயலிழக்கவைக்கின்றன. மேலும், றொனால்ட் ரீனுக்கு ஏற்பட்டது ALZHEIMERS DISEASE என்ற காரணம் கண்டுபிடிக்கப்படாத மூளைக்கலங்களை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொள்ளும் பயங்கர நோய். அலுமீனியம் உலோகம் உடலில் சேருவதால் இது ஏற்படலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது. அநேகமாக 50—60 வயது கடந்தவர்களையே இது பாதிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக விஷயங்களை மறந்து பின்னர் மொத்தமாகவே உலகையை மறக்க வைத்துவிடும்' நோய் இது. இது நிச்சயம் உங்கள் மகளுக்கு ஏற்பட்டிராது . பயப்படாதீர்கள்.

இளவயதில் ஞாபக சக்தி மாணவர்களுக்கு குறைவதற்கு நோய்கள் நிச்சயமாக காரணங்களாக இருக்காது. உங்கள் மகள் வளர் இளம்பிராய வயதினர் (ADOLESCENT) இவ்வயதில் உளக்கிளர்ச்சிகளும், உடல் மாற்றங்களும் நிறைய ஏற்படுவது இயற்கை. இதனால் அவரது மனது எதிலும் குவித்திருக்காது. மனக்குவிப்பு (CONCENTRATION) இருந்தால்தான் கல்வியில் நாட்டம் செல்லும். படிப்பது மனதில் படியும். ஆனால் அவரது வயது — அதனால் ஏற்படும் உள, உடல் மாற்றங்கள் மனதை அலைக்கழிக்கும். இது தான் உங்களுக்கு ஞாபக சக்தி குறைவது போல் தெரிகிறது. மகளது ஞாபக சக்தி குறைவை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் அவரை ஊக்குவியுங்கள். இந்த வயது காலகட்டம் கடந்ததும் பொறுப்புணர்வும் மனப்பலமும் வரும் பொழுது — படிப்பில் நாட்டம் தானாகவே வரும். இந்த வேளையில் அவரது மாற்றங்

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு - 14

களை புரிந்து கொள்ளாமல் கண்டிப்புகள், கண்டனங்கள், ஏச்சு பேச்சுக்கள், கேலிப்பேச்சுகள் என்பன உங்கள் மகளின் எதிர்காலத்தை பாழாக்கிவிடும். அவளை புரிந்து நடந்து நல்லதொரு ஆளாக உலகிற்கு அனுப்புவது உங்கள் கைகளில் தங்கியுள்ளது.

வல்லாரை ஒரு சக்தி மிக்க மூலிகை. பிரம்ம மூலிகை என்று அதற்கு இன்னொரு பெயருண்டு. அதனை உண்பதால் — மன இறுக்கம், மனச் சோர்வு குறையும். மூளையில் சக்தி பெருகும். நரம்பு பலவீனம் அதிகமாகும் என்று ஆயுள் வேத வைத்தியம் கூறுகிறது. நீண்டநாள் உயிர் வாழ சீன சக்கரவர்த்திகள் வல்லாரையை உபயோகித்ததாக சரித்திர சான்றுகள் உள்ளன. மேற்குலக ஆய்வுகூட ஆராய்ச்சிகளில் இரத்த சுற்றோட்டத்தை ஊக்குவித்து சிறிய சிறிய இரத்தக் குழாய்களினூடாக இரத்தஓட்டத்தை செலுத்தும் பண்பு வல்லாரைக்குண்டு என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே வல்லாரையை உபயோகிப்பதால் ஞாபக சக்தி பெருகுவதற்கு சந்தர்ப்பம் உண்டு என்று ஏற்றுக் கொள்ளலாம்.

# மனதில் உறுதி வேண்டும்

(5 ஆம் பக்க தொடர்ச்சி)

இப்போது தான் கிருபாவுக்கும் ஒரு விடயம் உறைந்தது. தன்னைப் போலவே ஆனந்தனும் பெரும் குழப்பத்தில் இருப்பதாகப்பட்டது. நம்பிக்கை ஒளிர்ந்த முகத்தின் பூச்சுக்களும் மெது மெதுவாக உதிர்ந்து விழுவதாக அவளுக்குப்பட்டது. எனினும் அவனது மௌனம் மரணித்தது ''என்கூட ஓடி வாருங்கள் என்று கேட்க நினைத்திருக்கவில்லை. உங்கள் பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்யத்தான் விரும்பினேன் கிருபா. ஆனால், உங்கள் பெற்றோர்கள் என்ன சொன்னார்கள்? சாதி குறைந்தவன் என்றார்கள் இல்லையா? அவர்களிலும் தவறில்லை. சமூக விதிகளுக்கு அவர்களும் பயந்தவர்கள் தானே?''

''இப்போது என்னதான் சொல்கிறீர்கள்?'' கிருபா படபடப்புடன் கேட்டாள். தொடர்ந்து நீண்ட நேர பரஸ்பர உரையாடல்களின் பின்னர் அவன் தீர்க்கமாகச் சொன்னான். ''கிருபா கவலைபபடாதீர்கள். எத்தனை தடங்கல் வந்தாலும் நம்மு஡ைய காதலை யாராலும் அழிக்க முடியாது. நாளை மறுதினம் ஊரைவிட்டே போய், என் நண்பன் திருச்செல்வத்தின் உதவியுடன் திருமணம் செய்வோம்.''

இப்போது மறுபடி அவள் தயங்கினாள். '' ஆனந்தன் எப்படி ஆனந்தன்? எனக்கு என்னவோ ரொம்பப் பயமாக இருக்கு! இரு பகுதியினரினதும் உடன்பாடு இல்லாமல் நாம் ஓடிப்போய் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதா?'' மீண்டும் தொடங்கிய இடத்திற்கே கிருபா வந்தபோது அவன் சினப்புற்றான்.

''இங்க பாருங்க கிருபா நான் உங்களைக் கட்டாயப்படுத்துவதாக நினைக்காதீங்க. ஆனால், ஒரு முடிவை எடுத்தால் அதிலிருந்து பின் வாங்குவதில் அர்த்தமில்லை. நீங்களும் குழம்பி, என்னையும் போட்டுக் குழப்புகிறீர்கள்.''

அவனது தைரியமூட்டலில் அவள் இப்போது திடப்பட்டாள் ''சரி ஆனந்தன், நீங்கள் தான் எனக்கு எல்லாம். உங்கள் முடிவை நானும் ஏற்றுக்கொள்கிறேன். நாளைமறுதினம் இரவு பத்தரை மணிக்கு கோயிலுக்கு வருவேன்...'' இப்போது அவள் மனதில் தெளிவு. விடைபெற்றார்கள்.

****

எடுத்த முடிவை நிறைவேற்றவே இன்றைய பிரயத்தனம். இப்போது அவள் புறப்படும் எண்ணத்தில் தெளிவாக இருக்கிறாள்.

அவள் எதிர்பார்த்த நேரம் வந்துவிட்டது. அம்மா படுத்துவிட்டாள். அப்பாவிடமிருந்தும் மெல்லிய குறட்டைச் சத்தம் கேட்கிறது.

நேரம் கடந்துவிட்டது. 'கெதியில் போக வேண்டும் ஆனந்தன் காத்துக் கொண்டிருப்பார், பாவம்!'

மெதுவாக எழுந்தாள் பையை எடுத்து தோளில் மாட்டினாள். மேசையிலே இருந்த அவளது ஆலபம் கண்ணில்பட்டது. பைக்குள் எடுத்து வைக்க வேண்டுமென்று நினைத்தவளுக்கு ஒரு முறை திறந்து பார்க்க வேண்டும் போலிருந்தது.

புரட்டினாள். அவளது முதலாவது பிறந்த தினத்திற்கு எடுத்த படம். குட்டிப் பாப்பாவாக அவள்! அவளைக் கொஞ்சியபடி இரு புறமும் அம்மாவும் அப்பாவும்!

கண்கள் பனிக்கின்றன. தயக்கத்துடன் கட்டிலில் அமர்ந்து உற்றுப் பார்க்கையில், பனித்த கண்கள் ஊற்றெடுக்க ஆரம்பித்தன.

வரவர, புறப்படும் எண்ணத்தின் அடர்த்தி குறைவதை உணர்ந்தாள். அந்தத் தீவிரக் கணத்தின் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாதவளாக, குவிந்த அப்புள்ளியிலிருந்து விலகி கண்களை மூடி கட்டிலில் சாய்ந்தாள்.

மார்பிலே விரித்தபடி ஆல்பம்! ஏற்கனவே எப்பவோ தீர்மானிக்கப்பட்டபடி தான் வாழ்வு நகரும் என நினைத்தாள். நினைவுகள் அறுந்து நித்திராதேவி தழுவ, கனவுகள் நிறைந்த தூக்கமும் விழிப்புமாய் விடிகிறது.

அவனை ஏமாற்றிவிட்ட அந்தர மன நிலையில் 'டுக்கையில் கிருபா தவிக்கும் அதே நேரம், ஆனந்தனும் தனது வீட்டில் படுக்கையிலிருந்து அதே போன்ற மன நிலையில் தவித்துக்கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனை)

# சுய நிர்ணய உரிமையும் தன்னாட்சியும்

சுய நிர்ணய உரிமை என்ற விடயத்தினுள், ஒரு தேசம் தனது பொருளாதாரம், தொழிற்துறை, வணிகம், புனர்வாழ்வு, புனரமைப்பு போன்ற பணிகளில் சுதந்திரமாக முடிவெடுக்கும் உரிமைகளும் உள்ளடக்கம் பெற்றிருக்கின்றன.

இதற்கான ஓர் அரசியல் நிர்வாக அமைப்பொன்று முறையாக ஏற்படுத்தப்படுமாயின், அனைத்து மக்களும் சமவுரிமை, சமவாய்ப்பு, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் தமக்கான பொருளாதார நலன்களை பெறவும் அவற்றை அனுபவிக்கவுமான வாய்ப்பினை பெறுகிறார்கள்.

இன ரீதியான முரண்பாடுகள் நிலவும் நாடுகளில், தேசிய இனங்களின் உருவாக்கம் தொடர்பான முதல் நிலைக்கூறுகள் சார்புநிலைக் கூறுகளாகும் என்பதை கவனத்தில் கொள்வது இன்றியமையாதது.

குறிப்பிட்ட ஒரு தேசிய இனத்துக்கான முதல் நிலைக்கூறில் பேசும் மொழி, அம்மக்களது இனக் குழுமம், அவர்களின் பாரம்பரிய பிரதேசம் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

அதன் சார்பு நிலைக்கூறினுள் தன் வாழ்விடம், தனது நாடு என்ற உளவியல் உருவாக்கமும், ஆட்சிமுறை, பொருளாதாரம் என்பவற்றில் மேம்பாட்டைக் காண்பதற்கான சமூக மாற்றம் பற்றிய அடிப்படையும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

எமது இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், இடைக்கால சபை ஒன்றின் ஊடாக இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் அவசியமாக இருப்பதுடன், புனர்நிர்மானப்பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கும் உகந்த ஒன்றாக இவ் இடைக்கால நிர்வாக அமைப்பு கருதப்படுகின்றது.

அரசியல் இறைமையானது (POLITICAL SOVEREIGNITY) பொதுமக்களிடம் நிலைத்துள்ளது என நமது அரசியலமைப்பின் (CONSTITUTION) முகவுரை கூறுகின்றது.

சட்டம் சார்ந்த இறைமையானது (LEGAL SOVEREIGNITY) கூட்டாட்சி ஒன்றியத்துக்கு வழங்கப்படுவது அவசியமானதாகும்.

அதிக பயன்கள் பெற்றுத்தரும் இறைமையை பெற்ற ஒன்றாக மாநில நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டாட்சியில் தன்னாட்சி அமையும்போது ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதும் அவசியமாகும்.

நடைமுறைக்கு வரும்போது அது ஒரு பகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்துவதாக ஆகிவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொள்ளவும், தன்னாட்சி உரிமைகள் நசுக்கப் படாமல் பாதுகாத்திடவும், பொருளாதார வளம் ஒரே சீராக பேணப்படுவதற்குமான உரிமைகளை பாதுகாக்கவும் போதிய அதிகாரங்கள் (RESIDUERY POWERS) கொண்டதாக இருத்தல் வேண்டும்.

நாளை என்பது,நேற்றைய— இன்றைய — வரலாற்று போக்குகளின் விளைவான எதிர்கால நிகழ்வுகள் ஆகும்.

அதில் கணிப்புகளும், எதிர்பார்ப்புக்களும்,செயற்பாடுகளும் உள்ளடங்கும் தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிர் கால வரலாறும், மொழி, இனங்களுக்குரிய சரியான அரசியல் மற்றும் அரசமைப்பதற்கான சூழ் நிலையும் ஏற்பட்டுள்ளது. விடியலுக்கு முன்பு வெள்ளி தோன்றுவதைப் போல, தமிழ் தேசியம் இனி நெடும் பயணம் செய்ய வேண்டும்.

அதற்கு ஆட்சியியல், அரசமைப்பு, தமிழ் சமுதாய நிலை சென்ற—நின்ற இயக்கங்கள், வந்த பாதையில் ஏற்பட்ட வழுக்கல்கள் பட்டறிவு, வரலாற்றுப் போக்கு போன்ற பல சிறப்புக் கூறுகளினடிப்படையில் தனித்தன்மையை மையமாக வைத்து வெறும் வரட்டிய கோட்பாடுகளுக்குள் அடைத்துக் கொள்ளாமல் இயன்றவரை நடைமுறை வழிவகைகளைச் செவ்வனே ஆராய்ந்து கண்டறிய வேண்டும். படிநிலைகளை அறிந்து உரிய செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் தேசியத்தின் வளர்ச்சி,எழுச்சி நிலையில் எதிர்கால குறிக்கோளையும் அதனை அடையும் செயல் முறைகளையும் வகுத்துக் கொள்வது அவசியம்.

முந்தைய நிகழ்வுகள் அமைப்புகள், ஆக்கக்கூறுகள், செயல்முறைச் சிக்கல்களில் ஏற்பட்ட தவறுகள் போன்றவற்றை நடுவு நிலையில் நின்று ஆராய்ந்து தெளிய வேண்டியது மிக இன்றியமையாதது.

ஆனால் இன்றைய கொள்கை, நடைமுறை போன்ற , அளவுகோல்களையே வைத்து முன்னைய போக்குகளைக் கணிப்பது தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும்.

கால இடைவெளி ,கருத்து வளர்ச்சி, சூழ்நிலை, இயல்பான தடைகள் இயலும் அளவுநிலை போன்ற அன்றைய தனிச் சிறப்புக் கூறுகளையும் (FACTORS)கணக்கில் எடுத்துக் கொண்டே உரிய குறை — நிறைகள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

தமிழீழ தேசியத்தின் குறிக்கோளாக தன்னுரிமை பெறுவது,தன்னாட்சிக்கான தன்னரசை நிறுவுவது போன்ற கோரிக்கையாக இருத்தல் வேண்டும். உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை என்பது தேசிய இன முழுச்சுயாட்சியாகும்.

இலங்கை அரசு கூறுபடாமைக்கு ஊறு இன்றித்தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இலங்கை அரசின் எண்ணமாக பிரதிபலிக்கின்றது.

பொதுவாகத் தன்னை அடக்கியாளும் அடிமை கொண்ட நாட்டின் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை அடைவது என்பது வேறு. அவ்வகையான சுதந்திரத்தைப் பெற்று குடியரசாக அமைக்கப்பட்ட நாட்டிலிருந்து — குறிப்பாக அரைகுறை கூட்டாட்சி முறை கொண்ட நாட்டிடம் ஒரு தேசிய இனம் சுயநிர்ணய உரிமை பெறுவது என்பது வேறு.

சுயநிர்ணய உரிமை என்றால் தன்னைப் பற்றி தானே தீர்மானித்து கொள்ளும் தன்னுரிமையாகும்.

சுயநிர்ணய உரிமையை கோருவது என்பது வேறு. நாட்டு பிரிவினை என்பது வேறு. இவை இரண்டும் சில சூழல் களில் காரணங்கள் ஒன்றாக கூட இருக்கலாம். ஆனால் தனி நாடாக அமைந்து தான் சுய நிர்ணய உரிமை அடைய வேண்டும் என்பதில்லை.

சுயநிர்ணய உரிமை பற்றி ஸ்டாலினின் என்பவரது மார்க்சிய விளக்கப்படி, ஒரு தேசிய இனம் அதன் உரிமையை, அது விரும்பும் வகையில் அமைத்துக் கொள்வது. அதனைத் தன்னாட்சியின் (AUTONOMY) அடிப்படையில் அமைத்துக் கொள்ளும் உரிமை; மற்ற நாட்டரசுகளுடன் கூட்டாட்சி உறவுகளை வைத்துக் கொள்ளும் உரிமை, முழுமையாக பிரிந்து போகும் உரிமை எனவும் பாகுபடுத்தலாம்.

நாட்டினங்கள் யாவும் இறையாண்மை (SOVEREIGNITY) கொண்டவை சம உரிமை பெற தகுதி உடையவை .

எனவே, சுயநிர்ணய உரிமை என்பது முற்றாக தனி நாடாக இயங்குவதை மட்டுமே குறிப்பிடுவதில்லை. இறையாண்மையும் சம உரிமையும் கூடிய தனி நாட்டினங்கள், அவற்றுக்கு ஊறு நேராமல் "மெய்யான கூட்டாட்சியில்" (WHOLESOME FEDERATION) இணைவதையும் உள்ளடக்கமாக — செயல் திட்டமாக கொண்டது.

கூட்டாட்சியில் இணைந்தாலும் அல்லது தேவை ஏற்படும் போது பிரிந்தாலும் ஒரு தேசிய இனம் முழுத்தன்னாட்சியின் — தன்னரசு அடிப்படையில் அதன் தேசிய வாழ்க்கையை அது விரும்பும்வகையில் அமைத்துக் கொள்வதே மூல உரிமை என கூறப்படுகிறது.

வேற்றுமைகளில் ஒற்றுமை காணுதல் என்பதே கூட்டாட்சிக் கொள்கையின் உயிர் நாடியாகும்.

தேசிய இனங்கள் அரசியல் பொருளியல், வரலாற்றுக் காரணங்களால் உந்தப்பட்டு, அரசியல் விழிப்பெய்துமானால் தங்களது தனி இனப்பண்புகளையும் மொழி சார்ந்த அரசியல் உரிமைகளையும் பேணிக் காப்பதற்கு தனித்தனி அரசுகளை உருவாக்கி கொள்வதற்கு முனையும்.

அப்போது அங்கு சுயநிர்ணய உரிமையுடன், மெய்யான கூட்டாட்சிக் கொள்கையும் உருவெடுக்கும். வாய்ப்பு ஏற்படும் போது ஒற்றையாட்சி முறையினை கொண்டு இயங்கும் அந்நாடு கூட்டாட்சி நாடாகும்.

மெய்யான கூட்டாட்சியில் இணைந்த நாடுகள் தனிநாடுகள் என்ற பெயரினை இழந்து நாட்டில் மாநிலங்கள் என அழைக்கப்படும். ரஷ்யாவில் அவை சோவியத்துகள் எனவும் சுவிற்சிலாந்தில் கான்டன்கள் எனவும், கனடாவில் மாகாணங்கள் எனவும்,அமெரிக்கா மாநிலங்கள் என்றும் பெயர் பெறுகின்றன.

ஒரு மொழியினம், ஒரு நிர்வாகம் என்ற அடிப்படையில் அமைக்கப்படாத மாகாணங்களின் நிலப்பகுதிகள், நாட்டின் விடுதலைக்குப் பின்னர் இயற்றப்பட்ட புதிய அரசமைப்பின் மூலமாக (மாநிலங்களாக) ஆக்கப்படுகின்றன. தன்னாட்சி உரிமை மறுக்கப்பட்டால் தனியாட்சி என்பதே வரலாற்று நிகழ்வாகும்.

பேராசிரியர் பொன்.சக்திவேல்

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சக்தி செய்திகள் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல்/பாடல்கள் 7.20 | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (ரொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | மங்கை | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி—மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஒப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | கொமடி நிகழ்ச்சி | வேலன் |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள் அன்பு மடல் 5.45 | அன்பு மடல் 5.45 |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | பாடல்கள்/இளந்தளிர் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கெட் | TO BE CONFIRMED | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | TO BE CONFIRMED | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | "24" |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | (அக்சன் சீரியல்) | அக்ஷன் சீரியல் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | இளைய கானம் |

# “தனிமனித அமைதியே உலக அமைதிக்கான அடித்தளம்”


## பேராசிரியர் உழவன் தங்கவேலு கூறுகிறார்

**உலக சமுதாய சேவை சங்கத்தின் உயர்பீட உறுப்பினரும், உளவளத்துறை நிபுணரும், ஆன்மீக வழிகாட்டியுமான பேராசிரியர் உழவன் எம்.தங்கவேலு அவர்கள், தமது உளவளப் பணிகளை இலங்கையிலும் விஸ்தரிக்கும் நோக்கில் இங்கு வருகை தந்திருந்தபோது எமது சுடர்ஒளிப் பத்திரிகை நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

செவ்வி கண்டவர்: கு.குணறுபேஷ்

**கேள்வி:– மனவளக்கலை என்றால் என்ன?**

பதில்:– மக்கள் அனைவரும் இன்பமாக வாழவே விரும்புகின்றனர். எல்லாம் வல்ல இறையாற்றலின் வெளிப்பாடான இயற்கையில் எல்லாம் இன்பமயமாகவே உள்ளன. விஞ்ஞானமோ மிகவும் வளர்ச்சியுற்று மனிதர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறது. இருப்பினும் மனித குலம் உடலால், மனதால், சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளால் பொரும்பாலும் தொடர்ந்து துன்பங்களையே அனுபவித்து வருகிறது.



தியானப்பயிற்சி

இந்த துன்பங்களைப் போக்கி உலக மக்கள் அனைவரும் உடல் நலமும், மனவளமும் பெற்று அறிவிலே உயர்வு பெற்று மனநிறைவுடன் உன்னதமான சமுதாய அமைப்பில் வாழ ஏற்ற ஒரு ஆன்மீகக் கல்வியே மனவளக்கலை எனப்படுகின்றது.

**கேள்வி:– இலங்கை விஜயத்தின் நோக்கம் என்ன?**

பதில்:– எட்டு வருடங்களுக்கு முன்பு இலங்கையிலிருந்து இந்தியா வந்து இத்துறையில் பயிற்சி பெற்ற பி.எஸ்.செல்வரட்ணம் அவர்களின் அழைப்பின் பேரில் மனவளக் கலையை இங்கும் பரவச் செய்ய பணி செய்பவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காகவே இங்கு வந்துள்ளேன் .

**கேள்வி:– இலங்கை மக்களைப் பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

பதில்:– இலங்கை என்பது ஓர் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய நாடு. இலங்கை வாழ் மக்கள் அன்பும், பாசமும், கருணையும் நிறைந்தவர்கள். தமிழை தமிழாக இவர்கள் பேசுவதைக் கேட்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

**கேள்வி:– மனவளக்கலைபற்றியும் அதில் உங்கள் அனுபவம் பற்றியும் கூறமுடியுமா?**

பதில்:– இந்தியாவில் மனவளக்கலை மிக வேகமாகப் பரவிக்கொண்டு வருகின்றது. பாடசாலை மாணவர்கள் தொடக்கம், ஆசிரியர், பெற்றோர் வரை இதில் பயிற்சி பெறுகின்றனர். இன்றைய மாணவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள். நாட்டின் தலைவர்கள் மனநிலையிலே நிறைவு பெற்றவர்களாக இருந்தாலே அவர்களினால் வழி நடத்தப்படுபவர்கள் சிறப்பான முறையில் வழிநடத்தப்படமுடியும். எனவே தான் நாளைய தலைவர்களான மாணவர்களுக்கு இன்று நாங்கள் மனவளக்கலையில் பயிற்சி கொடுக்கின்றோம்.

காவல் பணி புரிகின்ற 8600 காவல் துறையினர் எங்களிடம் பயிற்சி பெறுகின்றனர். இதனால் இன்று அவர்கள் நாட்டு மக்களுக்கு சிறந்த காவல் பணிகளைச் செய்து வருகின்றனர். கடந்த காலங்களிலே தாங்கள் காவல் கடமைக்கு விரோதமாகச் செய்த ஒவ்வொரு காரியங்களுக்கும் இன்று மனம் வருந்தும் அளவுக்கு இந்த மனவளக்கலை அவர்களை பக்குவப் படுத்தி இருக்கின்றது. இது மனவளக் கலைக்குக் கிடைத்த வெற்றி என்றே கூறவேண்டும்.

வாழ்வில் ஓர் அமைதி சமாதானம் இன்றி குழம்பிய மன நிலையுடன் பைத்தியம் பிடித்தவனைப்போல அலைந்து திரிந்த எனக்கு ஓர் மனஅமைதியையும் வாழ்வில் சமாதானத்தையும் தந்தது மனவளக்கலைதான் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கேள்வி:– உங்கள் மனவளக்கலை நிலையத்தில் எப்படிப்பட்டவர்கள் பயிற்சி பெறுகின்றனர்?**

பதில்:– இந்தியா முழுவதும் 225 கிளைகள் உண்டு. அங்கெல்லாம் அரச தொழில் சார்ந்தவர்கள், நிறுவனத் தலைவர்கள், சாதாரண தொழில் செய்யும் இளைஞர்கள், யுவதிகள், குடும்பத்தவர்கள், மாணவர்கள் என்று அநேகர் பயிற்சி பெறுகின்றனர்.

காரணம் என்னதான் வாழ்வில் நிறைவான செல்வங்கள் இருந்தாலும் மனதில் ஓர் அமைதி, சமாதானம் இல்லை என்றால் அவர்களுடைய வாழ்வு இருண்டவாழ்வாகவும் சஞ்சலம் நிறைந்த வாழ்வாகவுமே காணப்படும். இன்று மனதுக்கு சாந்தி, சமாதானம் தேடி பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் இந்த மனவளக் கலையில் பயிற்சி பெற்று மனதை வளப்படுத்திக் கொண்டு அதன் மூலம் தங்கள் வாழ்வையும் வளப்படுத்தி சாந்தி சமாதானத்துடன் வாழ்கின்றனர்.

**கேள்வி:– மனவளக்கலையின் மூலம் நோய்களைத் தீர்க்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றனவா?**

பதில்:– ஆம். இன்று வைத்தியத்துறை எவ்வளவுதான் வளர்ச்சி அடைந்திருந்தாலும் 65 சதவீதமான வியாதிகள் தீர்க்க முடியாத வியாதிகளாகவே காணப்படுகின்றன. அவ்வாறுதீர்க்கப்படமுடியாத வியாதிகள் கூட இந்த மனவளக்கலை மூலம் தீர்க்கப்பட்டு விடுகின்றன. பலர் மனவியாதிகளிலிருந்து விடுபட்டு இன்று குடும்பங்களுடன் இணைந்து ஆரோக்கியமாக மகிழ்வுடன் வாழ்கின்றார்கள்.

மன உழைச்சல் காரணமாக மனவளம் பாதிக்கப்பட்டு மனநோய்களுக்கு உட்பட்டவர்கள் கூட இந்த மனவளப் பயிற்சியைப் பெற்று அதன் பின்பு தங்களாலும் வாழமுடியும் தாங்களும் சமூகத்தின் ஓர் உறுப்பினர்கள் தான், தாங்களும் வாழவேண்டியவர்களே என்று மனதில் உறுதி கொண்டு தங்கள் தனிமனித அமைதி மூலம் குடும்ப அமைதிக்கும் குடும்ப அமைதி மூலம் சமுதாய அமைதிக்கும் வழிசெய்கிறார்கள்.

**கேள்வி:– மனவளக்கலையில் பெண்களின் ஈடுபாடு எவ்வாறு காணப்படுகின்றது?**

பதில்:– பெண் இன்றி இந்தப் பூமி இல்லை. எந்த ஒரு காரியத்துக்குப் பின்னும் பெண்களின் பங்களிப்பு தங்கியிருக்கின்றது. எனவே ஏகப்பட்ட பெண்கள் இந்த மனவளக் கலையில் பயிற்சி பெறுகின்றனர். பெண்களுக்குகென தனியான பெண் பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனர். பெண்களுக்கென தனியான நேரத்தில் மனவளக் கலை பயிற்சி நடை பெறுகின்றது.

இதில் ஆசிரியைகள் வெகுவாகப் பங்கு கொள்கின்றனர். காரணம் பாடசாலைகளில் தங்கள் மாணவர்களை சரியான பாதையில் நடத்திச் செல்லவும் மாணவர்களின் மனோ நிலையினை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளவும் ஆசிரியைகள் பயிற்சி பெறுகின்றனர்.



- பேராசிரியர் உழவன் எம்.தங்கவேலு -

குடும்பம் ஒன்று சீராக செயற்பட அதில் தாய்க்குலத்தின் பங்களிப்பு பிரதானமான இடத்தைப் பெறுகின்றது. எனவே தங்கள் குடும்பங்களை நல்ல முறையில் அமைத்துக் கொள்வதற்காக குடும்பப் பெண்கள் இந்த மனவளக்கலையில் பயிற்சி பெறுகின்றனர்.

**கேள்வி:– மனவளக்கலை தொடர்பாக உங்கள் இலக்குகள் நோக்கங்கள் என்ன?**

பதில்:– ‘யான் பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம்’ என்பது போல மனவளக்



கலையினூடாகதனிமனிதனாகிய எனது மன அமைதி எனது குடும்ப அமைதியாகின்றது. அது போல் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தில் அமைதி சமாதானத்துடன் வாழ வேண்டுமென்று விரும்புகின்றேன். இந்தியாவில் 225 கிளைகளை நிறுவி உள்ளதுபோல இலங்கையிலும் கொழும்புப் பகுதியிலும் மலையகப் பகுதியிலும் யாழ்ப்பாணம் மட்டக்களப்புப் பகுதியிலும் இதனை விஸ்தரித்து மனவளக் கலையை எல்லோரும் கற்றுக்கொண்டு பயன்பெறவேண்டும் என்ற நல்ல நோக்கங்கள் எம்மிடத்தில் உண்டு.



இதற்கு முன் ஆயத்த நடவடிக்கைகளாக இலங்கையிலிருந்து பெண்களும், ஆண்களுமாக அநேகர் இந்தியாவிற்கு வந்து பயிற்சி பெற்றிருக்கின்றனர். ஆகவே இவர்களைக் கொண்டு இதனை விஸ்தரிப்பது எங்களுக்கு சாதகமானதாகவே காணப்படுகின்றது. பயிற்சி பெற்ற இலங்கையர்களுக்கு மனவளக்கலை இலங்கை முழுவதும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனும் சிந்தனையில் வெகுவாகவே ஆர்வம் காட்டியும் வருகின்றனர்.

**கேள்வி:– மனவளக்கலை இந்தியாவில் எவ்வாறான சாதக பாதக நிலைமைகளை தோற்றுவித்து இருக்கின்றது?**

பதில்:– பாதக நிலைமை எனும் அளவுக்கு எதுவுமில்லை. காரணம் மனிதனை கெட்டழிக்கும் ஒரு செயற்பாடாக இது இல்லாததனால் சமூகத்தின் மத்தியில் இது சாதகமான நிலைமைகளையே தோற்றுவித்திருக்கின்றது.

இதனால் இந்த மனவளக்கலையை இந்தியாவில் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஒரு பாடமாக இணைத்துக் கொள்ளும் அளவுக்கு மனவளக்கலை இந்தியாவில் வாய்ப்பான நிலைமைகளை தோன்று வித்திருக்கிறது.

இந்திய நாட்டிலே ஒரு இஸ்லாமியரை ஜனாதிபதியாகவும் ஒரு சீக்கியரை பிரதமராகவும் தெரிவு செய்யும் அளவுக்கு இந்திய மக்களுடைய மனதில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதென்றால் காரணம் மனவளக்கலையில் ஏற்பட்ட வெற்றி அல்லது பக்குவம் என்றே கூறவேண்டும். அந்த அளவிற்கு மனவளக்கலை இந்தியாவில் முன்னேற்றமடைந்துள்ளது.

**கேள்வி:– இன்று இளைஞர் சமுதாயம் தோல்விகளினால் துவண்டுபோய் ஈற்றில் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு செல்வதற்குக் காரணம் மனதில் ஏற்படும் பாரிய பாதிப்புத்தான். இதிலிருந்து இளைஞர்களை எவ்வாறு மீட்டுக் கொள்வது இதற்கு மனவளக்கலையில் ஏதாவது பரிகாரங்கள் உண்டா?**

பதில்:– ஒரு மனிதன் எப்போது தன் உயிரை தானே மாய்த்துக் கொள்ள வேண்டும் எனும் முடிவுக்கு வருகின்றான்? அவனது மனதிலே உறுதிதளரும் போதும், நம்பிக்கை இழக்கும் போதும், மனம் குழம்புகின்றபோதும் எடுக்கின்ற சடுதியான தீர்மானமே தற்கொலை எனப்படுகின்றது.

இதிலிருந்து இளைய தலைமுறையினை மீட்க வேண்டுமேயாகில் மனதை உறுதிப்படுத்தவும், மன அமைதியைப் பேணவும், மனதை வளப்படுத்தவும் இளம் சமுதாயத்துக்கு கற்றுக் கொடுத்து உறுதியான மனோ நிலையினைப் பேண வழிசெய்ய வேண்டும்.

இதற்காக அவர்களுக்கு மனவளக்கலை கற்றுக் கொடுக்கப்படும் போது அவர்கள் சமுதாயத்தில் உறுதி தளராமல் வாழுவதற்கு மனவளக்கலை அவர்களுக்கு வழி செய்கின்றது.

இவ்வாறு விரக்தியின் விளிம்பில் நின்றவர்களும், சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும் மனவளக்கலை பயின்று இன்று வளமுடன் வாழ்கின்றனர். இவ்வாறான விரக்தி மனோ நிலைக்கும், தற்கொலை உணர்ச்சிக்கும் மனவளக் கலையில் பரிகாரம் உண்டுஎன்பதை உறுதியாகக்கூறுகின்றேன்.

இவ்வாறு இவைகள் தவிர்க்கப்பட வேண்டுமேயாகில் இலங்கையில் மனவளக்கலை பாடசாலையில் ஒருபாடமாக இணைக்கப்படுவது நல்ல விளைவுகளைத்தரும்.

**கேள்வி:– இலங்கையிலே கடந்த இரண்டரை தசாப்தங்களாக யுத்த சூழலில் வாழ்ந்த**

(22 ஆம் பக்கம் பார்க்க)

# செவ்வாயை வெற்றி கொள்ளும் மனிதன்

அபூர்வமாக ஒரு காரியத்தை செய்யமுற்படும் போது அதனை "தலையால் நடக்க முயலும் முயற்சி" என்று கூறி நகைப்பது மானிட உள்ளத்தின் இயல்பு.

இதே வண்ணமாகவே சந்திரனில் மனிதன் காலடி பதிக்கப் போகின்றான் என்றபோது தலையால் நடக்கும்முயற்சி என்று ஏளனம்செய்து சிரித்தனர். ஆனால் மனிதன் செயல் வீரனாக அதனை செயற்படுத்திக் காட்டியபோது உலகமே திகைத்தது.

இன்றைய விஞ்ஞானிகளின் உறுதியான கூற்று மனிதன் செவ்வாயில் இறங்குவது நிச்சயம் என்பதே.

1976இல் முதன் முதலாக வைகிங் விண்கலம் ரோபோக்களை அனுப்பி செவ்வாய்க் கிரகத்தை ஆராய முற்பட்ட போது அதிர்ஷ்டம் வெகு விரைவாகவே மனிதனை செவ்வாயில் இறக்கி விடும் என உலகம் ஆவலுடன் எதிர் பார்த்தது.

செவ்வாய்க்கு மனிதனின் பயணம் அவ்வளவு இலகுவானதல்ல. 25 வருடகாலத்தில் 12 க்கும் மேற்பட்ட தடவைகள் செவ்வாய் செல்ல விண்கலங்கள் முயன்ற போதும் 1997இல் 'மார்ஸ் பாத் பைண்டர்' மாத்திரமே முதலில் செவ்வாயில் தரைஇறங்கியது. அதை அடுத்து 'ஒபர் சூனிட்டி' தரை இறங்கியுள்ளது.

ஏகப்பட்ட தோல்விகளின் மத்தியில் மனிதனை விண்கலத்தில் ஏற்றுவதென்பது அபாயகரமானதாகவே உள்ளது.

ஆனால் மனித குலம் செவ்வாயை ஆராயும் முயற்சியை இன்னும் விட்டுவிடவில்லை. செவ்வாயில் உயிரினங்கள் உள்ளதா, அங்கு மனிதன் வாழக் கூடியசாத்தியக் கூறுகள் உண்டா, அங்கு நீர் நிலைகள் உள்ளனவா என்பது குறித்து தீவிரமாக ஆராய்கின்றனர்.

1976இல் வைகிங் விண்கலம் செவ்வாயில் இறங்கியவுடன் உலகம் பலத்த எதிர்பார்ப்புக்குள்ளாகியது. அதாவது 2000 ஆம் ஆண்டுக்கு முன் மனிதன் செவ்வயில் இறங்கி விடுவான் என்பதே அந்த எதிர்பார்ப்பு.

சந்திரனைப்போலன்றி செவ்வாய் பிரயாணத்தில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று கோடான கோடிப் பணம். இது மனித சமுதாயம் ஏற்றுக்கொண்ட சவால் ஆனதால் பணம் ஒரு பிரச்சினையாக தோற்றம் பெறுவது தடுக்கப்பட்டது.

விண்வெளி வீரர்களின் விண்வெளிப் பயணத்திற்கான மாபெரும் தடையாக உள்ள மற்றொன்று, விண்வெளியிலுள்ள எடையற்ற தன்மையும், செவ்வாயில் குறைந்த அளவில் உள்ள ஈர்ப்பு விசையுமாகும்.

செவ்வாயின் ஈர்ப்பு விசையானது பூமியின் ஈர்ப்பு விசையின் மூன்றிலொரு பங்காகவே காணப்படுகின்றது. இது விண்வெளி வீரர்களின் உடல் தசைகளை அழித்திடக்கூடியது.

எனவே செவ்வாயின் ஈர்ப்பு விசை போன்ற ஒன்றை பூமியில் உருவாக்கி விண்வெளிவீரரைப் பரிசோதித்து வெற்றி பெற்றால் மாத்திரமே விண்வெளிப்பயணம் சாத்தியமாகும்.


ஆனால் செவ்வாயின் ஈர்ப்புவிசை மாதிரியே இங்குஇன்னும்உருவாக்கப் படவில்லை.

பிரபஞ்ச வெளியில் செவ்வாயைச் சென்றடைவதற்கு மனிதன் ஐம்பது கோடி மைல்கள் பிரயாணம் செய்ய வேண்டி உள்ளது. இதனைக் கடந்து மனிதன் செவ்வாய்க்குச் செல்லும் போது அங்கு உள்ள கதிர் வீச்சை சமாளிக்க வேண்டியும் உள்ளது.

செவ்வாய் கிரகத்தில் பூமியில் உள்ளது போன்று காந்த மண்டலங்கள் இல்லை. இந்தக் காந்த மண்டலங்களே பிரபஞ்ச வெளியிலிருந்து வரும் தீயகதிர்களை தடுத்து வேறுபக்கம் திருப்புகின்றன. இதனால் தீங்கு விளைவிக்கும் கதிர் வீச்சினாலும் மனிதனுக்கு அங்கு தீங்கு உண்டு.

எனவே செவ்வாயில் விண் வெளிவீரர்களுக்கான பாதுகாப்பு அதிக கனதியான உலோகங்களாலேயே மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இக்கனதியான உலோகம் 50 கோடி மைல் பயணத்துக்கு தாக்குப் பிடிக்குமா என்பது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.



கிரகங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யும்பிரலஆராய்ச்சியாளரான நாஸா விஞ்ஞானி 'டேவிட் வில்லியம்ஸ்' செவ்வாய் குறித்து கூறுகையில்" இன்னும் பத்து வருடங்களில் நாம் அனுப்பிய கலங்களிலிருந்து வரும் செய்திகளை பொறுத்தே மனிதன் செவ்வாயில் இறங்கு குறித்து தீர்மானிக்க முடியும்"என்று கூறுகின்றார்.

2025 ஆம் ஆண்டு என்பது தான் மிகக்குறுகிய காலத்தில் இப்பணி நிறைவு பெறக் கூடிய ஆண்டு என்றும் டேவிட் வில்லியம்ஸ் கூறுகின்றார்.

செவ்வாய்க் கிரகம் பற்றி மாறுபட்ட கருத்துக் கூறும் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியைச் சேர்ந்த முல்லார்ட் விண்வெளி ஆய்வுகூட விண்வெளி விஞ்ஞானி டாக்டர் ஆண்ட்ரு கோட்ஸ் எம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்தால் இப்படிப்பட்ட பயணத்திற்கு முயற்சி செய்வதே அபத்தம் என்கிறார். செவ்வாயில் மனிதன் காலடி பதிப்பது முடியாத காரியம் என்றும் கூறுகின்றார். ரோபோக்களை அனுப்பி முதலில்ஆராய்வோம்என்றும், ஐயாயிரம் கோடி ரூபா செலவில் 600 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' அனுப்பிப் பரிசோதிக்கலாம் என்றும் கூறுகின்றார்.

ஆனால்நாஸா விடுவதாயில்லை. மனித குலத்திற்கு பெருமை சேர்க்கும் அடுத்த பணி செவ்வாயில் மனிதன் கால் பதிப்பதுதான்! அதைசெய்யாமல் ஓயமாட்டோம் என்கின்றனர்.

துணிவுள்ள மனிதனுக்கு வானமும் வசமாகும் என்பதுடன் செவ்வாயில் மனிதன் காலடி பதிப்பது நிச்சயம் என்பதுமே வெளிப்படை உண்மையாகும்.

**- பாபு -**

---

**இவ்வார 'ராசிபலன்' 28-06-2004, 04-07-2004**

**பொ. சந்திரன்**

# ராசி பலன்

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சூரியன் சனி |
| | செவ்வாய் பூசம் சனி<br>சுக்கிரன் மிருகசீரிடம் செவ்<br>புதன் பூசம் குரு<br>சூரியன் திருவாதிரை+புனர்பூசம் ராகு+குரு<br>குரு பூரம் சுக்கிரன்<br>சனி திருவாதிரை ராகு | | செவ் புதன் |
| | | | குரு |
| | | கேது | |

ஆனி 14 முதல் ஆனி 20 வரை

சந்திர துலாம் முதல் தனு வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

இராசிக்குரிய செவ்வாய் நாலாம் வீட்டில் நீசமானது. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல்ஆரோக்கியம் பாதிக்கலாம். அங்கு புதன் இருப்பதால் பக்க உதவிகள் கிடைக்கும். மேலும் சனியின் நட்சத்திரமான பூசத்தில் இருப்பது இன்னும் துன்பத்தில் ஆழ்த்தக்கூடும். ராசியில் ராகு இருப்பதும் சரியில்லை. மன அமைதி பாதிக்கலாம். தேவையில்லாத பிரச்சினை தேடிவரலாம். குரு ஐந்தில் இருந்து ராசியைப்பார்ப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. இருப்பினும் 7 இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (3,6) உரிய புதன் நாலில் இருப்பதும் ஏற்கனவே நாலாம் வீடு பலவீனமாக இருப்பதால் வீடு, வாகனம், செலவை ஏற்படுத்தலாம். தொழிலுக்குரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில் முன்னேறும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசிரியம் 1,2**

ராசிக்குரியவர் ராசியிலேயே இருப்பதால் எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. சுக்கிரன் செவ்வாய் சாரம் பெற்று இருப்பது பரவாயில்லை. (2,5) உரிய புதன் மூன்றில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. குழந்தைகள் விளையாட்டில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,12) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். ஏழாம் வீடு சுத்தமாக இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்கும். தொழிலுக்குரிய சனி இரண்டாம் வீட்டில் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். இருப்பினும் சூரியனோடு சேர்ந்து இருப்பதால் அரச தொடர்பு இருக்கும். ராசிக்கு இரு புறமும் கெட்ட கிரகங்கள் இருப்பது பல தடைகள் வர வாய்ப்புள்ளது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் இரண்டில் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இருப்பினும் சனியின் சாரம் பெற்று இருப்பது நல்லதல்ல. அத்துடன் இரண்டாம் வீட்டில் செவ்வாய் நீசப்பட்டு இருப்பதும் கூடாது. கையில் பணம் இருக்காது. சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். வீடு, வாகனம் லாபம் தரும். (7,10) உரிய குரு மூன்றில் இருப்பது திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழிற்துறையில் பின்னடைவு வரவாய்ப்பு உள்ளது. ராசியில் சனியும் சூரியனும் இணைவதும் பிரச்சினைதான். ராசியில் இருவர், ராசியோடு இருவர் இருப்பது பக்க உதவி கிடைக்கும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் துலாம் முதல் தனுவரை சஞ்சரிப்பதால் அதாவது நாலுமுதல் ஆறுவரை (4 - 6) ஆரம்பத்திலும் மத்தியிலும் நல்ல பலனும் வார இறுதியில் தீயபலனையும் தரக்கூடும். ராசியில் செவ்வாய் நீசமாக இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். இருப்பினும் புதன் ராசியில் இருப்பது புதுத் தெம்பைக் கொடுக்கும். (4, 11) உரிய சந்திரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும் மூத்த சகோதரத்துக்கு நல்லது.. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். இரண்டுக்குரிய சூரியன் 12 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (7,8) உரிய சனி 12 இல் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். ஆனால், இரண்டில் குரு இருப்பது சாதகமான நிலைமை.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 11 இல் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். மேலும் ஆரம்பத்தில் ராகுவின் சாரத்திலும் பின் குருவின் சாரத்திலும் சஞ்சரிப்பதால் வார ஆரம்பத்தில் மந்தமான பலனையும் வார இறுதியில் சிறப்பான பலனையும் கொடுக்கும். (2,11) உரிய புதன் 12 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களால் செலவு இருக்கும். மூத்த சகோதரத்துக்குக் கூடாது. (4,9) உரிய செவ்வாய் 12 இல் நீசமாக இருப்பதால் பெற்றோருக்கு நல்லதல்ல . வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். (6,7) உரிய சனி 11 இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். பத்துக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழிற்துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11 இல் இருப்பது எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. இருப்பினும் சனியின் சாரத்தில் இருப்பது நல்லதல்ல. மேலும் அங்கு நீசப்பட்ட செவ்வாய் இருப்பதும் பிரச்சினைதான். (2,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. தெய்வீகபக்தி வளரும். (4,7) உரிய குரு 12இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். பத்தாம் சூரியன் புதன் 11 இல் இருப்பினும் 10 இல் சூரியன், சனி, இருப்பதால் தொழிற்துறையில் போட்டி இருக்கும் அரச உதவி கிடைக்கலாம். ராசியை எந்தக் கிரகமும் நோக்காததால் மன அமைதி இருக்கும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிநாதன் சுக்கிரன் தனது இன்னுமொரு வீட்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ராசியில் கேது இருப்பதால் மன அமைதி பாதிக்கலாம். மேலும் செவ்வாயின் சாரத்தில் இருப்பது செவ்வாய் நட்புக் கிரகமான படியால் பரவாயில்லை. (2,7) உரிய செவ்வாய் 10 இல் நீசமாக இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கும். 7 (இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தரும். பத்தாம் வீட்டில். 9இக்குரிய புதன் இருந்தாலும் செவ்வாய் நீசமாக இருப்பதால் தொழிற்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

ராசிநாதன் செவ்வாய் ஒன்பதில் இருப்பது அதுவும் நீசமாக எட்டாம் அதிபதியுடன் கூடி சங்கடமான நிலை அத்துடன் சனியின் சாரத்தில் எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.(2,5) உரிய குரு 10 இல் குரு இரண்டாம் வீட்டைப்பார்ப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பத்துக்குரிய சூரியன் எட்டில் சனியோடு இருப்பினும் பத்தில் குரு இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். ராசியை சுக்கிரன் பார்ப்பது சிறப்பானது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9 இல் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. மேலும் சுக்கிரசாரம் பெற்று இருப்பது விசேஷமானது. பிரயாணவாய்ப்பு உண்டு. ஆலய வழிபாடு அமையும். (2,3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குரு நாலாம் ஆதிபத்தியம் பெறுவதால் வீடு, வாகனம் லாபம் தரும். தாய் நலம். (7,10) உரிய புதன் 8 இல் இருப்பதால் தொழிற்துறையில் பின்னடைவு வரலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 7இல் சூரியனும் சனியும் இருப்பது குடும்பத்தில் அமைதி இருக்காது. வெளியில் தொல்லை அல்லது தலையீடு இருக்கக்கூடும். ராசியை சூரியன், சனி பார்க்கினும் குரு பார்த்தால் தோஷ நிவர்த்தியுண்டு.

**மகரம்: உத்தரடாம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது கெட்ட கிரகங்கள் 6இல் நல்ல பலனைத்தரும். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இருப்பினும் ராகுவின் சாரத்தில் இருப்பது நல்லதல்ல. இரண்டாம் வீட்டை குருபார்ப்பதால் கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 7 இல் நீசமாக இருப்பதாலும் 6 ஆம் அதிபன் புதனோடு இருப்பதாலும் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் தொல்லை வரவாய்ப்பு உண்டு. 7 ஆம் வீடு பலவீனமாக இருப்பதாலும் குரு 8 இல் மறைவதாலும் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழிற்துறை முன்னேறும்.

**கும்பம்: அவிட்டம்3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

ராசிக்குரிய சனி ஐந்தில் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். மேலும் ராகுவின் சாரத்தில் இருப்பது நல்லதல்ல. ஆனால், குரு ராசியைப் பார்ப்பது நல்லது. (2,11) உரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (4,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் பெற்றோருக்கு நல்ல பலன் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். தெய்வீக அருள் கிட்டும். பத்துக்குரிய செவ்வாய் 6 இல் நீசமாக இருப்பதால் தொழிற்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. செவ்வாய் 6 இல் நல்ல பலனைக் கொடுக்கும். ஆனால், நீசமாக இருப்பதால் வேலை செய்யாது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 6 இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையாது. தொழிற்துறையில் பின்னடைவு வர வாய்ப்புள்ளது. இருப்பினும் சுக்கிரன் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லது. (2,9) உரிய செவ்வாய் ஐந்தில் நீசமாக இருப்பது கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4,7) உரிய புதன் 5 இல் இருப்பது நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். ஆனால், குருவையும் பத்தாம் வீட்டையும் ராசியையும்சனி, சூரியன் பார்ப்பது நல்லதல்ல. ராசியில் இராகு இல்லாதிருப்பது மன அமைதியைக் கொடுக்கும்.



'கஜேந்திரா' - விஜயகாந்த், லயா-

# கமலுடன் மாளவிகா

வசூல்ராஜா படத்தில் மாளவிகா வும் நடிக்கிறார். இவர் அன்னாளி மாள விகா இல்லை. அம்புலி மாளவிகா. நான் கமலுக்கு இன்னொரு ஜோடி யாகவும் என்று ஜம்பமாக சொல் லிக்கொண்டு இருக்கிறாராம். சினேகா என்று நினைத்துக் கொண்டு மாளவிகா பின்னால் கமல் சுற்றுவது போல் அமைந்திருக்கிறதாம் கதை. அப்போ நான்கு உதடுகளும் முத்தமும் கமலுக்கு உத்தரவாதம். வசூல்ராஜா படத்தில் கமலின் அப்பாவாக நடிக்க பாலச்சந்தரைக் கேட்டார்கள். யாரும் ஒப்புக்கொள் ளாததால் கடைசியில் நாகேஷ் நடிக்கிறாராம். அம்மாவாக நடிப்பவர் ரோகிணி அட்டங்காடி. இவர் காந்தி படத்தில் கஸ்தூரிபாவாக நடித்தவர். அதிருக்கட்டும். கமல் ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிடப் போகிறார். அந்தக் கவிதைத்தொகுப்புக்கு படம் வரைய இருப்பவர் சரண்.



# தெலுங்கிலிருந்து தமிழில் 'கஜேந்திரா'

விஜயகாந்த் நடித்து வரும் கஜேந்திரா ஆந்திராவில் வெற்றி பெற்ற சிம்மாத்ரீ என்ற தெலுங்கு படத்தின் தழுவல். காதல், வீரம், பாசம், நகைச்சுவை ஆகிய அனைத்து அம்சங்களும்கலந்த கதை இது.

90 நாள் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி, தொடர்ந்து 90 நாட்கள் நடைபெற்றுள்ளது.

வெளிப்புறப்படப்பிடிப்பு ஹைதராபாத், ராஜமுந்திரி, தலக்கோணம், திருவனந்தபுரம்உட்படபல இடங்களில் நடைபெற்றது.

படத்தின் முக்கிய காட்சிகள் ராஜமுந்திரியில் படமாக்கப்பட்டன. 5ஆயிரம் துணைநடிகர்– நடிகைகள் கலந்துகொண்டு நடித்தனர். 6 காமிராக்கள் பயன்படுத்தப்பட்டன.

விஜயகாந்த் தலைகீழாகத் தொங்கியபடி எதிரிகளுடன் மோதும் சண்டைக் காட்சி, 9 நாட்கள் 6 காமிராக்கள் மூலம் படமாக்கப்பட்டன.

படத்தின் உச்ச சண்டைக்காட்சி, மிகப்பிரமாண்டமான முறையில் 14 நாட்கள் படமானது.

விரைவில் திரைக்கு வர இருக்கும் இந்தப்படத்துக்கு தேவா இசையமைத்திருக்கிறார். ஒளிப்பதிவு பிரதாப்,எடிட்டிங் கே.தணிகாசலம், லியாகத் அலி வசனம் எழுத, திரைக்கதை– டைரக்ஷன் சுரேஷ்கிருஷ்ணா. விஜயகாந்த் ஜோடியாக லயாவும், மும்பை அழகி புளோராவும் நடித்துள்ளனர். இவர்களுடன் ராதாரவி, சரத்பாபு, ரமேஷ்கண்ணா,நிழல்கள் ரவி,வினுச்சக்கரவர்த்தி, மும்பை வில்லன்கள் ஹகத்பேடி, ராஜ்கபூர்,ராஜீவ், சேதா ஆகியோரும் நடித்துள்ளார்கள்.


# பொலிஸ் அதிகாரியாக நெப்போலியன்

துணிச்சல் மிக்க பொலிஸ் அதிகாரியாக நெப்பேலியன் தோன்றும் படம் ''ரிமோட்'' இதில் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் அறிஞர் அண்ணா மகன் டாக்டர் சி.என்.ஏ.பரிமளம் நடிக்கிறார். ஷோபனாவின் சிஷ்யை ரேவதி குமார் பரத நட்டியம் ஆடியுள்ளார். பாண்டத்ரன் இசை அமைக்க எம்.என். ராஜா எடிட்டிங் செய்கிறார். பி.எஸ்.தரன் ஒளிப்பதிவு செய்து இணைஇயக்குனராகப் பணி புரிகிறார். பா.விஜய், தாமரை, ராஜன்சர்மா ,கார்வண்ணன் ஆகியோர் பாடல்கள் எழுதுகின்றனர்.லலிதாமணி,பாலகுமார் நடனப்பயிற்சி அளிக்கிறனர். விக்னேஷ் வசனம் எழுத எழுத்தாளர் பாலகுமாரன் திரைகதை அமைப்பதில் உதவி செய்கிறார்.

விரைவில் திரைக்கு வரும் ''ரிமோட்'' படத்தின் கதை,திரைக்கதையை கார்வண்ணன் எழுதி இயக்குகிறார்.

# ஹரியின் 'ஐயா' படத்தில் சரத்

'சாமி' வெற்றிப்படத்தை அடுத்து கவிதாலயா நிறுவனம் மீண்டும் ஹரி இயக்கத்தில் ஒரு புதிய படம் தயாராகிறது. இந்தப்படத்துக்கு ''ஐயா'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.இதில் சரத்குமார் தந்தை மகனாக இரட்டை வேடங்களில் நடிக்கிறார்.அவருக்கு ஜோடியாக 2 புதுமுகங்கள் நடிக்கின்றார்கள். இதற்கான தேர்வு நடைபெறுகிறது.'சாமி' வெற்றிப்படத்தை இயக்கிய ஹரி இந்தபடத்தின் கதை,திரைக்கதை ,வசனம் எழுதி இயக்குகிறார். ப்ரியன் ஒளிப்பதிவு செய்ய, வி.டி. விஜயன் எடிட்டிங் செய்ய, கலை:கே.கதிர்,ஸ்டண்ட்:சூப்பர் சுப்ராயன், நடனம்:கல்யாண், ராஜிகந்தரம், தயாரிப்பு: பிருந்தா புஷ்பாகந்தசாமி. படத்தில் பல முன்னனி நடிகர் நடிகைகள் நடிக்க படப்பிடிப்பு ஆகஸ்ட் மாதம் இறுதியில் தொடங்குகிறது.



# 'நியூ' தோல்வி அடையுமா?

நியூ படத்தின் தெலுங்குப்பதிப்பான நானி படம் தோல்வி அடைந்ததால் நியூ படம் வெளிவருவதற்கு முன்பாகவே அதன் ரிசல்ட் பற்றி வீண் சர்ச்சைகள் கோலிவுட்டில் எழுந்துள்ளன. இதனால் கொதித்துப்போயுள்ளார் எஸ்.ஜே.சூர்யா.

மேலும் அவர் கூறியதாவது: தெலுங்கில் நானி ஓடாததால் தமிழிலும் நானி ஓடாது என்பதை நான்கடுமையாகக் கண்டிக்கிறேன். ஒரே இயக்குனர் இயக்கிய முதல்வன் முதலில் இந்தியில் எடுக்கப்பட்டதால் தமிழில் அதன் நிலமை என்னவாகியிருக்கும்? பிரியமான தோழி தெலுங்கில் பெரிய ஹிட். தமிழில் ஓடாதது ஏன்? தமிழிலும், தெலுங்கிலும் பிரமாதமாக போன குஷி இந்தியில் சரியாகப் போகவில்லையே? இதற்கெல்லாம் பதில் சொல்ல நான் தயாராக இல்லை.

விநியோகஸ்தர்கள் நியூ படம் சம்பந்தமாக பிரச்சினை செய்வதாக வீண் வதந்திகளை சிலர் வேண்டுமென்றே பரப்பி விடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை எனது விநியோகஸ்தர்கள் யாருமே எனக்கு எதிராக இல்லை. காரணம் நான் செலவு செய்த தொகையில் விநியோகஸ்தர்களிடம் நான் வாங்கியது பத்து சதவீதம்தான். அது எல்லோருக்கும் தெரியும் எனக்கு விநியோகத்தரிடம் பிரச்சினை இருப்பதாகச் சொல்லும் இடங்கள் இரண்டு தான். நோர்த் மற்றும் மதுரை ஏரியாக்கள் தான். ஆனால் இந்த இரண்டு இடங்களிலும் பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறேன்.

எல்லாவிதமான கஷ்டங்களையும் போட்டுவிட்டு வாழும் ஒரு முனிவன்போல சினிமாவில் நான் வாழ்கிறேன். நலிந்து வரும் தமிழ் சினிமாவை தூக்கி நிறுத்தாவிட்டாலும், நான் அழிக்க மாட்டேன் என்று சூர்யா கூறினார்.



# 2003 இல் சினிமா ... எண்ணத்தில் தோ...

சினிமா ரசிகர் சங்கம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி மற்றும் சின்னத்திரை என அனைத்திலும் 2003 ஆம் ஆண்டுக்கான சிறந்த கலைஞர்களை தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு பட்டியலையும் வெளியிட்டுள்ளனர்.



அந்த வகையில், தமிழ் சினிமாவுலகைப் பொறுத்தவரை, சினிமா ரசிகர் சங்கம் அறிவித்துள்ள பட்டியலில் சிறந்த நடிகராக 'தூள்', 'சாமி' படங்களுக்காக நடிகர் விக்ரமும், 'பார்த்தீபன் கனவு' படத்திற்காக சிறந்த நடிகையாக சினேகாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும்சிறப்பு பரிசு பெறும் நடிகராக சூரியாவும், நடிகையாக ஜோதிகாவும், சிறந்த துணை நடிகராக மாணிக்க விநாயகமும், துணை நடிகையாக மனோரமா... நடிகராக விவேக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்...

சிறந்த புதுமுக நடிகர்களாக ஜீவா, ஜெயம்... களையும் புதுமுக நடிகைகளாக திரிஷா, சோனி... றோர்களையும், சிறந்த வில்லனாக 'காக்க க...



-சினேகா-



'கேர்ள்பிரண்ட்' - இஷா கோபிகர்-



'சுள்ளான்' -தனுஷ், சிந்து துலானி-

# அப்பிள் தோட்டத்தில் 'சுள்ளான்' படப்பிடிப்பு

நியூசிலாந்து சென்று இரண்டு பாடல் காட்சிகளை படமாக்கியிருக்கிறார்கள் 'சுள்ளான்' படக்குழுவினர்.

தனுஷ் - சிந்து துலானி சம்பந்தப்பட்ட காட்சிகளை ஆம்ஸ்டர்டாமில் டுலிப் மலர்கள் விசேஷமாக பூத்துக் குலுங்கும் இடத்தில் படமாக்கச் சென்றார்கள். அங்கு ஏற்கனவே அந்நியனுக்காக விக்ரம் - சதாவை வைத்து சங்கர் பாடல் காட்சியைப் படமாக்கி விட்டதால், நியூசிலாந்தின் ஆக்லாந்து சென்று ஆப்பிள் தோட்டத்தில் பாடல் காட்சிகளை படமாக்கினார்கள்.

வித்தியாசாகர் இசையில் கபிலன் எழுதி ஹரிஹரன் - சுஜாதா பாடிய 'யாரோ நீ.. பிஞ்சு நிலவா... பஞ்சு சிலையா... நெஞ்சின் அலையா...' என்ற அந்த பாடலை கிறிஸ்ட்சர்ச் என்ற இடத்தில் ஆப்பிள் தோட்டத்தில் படமாக்கினார்கள். யுகபாரதி எழுதி, கார்த்திக் - சித்ரா பாடிய ''இரவு கவிதைகவிதை இரவு. எது நீ... எது நான்... என்று தெரியவில்லை...'' என்ற பாடலை கொட்டும் பனி மழையில் படமாக்கி இருக்கிறார்கள்

நியூசிலாந்தில் குளிர் அதிகமாக இருந்ததால் படப்பிடிப்புக் குழுவினர் ஆங்காங்கே செயற்கை அடுப்புக்களை உருவாக்கி தீமூட்டி குளிர் காய்ந்தனர். பாடல் காட்சி படமான போது யூனிட்டில் உள்ள அனைவரும் ஆப்பிளை சுவைத்தபடியே இருந்தனர்.

சரவணாஸ் கிரியேஷன்ஸ் தயாரிக்கும் 'சுள்ளான்' படத்தில் தனுஷ், சிந்துதுலானி, மணிவண்ணன், வடிவேலு, ஐஸ்வரிராவ், சங்கவி, பசுபதி, கலைராணி மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

## சிம்புவுக்கு மந்தராபேடி கொடுத்த முத்தம்

உலக கிரிக்கெட் நடந்தபோது தொலைக்காட்சியில் வர்ணனையாளராகக் கவர்ச்சி உடையில் தோன்றி - ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் - மந்திராபேடி. நடிகர் பார்த்திபன் தனது படத்தில் மந்திராபேடியை நடிக்க வைக்க முயற்சித்தார். ஆனால் ஏனோ அவர் நடிக்கவில்லை. அண்மையில் நடிகர் சிம்பு மும்பைக்குச் சென்றிருந்தார். மன்மதனில் மனநலம் பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பெண் டாக்டரின் கேரக்டரில் நடிக்க ஒரு அழகிய நடிகை தேவைப்பட்டார். மந்திராபேடியைச் சந்தித்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பெண் டாக்டரின் கேரக்டரில் நடிக்க ஒரு அழகிய நடிகை தேவைப்பட்டார். மந்திராபேடியைச் சந்தித்து மனநலம் குன்றியவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் டாக்டர் வேடத்தில் நடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கேரக்டரைப் பற்றிக்கேட்டதும் மந்திராபேடி அதில் நடிக்க ஒப்புக்கொண்டதுடன் - சிம்புவின் அறிவுக்கூர்மையையும், அணுகுமுறையையும் பாராட்டி சில நாட்களுக்குள்ளேயே சென்னைக்கு வந்து ஏ.வி.எம். ஸ்டுடியோவில் மன்மதன் படப்பிடிப்பில் கலந்துகொண்டு சிம்புவின் வேண்டுகோளை நிறைவேற்றினார்.

சிம்புவைப்பரிசோதிக்கும் சைகாட்ரிக் டாக்டராக மந்திராபேடி நடித்த காட்சியும், சிம்புவின் நெற்றியில் அன்போடு மந்திராபேடி கொடுத்த முத்தக்காட்சியும் படமாக்கப்பட்டன.



'காதல் வைரஸ்' - வெங்கட் பிரபு, சரண், கஜா-

## சினி டிப்ஸ்

கமல் - பிரபு இணைந்து நடிக்கும் வசூல்ராஜா எம்.பி.பி.எஸ். படப்பிடிப்பு இரவு பகலாக நடைபெற்று வருகிறது. இப்படம் ஆகஸ்ட் 12 ஆம் திகதி திரைக்கு வரவுள்ளது.

***

7 ஜி ரெயின்போ காலனியில் ஒரே ஒரு பாடலுக்கு நமீதாவை நடிக்க கேட்டிருக்கிறார் இயக்குநர் செல்வராகவன். நமீதா இன்னும் ஓகே சொல்லவில்லை. படம் அடுத்த மாதம் திரைக்கு வருகிறது.

***

பார்த்தீபன் இயக்கி நடிக்கும் படம் குடைக்குள் மழை. இதில் பல வேடங்களில் நடிக்கிறார் பார்த்திபன். அவருக்கு ஜோடியாக புதுமுகம் மதுமிதா நடிக்கிறார். இப்படத்திற்கு முதல் முறையாக பார்த்திபன் ஒரு பாடலை எழுதியுள்ளார்.

***

ஆயுத எழுத்து படத்தைத் தொடர்ந்து சூர்யா - இஷா தியோல் ஜோடி இன்னொரு படத்தில் தொடர்கிறது. இயக்குனர் பாலாவின் சொந்தப் படம் ஒன்றில் இந்த ஜோடி மீண்டும் இணைகிறது.


...மா ரசிகர்களின் தோன்றியோர்



-விக்ரம்-

...மனோரமாவும், சிறந்த நகைச்சுவை ...ப்பட்டுள்ளனர்.

...ர், ஜெயம் ரவி, சிபிராஜ் போன்றோர் ...ஷா, சோனியா அகர்வால், சதா போன் ... 'காக்க காக்க' ஜீவாவையும் தேர்ந்தெடுத்துள்ளனர்.



மேலும்

சிறந்த தயாரிப்பாளராக - ஏ.எம். ரத்தினம், சிறந்த படம் - 'பார்த்தீபன் கனவு', சிறப்பு படம் - ஊருக்கு நூறு பேர், சிறந்த இயக்குனர் - கௌதம், சிறந்த கதாசிரியர் - கரு. பழனியப்பன், சிறந்த பாடல் ஆசிரியர் - தாமரை, சிறந்த இசையமைப்பாளர் - ஹாரிஸ் ஜெயராஜ், சிறந்த ஒளிப்பதிவாளர் - ராஜசேகர். என்று ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்குபவர்களைத் தேர்வு செய்து அறிவித்துள்ளனர்.

53 ஆவது ஆண்டு நடக்கும் இந்த விழாவுக்கான பட்டியலை சென்னை பிலிம் சேம்பர் தியேட்டரில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகதீசன் வெளியிட்டார்.

## சத்தியராஜ் - சிபிராயின் ஜோர் விமர்சனம்

''ஸ்டூடண்ட் நம்பர் 1'' படத்துக்குப் பின் செல்வா இயக்கத்தில் சிபிராஜ் நடிக்கும் படம் ''ஜோர்''. சிபியுடன் தந்தை சத்தியராஜும் நடித்திருக்கிறார் தந்தையாகவே.

கிராமத்தில் தியேட்டர் ஒன்றையும் பள்ளிக்கூடம் ஒன்றையும் நடத்தி வருகிறார் சத்தியராஜ். மகன் சிபி, கல்லூரியில் படித்துக் கொண்டு ஜாலியாக ஊர் சுற்றுகிறார். அந்த ஊர் எம். எல்.ஏ கோட்டா சீனிவாசனுடன் தந்தையும் மகனும் மோதுகிறார்கள். படத்தில் இந்தக் காட்சி வரும் போதே இனி என்ன? என்பதை ரசிகர்கள் யூகித்துவிடுகிறார்கள்.

சிபி, தந்தையுடன் லூட்டியடிப்பதாகக் காட்டப்படும் காட்சிகள் ஒரு படத்தையும், கல்லூரியில் அவர் காதல் - மோதல் என ஈடுபடும் காட்சிகள் இன்னொரு படத்தையும் பார்ப்பது போன்று ஏற்படும் உணர்வு, தவிர்க்க முடியாததாகி விடுகிறது. தெளிவில்லாத ஸ்கிரிப்ட், குழப்பமான திரைக்கதை என ரசிகர்களை வாட்டிவதைத்துள்ளனர்.

பழைய ஹீரோயின் ரதி போன்ற சாயலில் இருக்கும் கஜாலா, ''உனக்கு ஓடும் அதே ரௌடி ரத்தம்தான் எனக்குள்ளும் ஓடுது'' என ரமணாவை கத்தியைக் காட்டி மிரட்டுகிறாரே... அட கஜாலாவுக்கும் நடிப்பு வருகிறது. ஆனால் கஜாலாவை கரம் மசாலாவாகவே (கவர்ச்சிக்கு) பயன்படுத்த முயற்சித்திருக்கிறார் செல்வா.

''ஹீரோவுடன் தனியாக சண்டைபோட்டு ஜெயித்துக் காட்டினால் நீ சொல்பவரை நான் திருமணம் செய்து கொள்கிறேன்' என வில்லனைப் பார்த்து கஜாலா சொல்கிறார். 'ரன்' படத்தில் கேட்கத் தொடங்கிய இந்த வசனத்தை இன்னும் எத்தனை படங்களில் கேட்கப்போகிறோமோ?

வடிவேலுவைப் பற்றி குறிப்பிட்டே ஆக வேண்டும். இவரும் ஷர்மிளியும் வரும் காட்சிகளில் இரட்டை அர்த்த வசனங்களைவிட ஒரு படி மேலே சென்று கொச்சைத்தனமான வசனங்கள் படத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இது போன்ற வசனங்களை திணித்துவிட்டு, இது குடும்பப் படம் என விளம்பரப்படுத்துவதுதான் அபத்தம்.



'ஜோர்' -சத்தியராஜ், சிபிராஜ், கஜாலா-

''சாமி'' வேடத்தை (நடிப்பையும்) அப்படியே இதிலும் 'ரிப்பீட்' செய்திருக்கிறார் கோட்டா சீனி வாசராவ்.

அடிக்கடி ''கடி'' ஜோக்குகளை கூறும் பானுப்பிரியா, படத்தின் மிகப் பெரிய 'கடி'. சத்தியராஜ், சிபிராஜ் பாத்திரப் படைப்பு போல, இவரது கேரக்டரும் பலவீனமாகப் படைக்கப்பட்டுள்ளது.

''ஐ லவ் யூ' என்ற பாடலுக்கு மட்டும் தேவா நல்ல மூடில் மெட்டு அமைத்திருக்கிறார் போலும். 'மம்மி செல்லமா' பாடல் மெட்டு, பணக்காரனில் வரும் 'நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணும்தான்' பாடலை நினைவுபடுத்துகிறது.

மூன்று மணி நேரம் 'போர்' அடிக்காமல் இருக்க 'ஜோர்' பார்க்கலாம் என நம்பி வரும் ரசிகர்களுக்கு 'அல்வா' கொடுத்திருக்கிறார் செல்வா.

# கவிதைப் புனல்

### கடைசி இலக்கு

விரக்தியின் விளிம்பில்
பாழாய்ப்போன
அந்த
நினைவலைகள்
இன்னும் உயிர்
குடிக்கப்போகின்றது.
அவனுக்குள்
மறக்கவென்று
நினைக்கும் போதெல்லாம்
மதுப்போத்தல்கள்
அவனிதயத்தை
ஆறுதல் செய்கிறது.
பாதியிலக்கை
வாழ்வில்
பறிகொடுத்துவிட்டு
ஏதோ ஒரு
உறவின் தவிப்பில்
இன்னும்
காலங்கடத்தும் அவன்
நிமிடப்பொழுதுகள்.
சில சமயம்
தொலைந்துபோன
இவன் வாழ்வு
வசந்தம் காணலாம்.
சிலவேளை
பெண்ணுக்காய்
உயிர் நீத்த
பெயரும் வாங்கலாம்.
அதற்கு முன்னரும்
ஓர் உயில்
அவனது டயரியில்
அவளுக்குப் பக்கத்தில்.
அவனது சமாதியென்று
மூச்சுப்பிரிகிறது
கடைசி இலக்காய்...

*செயின் தம்பி ஸியாம்,*
*கல்முனை.*

### உன் நினைவுகள்

நினைவுகளின்
இரைமீட்டல்களில்
உன் நினைவுகள்
மறக்கவும் முடியாமல்
மெல்லவும் முடியாமல்
நான் தவிக்கிறேன்.
நிஜமாக இருந்த
என்னை
நிழலாக மாற்றிவிட்டாய்.
உன் நினைவுகளை
மறப்பதற்கு- கண்களை
மூடுகிறேன்.
ஓ....
கனவிலும்
உன் தரிசனம்
கண்ணீரினால்
கண்களை
கோபிக்க முடியவில்லை.
உன் நினைவுகளால்
உன்னை மறக்க
முடியவில்லை.

*நி.தனுஷியா,*
*சாவகச்சேரி.*

### சுதந்திரம்

அந்த வானத்தையே
இங்குவரவழைப்பேன்
என்கிறாய்
சிறகுகளை
நீயே
சேதப்படுத்திவிட்டு.

*குர.இமெல்டா வினோஜினி,*
*முல்லைத்தீவு.*

### காத்திருப்பேன்

எனக்கும் உனக்குமான
காதல் ஒப்பந்தம்
பகிரங்கமாக
பிரகடனம் செய்யப்பட்ட
பின்பும்
நிறைவேற்றப்படாமல்
நிராகரிக்கப்படுவதுஏன்?
கைமாறப்பட்ட அதிகாரம்
உன் அம்மாவுக்கான போது
தீர்வுகளே பிரச்சினைகளாக
தீர்க்கப்பட வேண்டியவைகளே!
தேவையற்றவை என
தீர்மானம் அரங்கேற்றப்போவதாக
அவர்களுடன் அம்மாவும்
அலசிக்கொண்டிருக்கிறார்.
முடிவுகள் எதுவானாலும்–உன்
அர்த்தமுள்ள பதிலுக்காய்
காத்திருப்பேன்.
இலங்கை புரிந்துணர்வு
ஒப்பந்தமாக
மாறிப்போகாதிருக்கட்டும்.
நானும் நீயும்
நடுவர்களாக நல்லவரின்
ஆசிகளுடன் இணைந்திடுவோம்.
காத்திருப்பேன்–நான்
காத்திருப்பேன்.

*ந.விஜி,*
*பனை.*

### நாம்

இருக்கும் வரை
இணைந்திருப்போம்
இறுதிவரை
நீ நானாக...
நான் நீயாக...

*நிலா*

### புறப்பட்டுவிடுவோம்

அவர்கள்
எல்லோருக்குமாகத் தான்
விட்டுச்சென்றார்கள்.
ஆனால்...
எம்மோடிருந்த
எச்சில் கையால்
காக்கா துரத்தாதவன்
கையில் தான்
அது அன்றிலிருந்து!
கிடைத்த
சந்தர்ப்பங்களிலெல்லாம்
கை கோர்த்துத்தான்
பார்த்தோம்.
ஆனாலும்...
எட்டி எட்டித்தான்
உதைத்தார்கள் எம்மை.
எமக்குள்ளே
அகோரப்பசி...
பட்டினி கிடந்து
சாவதை விட
போரிட்டுச் சாவது
மேல் என்று
பறித்தெடுக்க
புறப்பட்டு விட்டோம்
எமக்கானதை.
வாழ்த்தியனுப்புகிறார்கள்
பட்டினித் தரைகள் மட்டும்
நியாயமெனின்
நீங்களும் வாழ்த்துங்கள்.

*ஏ.பி.எம்,*
*ஏறாவூர்.*

### ஏன் இந்த நிலை?

தினமும் ஆயிரம்
கனவுகளை உருவாக்கி
என் இனிய
வாழ்க்கையை
உனதாக்கி-தினமும்
மனதில் வேதனையை
கருவாக்கி
உன்னைக் காணக்கூட
தடுக்கிறாயே?
ஏன் இந்த நிலை
எனக்கு?

*பீ.சுமன்.*

### மாமன் மகள்

பருவ காலத்தில்
பழுத்த மாங்கனியாய்
பக்குவமாய் பழுத்து
கவிதைக்கு முன்னுரையாய்
என் நெஞ்சில் பதிந்து
பூச்சூடி சேலைகட்டி
தேன் கனியாக
மாமன் மகள்.
கருவண்டின்
இறக்கைக் காற்றுக்கு
ஓடியும் நூல் இடையாய்
என் மாமன் மகள்.
கன்னத்தில் அவள்
மேனியில்
தேன் கனியாய்
உண்டு சுவைத்திருக்க
எனை அணைத்தாள்
என் மாமன் மகள்.
அம்மாவுக்கு மறைவாக
வெட்ட வளவினிலே
நான் கையால் கதை பேச
பிடித்திருக்கு
என் மாமனுக்கு.
கட்டிலுக்கு வரும் வரை
காத்திருந்தாள்
என் மாமன் மகள்.
மச்சானைத் தேடி
வந்த மாருதமே—என்
வாயில் தேன்கனியே
உனை எப்படிப்
பிரிந்திருப்பேன்?
இது என்ன நாசம்?
ஏன்இந்த வெறுப்பு?
பாதகம் நான்
சொன்னேனா
என் மாமன் மகள்
தானே அவள்?

*கு.பாபு,*
*கல்முனை.*

### கல்லறை

இறந்த மனிதனின்
இறுதி வீடு.

### ஏக்கம்

ஏழைகள் வாழ்வில்
ஏற்படும் வறுமைக்கோடுகள்.

### மனம்

மனிதனுள் மறைந்திருக்கும்
மௌன கோபுரம்.

### வர்ணம்

வானவில்லிடம்
பெற்ற கடன்.

### ஆசை

மனதின் கனமான
சுமை.

*எம்.ஆர்.எம்.நதார்,*
*திருமலை.*

### இதயத்தில்

இடம்பெயர்ந்து
இருக்க இடம் தேடி
அலைந்த பொழுதில்
நான்இழந்த
பொருட்கள் தான்
எத்தனை?
ஆனால்...
இதயத்தை மட்டும்
இழக்கவில்லை.
ஏன் தெரியுமா?
ஈழத்தின் இருப்பை
நினைவாய்
நிறுத்துவதற்காக!

*வி.விஜிமயூரா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

### எதிர்பார்ப்பு

நிஜமான
உன் முகம் பார்த்து
நீண்ட நாட்கள்.
நினைவாகும்
எல்லைகள்
நீள்கிறது
நெஞ்சமதில்.
நிச்சயமாய் உனை
நான்
நீங்காமல் பார்த்திடும்
நாள் எப்போ?

*என்.நிலவன்,*
*உடையார்கட்டு.*

### பைத்தியமாய்

வாழ்க்கைப்
புத்தகத்தின்
முடிந்துபோன
அத்தியாயங்களை
மீள ஒருமுறை
புரட்டிப்பார்த்தபோது
இதயத்தில்
எங்கோ
இனம்புரியாத வலி
இருள் சூழ்ந்திருக்கும்
நெஞ்சத்து
வீதிகளில் இன்னும்
உன் நினைவுகள்
அன்புப் பாதையிலே
அழைத்துச் சென்று
அழிவுப்
பாதியில்
விட்டுச் செல்வாய்.
என
அப்போது நான்
அறிந்திருக்கவில்லை.
பார்த்தாய்...
சிரித்தாய்...
பல கதைகள்
சொன்னாய்...
பாதியில்
என்னைபரிதவிக்க
வைத்துவிட்டு
பறந்துவிட்டாய்.
பாவிநான்
மட்டும்பலதையும்
இழந்துவிட்டு இங்கு
பைத்தியமாய்
அலைகின்றேன்.

*யஸ்மினா,*
*மீசாலை.*

### என்னவளுக்கு

ஒவ்வொரு இரவுகளிலும்
உன் பெயரை என் உதட்டில்
உச்சரித்திட எத்தனிக்கிறேன்.
பெயர் ஒலித்திடும் முன்
விழித்திரையால் வடிக்கிறேன்
கண்ணீரை– உன்னைச் சந்தித்த
ஒவ்வொரு நிஜ நிகழ்வுகளையும்
நான் ஒவ்வொன்றாய்
மீளாய்வு செய்கின்றேன்.
அவை எம் வாழ்வில்
பொறிக்கப்பட வேண்டிய
ஆளமாகத் தோண்டப்பட்ட
அத்திவாரச்சுவர்கள்.
பௌர்ணமி நிலவை
நடுவானில் அமர்த்தி–உன்
இதமான முத்திரையை
கண்ணோடு வைத்தேன்.
கரும் மழை மேகம்
சூழ்ந்திட தவித்தேன்.

*வி.உதயசங்கர்,*
*மாங்குளம்.*

### என் மூச்சு

பிரிந்துவிடுகிறேன்
என்று சொன்னது
உன் உதடு.
பிரிவை
நினைத்து
வெடிக்கிறது–என்
இதயக்கூடு.
உன்னை விட்டு
வாழ்வதுஎனக்கு
பெரும்பாடு.
நீ கிடைக்காவிட்டால்
பூமி எனக்கொரு
சுடுகாடு.

*வெ.ரெங்கநாதன்,*
*தெப்பட்டான்.*

### முடிவு

நிமிடத்தின் முடிவு
வினாடியில் உள்ளது.
மணித்தியாலத்தின் முடிவு
நிமிடத்தில் உள்ளது.
வாரத்தின் முடிவு
நாட்களில் உள்ளது.
மாதத்தின் முடிவு
வாரத்தில் உள்ளது.
வருடத்தின் முடிவு
மாதத்தில் உள்ளது.
என் வாழ்க்கையின் முடிவு
உன் வார்த்தையில் உள்ளது.

*கே.எல்.ஹில்மி,*
*சாய்ந்தமருது.*

### இதயத் தூரிகை

என் நினைவுச்
சின்னமாக
அவள் நேசித்த
உறவுகள்.
என் கனவுக்
காட்சியாக
அவள் காட்டிச்
சென்ற குறும்புகள்.
என்
உண்மைக் காதலாக
அவள் ஊட்டிவிட்ட
காயங்கள்.
என் இதய
தூரிகையாக
அவள் இட்டு
சென்ற நினைவுகள்.

*க.சிவானந்தம்,*
*வெருகல்.*

# தேசியப்பட்டியல் எம்.பி நியமனத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் நெருக்கடி!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் எம்.பி.நியமன விவகாரம் கட்சிக்குள் மீண்டுமொரு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்விடயம் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமை பெரும் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் தனது தேசியப் பட்டியல் ஆசனங்களில் நான்கினை ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கி இருந்தது.

இந்த நான்கு எம்.பி பதவிகளுக்கும் கே.ஏ.பாயிஸ், ஹுஸைன் பைலா, இஸ்மாயில், குத்தூஸ், புஷ்ப குமார ஆகியோர் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமினால் நியமனம் செய்யப்பட்டனர்.

இந்த நியமனங்கள் அப்போதே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தபோதிலும் அவை தற்காலிக டம்மி நியமனங்கள் எனவும், ஓரிரு மாதங்களில் பொருத்தமானவர்கள் எம்.பிக்களாக நியமனம் செய்யப்படுவர் எனவும் உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து விமர்சனங்கள் – ஆத்திரங்கள் ஓரளவு தணிந்திருந்தன.

எவ்வாறாயினும் டம்மி நியமனங்களின் போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தோர் எவரும் தலைமைக்கு விசுவாசமானவர்களாகத் தெரியவில்லையா என்ற கேள்வி[illegible] ஒலித்துக் கொண்டிருந்தது. கிழக்கு மாகாண அரசியல் வாதிகளை தான் நம்பத்தயாரில்லை என்ற வெளிப்பாட்டின் எதிரொலியாகவே தனது மாமனாரையும், உதவியாளரையும், நண்பர்களையும் தலைவர் ஹக்கீம் எம்.பிக்களாக நியமனம் செய்திருக்கிறார் என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

## ஹுஸைன் பைலா பல்டி

இந்த நிலையிலேயே தலைவர் ஹக்கீமுக்கு மிகவும் விசுவாசமிக்கவர் என அவராலேயே நம்பப்பட்ட ஹுஸைன் பைலா எம்.பி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பக்கம் கட்சி மாறிச் சென்றார். அவரது இந்த அதிரடி நடவடிக்கை கட்சியின் அரசியல் பீடத்தினர்கள் மற்றும் ஆதரவாளர்களிடையே பெரும் அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. நீயுமா புரூட்டஸ் என்று கேட்குமளவுக்கு தலைவர் ஹக்கீம் அதிர்ந்து போனார்.

ஹுஸைன் பைலாவின் கட்சித் தாவல் [illegible]ம் பெற்ற சந்தர்ப்பம் கூட தலைவர் ஹக்கீமுக்கு பெருத்த இடியாக அமைந்திருந்தது. குமாரி குரே என்ற பெண்ணுடன் ரவூப் ஹக்கீம் தகாத உறவு கொண்டிருந்தார் என்ற பரபரப்பான செய்தி அரச ஊடகங்களில் வெளிவந்த மறுதினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது ஹுஸைன் பைலா கட்சி மாறியதானது முஸ்லிம் காங்கிரஸுக்கும் தலைவர் ஹக்கீமுக்கும் இரட்டிப்பான நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

''எம்மை எல்லாம் நம்பாமல் ஹுஸைன் பைலாவின் மீது அபரிதமான நம்பிக்கை வைத்து – அவரது பணத்துக்காக சோரம் போய், அவரை எம்.பியாக நியமனம் செய்த தலைவர் ஹக்கீமுக்கு இதுவும் வேண்டும் – இன்னமும் வேண்டும்'' என முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களே பரிகசித்து வஞ்சிக்கும் அளவுக்கு பைலா வின் கட்சித் தாவல் தலைமைக்கு தாக்கதை ஏற்படுத்தியது. கட்சி ஆதரவாளர்கள் கூட ஒட்டுமொத்தமாக தலைவர் ஹக்குமையே வன்மையாகக் கண்டித்தனர்.

ஏனெனில் தங்களால் ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் சற்றும் கணக்கில் எடுக்காது தனக்கு விசுவாசமானவர் – வேண்டப்பட்டவர் என்ற ஒரே காரணத்துக்காக நியமன எம்.பிவிவகாரத்தில் தலைவர் ஹக்கீம் மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில் அவர்கள் அதிருப்தியும், விசனமும் அடைந்திருந்தனர்.

## புஷ்ப குமார ராஜினாமா

இந்த நிலையில் தன்மீதான குற்றச்சாட்டுகள் – விமர்சனங்கள் – கண்டனங்கள் அனைத்தையும் உடனடியாக தணித்து, மக்கள் மத்தியிலான சலனத்தை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் உணர்ந்தார்.

அதனால் மற்றொரு நியமன எம்.பியான புஷ்ப குமாரவை ராஜினாமாச் செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அதன் பிரகாரம் ஹுஸைன் பைலா எம்.பிகட்சி மாறிய மறுதினமே புஷ்ப குமார தனது எம்.பி.பதவியை ராஜினாமாச் செய்து தலைவர் மீதான நம்பிக்கை விசுவாசத்தை வெளிக்காட்டினார். பௌத்த சிங்கள இனத்தவரான புஷ்ப குமார, தலைவர் ஹக்கீம் ஒப்படைத்த அமானிதத்தை பேணிப் பாதுகாத்து அவரிடம் மீண்டும் கையளித்து, முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கு – அதுவும் குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்கு முன்மாதிரியாக நடந்து காட்டினார்.

இதனால் தலைவர் ஹக்கீம் பெருமை அடைந்தார். தனது நீண்ட கால அலுவலக உதவியாளரான புஷ்பகுமாரவை நம்பி, அவரிடம் எம்.பி.பதவியை ஒப்படைத்தமை எந்தளவு நியாயமானதும், தீர்க்க தரிசனமானதுமான செயல் என்பதை இதன் மூலம் ஹக்கீம் நிரூபித்துக் காட்டினார். அதனைத் தொடர்ந்து ரவூப் ஹக்கீமின் மாமனாரான (மற்றொரு நியமன எம்.பி.யாகப் பதவி வகித்த) இஸ்மாயில் குத்தூஸ் ராஜினாமாச் செய்தார்.

ஹுஸைன் பைலா எம்.பி.விவகார சூடு இந்த இருவரின் ராஜினாமாவால் தணிந்ததோ, இல்லையோ – ஆனால் இரு எம்.பி. பதவி வெற்றிடங்களுக்கும் புதியவர்களை நியமிப்பதில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் பெரும் இழுபறியும், சண்டை, சச்சரவுகளும் தற்போது ஏற்பட்டிருக்கின்றன.

## பஷீர் சேகுதாவூத் நியமனம்

வெற்றிடமாகியுள்ள இரு எம்.பி.பதவிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் பிரதியமைச்சருமான பஷீர் சேகுதாவூத், முன்னாள் வடக்கு – கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.நிஜாமுதீன் ஆகியோரின் பெயர்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் சிபார்சு செய்திருக்கிறார்.

இவர்கள் இருவரும் கடந்த எட்டாம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது எம்.பிக்களாக சத்தியப்பிரமாணம் செய்வதற்கு ஏற்பாடாகி இருந்தது. எனினும் ஐக்கிய தேசியக்கட்சி அவர்களது நியமனத்தை இறுதி நேரத்தில் ரத்துச் செய்தமையால் சத்தியப்பிரமாணம் செய்ய முடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியினால் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட்ட நான்கு நியமன எம்.பிக்களில் ஒருவர் அரசுடன் இணைந்து விட்டதால் முஸ்லிம் காங்கிரஸுக்கான ஒதுக்கீட்டைக் குறைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்தனாலேயே வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டாம் என தேர்தல் ஆணையாளாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் இரு எம்.பிப்பதவிகளையும் முஸ்லிம் காங்கிரஸுக்கே மீண்டும் வழங்குவதற்கு ஐக்கியதேசியக்கட்சி தற்போது இணக்கம் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## உயர்பீடத்தில் எதிர்ப்பு

அதேவேளை இரு எம்.பிக்கள் வெற்றிடத்திற்கும் தலைவர் ஹக்கீமினால் சிபார்சு செய்யப்பட்டிருப்பவர்களை ஏற்றுக்கொள்வதற்கு கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் பலர் மறுத்து வருகின்றனர். தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர்களுக்கும் ஏற்கனவே தேசியப் பட்டியல் மூலம் எம்.பிக்களாக பதவி வகித்தோருக்கும் இனிமேல் தேசியப்பட்டியலில் இடமளிப்பதில்லை என்று உயர்பீடம் முன்னர் எடுத்திருந்த தீர்மானத்திற்கு முரணாகவே தலைவர் ஹக்கீம் தற்போது செயற்படுகிறார் என அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

முன்னாள் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் முன்னர் இரு தடவைகள் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டவர். அதேவேளை கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர். எனவே அவரை எம்.பியாக நியமிக்கக்கூடாது என தலைவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அமீரலி முஸ்லிம்காங்கிரஸ் எம்.பியாக பதவி வகிக்கும்போது அங்கு பஷீர் சேகுதாவூதை எம்.பியாக நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்..

கட்சியின் வேறு சில முக்கியஸ்தர்களுக்கும், பிரதிநிதித்துவம் கிடைக்காத இடங்களுக்கு எம்.பிபதவி வழங்கவேண்டிய அவசியத் தேவை இருந்து கொண்டிருக்கையில் தனக்கு வேண்டிய ஒரு தனிநபருக்கு நியமனம் வழங்க தலைவர் ஹக்கீம் முனைப்புக் காட்டுவதை உயர் பீடத்தினர் கண்டிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.சஹீட் ஊடகங்கள் மூலம் வெளியிட்ட கருத்துகள் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. தேசியப் பட்டியல் நியமன விடயத்தில் தலைவர் ஹக்கீம் மேற்கொண்ட தன்னிச்சையான தீர்மானத்தை அவர் வன்மையாகக் கண்டித்தார். தற்போது அவர் தலைமையில் ஒரு அதிருப்திக் குழு உருவாகியுள்ளது. கட்சியின் உள் விவகாரத்தை ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்தி – தலைமைத்துவத்தை விமர்சித்தார் என குற்றஞ்சாட்டி சட்டதரணி சஹீட் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

சட்டதரணி நிஜாமுதீன் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவராயினும் கல்முனைத் தொகுதிக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்ற அவசியத்தின்பேரில் அவரது நியமனத்துக்கு உயர்பீட உறுப்பினர்கள் பலர் பச்சைக் கொடி காட்டியிருக்கின்றனர்.

எனினும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்கள் அவரது நியமனத்தை எதிர்த்து வருகின்றனர். என்றாலும் அது தனிப்பட்ட விருப்பு – வெறுப்புகளை அடிப்படையாகக் கொண்டது என தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கடந்த பொதுத் தேர்தலின் போது தலைவர் ஹக்கீம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதிருப்பது குறித்தும் விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

## ஹக்கீம் ராஜினாமா என்னவாயிற்று?

தான் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதால், இழக்கப்படும் ஆசனத்தை மூன்றாவது கூடிய விருப்பு வாக்குகள் பெறுபவரை எம்.பியாக நியமிப்பதன் மூலம் நிவர்த்தி செய்வேன் என்று தலைவர் ஹக்கீம் தேர்தல் பிரசாரங்களின்போது உறுதியளித்திருந்தார். அதேவேளை அம்பாறை மாவட்ட எம்.பியாக தெரிவு செய்யப்பட்டாலும் தான் ராஜினாமா செய்து அடுத்தவருக்கு இடமளிப்பேன் எனவும் கூறியிருந்தார்.

ஆனால் அவர் இது விடயத்தில் அசட்டையாக இருந்து வருகிறார் என அம்பாறை மாவட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அம்பாறையில் முஸ்லிம்காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு மூன்றாவது கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற சம்மாந்துறை ஏ.எம்.நௌஷாத்துக்கு எம்.பிநியமனம் வழங்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

சம்மாந்துறைத் தொகுதிக்கென முஸ்லிம்காங்கிரஸ் பிரதிநிதித்துவம் இல்லாதிருப்பது பெரும் குறையாக சுட்டிக்காட்டப்படுகிறது. அங்கு கட்சியின் வாக்கு வங்கியை நிலையாக வைத்திருப்பதற்கு நௌஷாத்தின் நியமனம் அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

அதேவேளை, ஏற்கனவே தலைவர் ஹக்கீமினால் வாக்குறுதி அளிக்கப்பட்டதன் பிரகாரம் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் செனட்டர் மசூர் மௌலானாவுக்கு எம்.பி நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை மருதமுனை மக்கள் மத்தியில் வலுப்பெற்று வருகிறது.

அத்துடன் வன்னி, திருமலை மாவட்ட எம்.பிக்களான றிஷாத், நஜீப் ஆகியோர் கட்சித் தலைமையுடன் முரண்பட்டிருப்பதால் அந்த இரு மாவட்டங்களுக்கும் தேசியப் பட்டியல் மூலம் எம்.பி நியமனம் வழங்க முன்வர வேண்டும் எனவும் தலைவர் ஹக்கீமிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது.

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூரில் பைஸல் காசிம் தெரிவு செய்யப்பட்ட எம்.பியாக இருக்கின்றபோது அதே ஊரைச் சேர்ந்த எம்.ரி.ஹஸனலி முஸ்லிம் காங்கிரஸுக்கு (கிழக்கில் தனித்துப் போட்டியிட்டதால்) கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் எம்.பி.பதவிக்கு நியமிக்கப்பட்டது குறித்தும் விமர்சனம் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

எனினும் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபுடன் இணைந்து கட்சியை உருவாக்கி அதன் வளர்ச்சிக்காக பல்வேறு தியாகங்கள் புரிந்த ஹஸனலி எம்.பியாக நியமிக்கப்பட்டதில் ஆட்சேபனை எதுவும் பெரிதாக கிளம்பவில்லை.

## சுழற்சி முறை நியமனம்

எது எப்படியோ முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய இரு எம்.பி.பதவிகள் வெற்றிடத்தை நிரப்புவதில் தலைவர் ஹக்கீம் சரியான அணுகுமுறை ஒன்றைக் கடைபிடிக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டிருக்கிறது.

குறிப்பாக பஷீர் சேகுதாவூதை மூன்றாவது தடவையாகவும் எம்.பியாக நியமிப்பதற்கு தலைவர் ஹக்கீம் மேற்கொண்டிருக்கின்ற தீர்மானத்தை அவர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என ஏகோபித்த கருத்து நிலவுகின்றது.

கட்சி முக்கியஸ்தர்களின் சிரேஷ்டத்துவம், அறிவு, ஆற்றல், அனுபவம் ஏற்கனவே அளிக்கப்பட்ட உறுதி மொழிகள், மாவட்ட தொகுதி பிரதிநிதித்துவம் என்பவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு சுழற்சி முறையில் தேசியப்பட்டியல் ஆசனங்களை ஒதுக்கீடு செய்வதற்கு உயர் பீடத்தினருடன் ஆலோசித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

**– அஸ்லம் எஸ்.மௌலானா**


சுடர் ஒளி **விளம்பரக் கதம்பம்**

பம்பலப்பிட்டிய 10 P - 3B/R உடனடி விற்பனைக்கு. தொடர்பு – 2360321 – 0785611164.

பம்பலபிட்டியில் 10P - 13P பழைய வீட்டுடன் உடன் விற்பனைக்கு – 0785611164 – 4510920

வெள்ளவத்தையில் இருமாடி வீடு 6B/R காலி வீதிக்கு மிக அருகாமையில் 4510920 – 0712296682

வெள்ளவத்தையில் 10 P இருமாடி வீடு 4B/R உடனடி விற்பனைக்கு 2360321

பம்பலப்பிட்டிய 25 P பழைய வீட்டுடன் உடன் விற்பனைக்கு 2360321 – 4510920

வெள்ளவத்தையில் 3 P கடை இரு தட்டு காலி வீதிக்கு முகப்பாக மற்றும் 3 P தனிக் கடையொன்றும் 41/2 P Bare Land commercial Propetty Facing Main Road விற்பனைக்கு 0785611.64 – 4 510920 www.com Famousdeen.

வெள்ளவத்தையில் Staion Road பழைய வீட்டுடன் 14 P இன்னும் 6 P பழைய வீட்டுடன். 6 P Bare Land. மற்றும் பஸ்ஸல்ஸ்லேனில் 10 P இருமாடி பழையவீடு விற்பனைக்கு – 2360321 – 0785611164. www.com Famousdeen.

பம்பலப்பிட்டியவில் டிக்மன்ரோட் Facing Main Road 3 P பழைய கட்டடம் மற்றும் 15 P பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு – 2360321 – 0712296682

வெள்ளவத்தையில் 6P பழையவீடு 3B/R உடன் விற்பனைக்கு, 2360321 – 4510920

வெள்ளவத்தையில் 4 P – 7 P 3தட்டுவீடுகள் உடன் விற்பனைக்கு – 0712296682 – 4510920

வெள்ளவத்தை,பம்பலப்பிட்டி, தெஹிவளை காலி வீதிக்கு முகப்பாக 2 units தொடக்கம் 3 units வரையிலான கட்டடங்களும் Duplication Road Facing 5 p. Bare Land. 8p - 12p 3 units Building உடன் விற்பனைக்கு – 2360321 – 4510920. www.com Famousdeen.

தெஹிவளை – கல்கிஸ்ஸை – கலுபோவில ஆகிய பகுதிகளில் 5 p – 6 p முதல் 10–15–20p. வரையிலான 2மாடிவீடுகளும் புதிய வீடுகளும். 5p தொடக்கம் 10 p , 20 – 25p வரையிலான காணிவளவுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 2360321 4510920 1 137 Galle Road Wellawathe..

# யாழ்.சமூகமும் தில்லு முல்லுப்படும் அரச நிறுவனங்களும்

யாழ்ப்பாண மாநகரத்துக்குள்ளும் அதன் எல்லைக்கு அண்மித்தும் அமைந்து காணப் படுகின்ற மூன்று அரசாங்க நிறுவனங்களில் ஊழல், மோசடி, நிர்வாகச் சீர்கேடுகள் நடை பெறுவதாக அந்நிறுவனங்களில் பணி யாற்றும் ஊழியர்கள் மத்தியிலிருந்து குரல் கள் எழத் தொடங்கியுள்ளன.

இவை பற்றிய புலனாய்வுத் (investigative journalism) தகவல்கள் இங்கு கவ னத்துக்குரியனவாக உள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப் பாணம் பொது மருத்துவ மனை, யாழ்ப் பாணம் மாநகரசபை ஆகியவையே அம் மூன்று அரசாங்க நிறுவனங்களாகும்.

இந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் அம்பலப்படுத்தும் விடயங்களை சரியானவையா? பிழையானவையா? என்று வரையறுத்து விமர்சனங்களை வெளியிடு வது அல்ல கட்டுரையாளரின் நோக்கம்.

அவை பற்றி ஆராய்ந்து விவகாரங்களின் பொட்டுக்கேடுகளை புட்டுப்புட்டு அம்பல மாக்குவது தான் புலனாய்வுச் செய்தியியல். இது ஒரு புலனாய்வுச் செய்தியியல் கண் ணோட்டம் அல்ல.ஒருபறவைப்பார்வை (a bird view)மட்டுமே இந்தக் கண்ணோட்டம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் போதனை சாரா ஊழியர்கள் தமது அதிகாரி ஒருவரின் வெளிநாட்டுப்பயணம் தொடர் பான சர்ச்சை ஒன்றையும், நிர்வாகம் வேறு சில அதிகாரிகள், ஊழியர் நியம னங்களில் நடந்துகொண்ட விதம் குறித்து மற்றும் ஊழியர்களுக்கான நலன்பேணு கையில் தொடர்புள்ள கொடுப்பனவுகள், விடயங்கள் முதலியனவற்றை முன்வைத் தும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் குதித் திருந்தனர்.

யாழ்ப்பாணம் பொது மருத்துவ மனை யில் உச்ச நிலை அதிகாரி ஒருவர், ஒரு பெ ண் டாக்டர், ஒரு பொதுச்சுகாதாரப் பரி சோதகர் ஆகியோர் சம்பந்தப்பட்ட ஊகங் களும், உறுதிப்படுத்தப்படாத தகவல்க ளும்(சிலவேளைகளில்அவற்றை புனை வுகள் எனவும் கூறக்கூடிய ஏதுக்கள் தோன் றலாம்) கசிந்தன.

யாழ்ப்பாணம் மாநகரசபையில் நகர நீர்விநியோகத் தொழில்நுட்பப்பிரிவில் கடமையாற்றும் மூத்த அதிகாரி ஒருவரின் அலுவலக அறைக்கு கழிக்கப்பட்ட உராய்வு நீக்கி எண்ணெய்(என்ஜின் கழிவு ஒயில்) அள்ளி ஊற்றப்பட்டு, அவர் தனது மேசை யில் உட்கார்ந்து இருந்து பணியாற்ற முடி யாதபடி செய்யப்பட்டிருந்ததாம்.

இச் சம்பவத்துக்கு யார் காரணகர்த்தாக் கள் என்பது உறுதிப்படுத்தப்படாவிட்டா லும், அவ் அதிகாரி மீதான அதிருப்தி நிலை ஒன்று அங்கு நிலவி வருகிறது.

இந்த அதிருப்தி நிலையை அடுத்து சம்பந்தப்பட்ட மூத்த அதிகாரி மாநகர ஆணையாளருக்கு நிலைமையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவருமாறு வேண்டு கோள் விடுத்ததையடுத்து, அதிருப்திக்குள் ளான மாநகரசபை விநியோகப் பணியா ளர்களை அழைத்து ஆணையாளர் புத்தி மதிகளையும், அறிவுறுத்தல்களையும் வழங் கினாராம்.

யாழ் மாநகரசபையிலும் அப்பணியா ளர்கள், குறித்த மூத்த தொழில்நுட்ப அதி காரி தொடர்பான ஊழல், மோசடி, சீர் கேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்க ளையே முன்வைக்கின்றனர். யாழ் மாந கரசபையின் மின்சார அத்தியட்சகராகப் பணிபுரிந்து 1990களின் தொடக்கத்தில் ஓய்வு பெற்ற அந்த அதிகாரி , தொண்டு நிறு வனம் ஒன்றில் இணைந்து பல வருடங்கள் பணியாற்றிய பின், தான் முதலில் எங்கு பணியாற்றி ஓய்வு பெற்றாரோ அதே மாந கர சபையில்ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெற்றுள்ளாராம்.

இந்த ஊழியர்கள் தெரிவிக்கும் கருத் துக்கள் அனுபவரீதியானவை போல் மட்டு மே உள்ளன. ஆதாரங்கள் தேவை.

### புலனாய்வுச் செய்தியாளர் பணி அவசியம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முக்கி யமான பெரிய நிறுவனங்களான யாழ். பல்கலைக்கழகம்,யாழ் பொது மருத்துவ மனை, யாழ் மாநகரசபை ஆகியனவற் றின் நிர்வாகிகள், அதிகாரிகள் தொடர் பாக அவ்வப்போது பல்வேறுவிதமான சர்ச்சைகள் வெளிவந்த வண்ணமே உள் ளன.

எனினும் அவற்றையெல்லாம் அந் தந்த நிறுனங்களினது பணியாளர்களும், ஊழியர்களும் தமது பேரம்பேசுகைக்காக வும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கா கவும்முன்வைக்கிறார்கள் என்பதையும் ‘புலனாய்வுச் செய்தியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எடுத்த எடுப்பில் ஒரு பக்கச் செய்தி களை வழங்குவதன் மூலம் மேற்படி நிறு வனங்களின் நிர்வாக நிலையிலுள்ள உயர் அதிகாரிகள் மீது ஏற்கனவே கடு மையான அதிருப்தியுற்ற நிலையிலுள்ள பணியாளர்கள், ஊழியர்கள் ஆகியோரை ஊக்கப்படுத்துவதோ ஆக்ரோஷப்படுத்து வதோ எவ்வித நீடித்து நிற்கும் தீமைக ளையோ, சீராக்கங்களையோ தரப்போவ தில்லை.

இவை வெறுமனே பரபரப்பான கவர்ச் சிகரமான செய்திப்புனைவுகளுக்கு வழி வகுக்கும் புலனாய்வுச் செய்திகளாகும். ஆழ மான ஆராய்வுகள் மூலமாக ஆதாரபூர் வமாக வெளிவர வேண்டும்.

### எது சமூக நீதி?

மேலும் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளுக் கூடாகத் தீர்வுக்காணப் புறப்படுவார்களா னால் வேலை நிறுத்தம்,பகிஷ்கரிப்பு என் பன நிகழும்போது பொதுமக்களுக்கான கல்வித்துறை சார்ந்த சேவை, மருத்துவ சேவை, நீர் விநியோக சேவை போன்ற உயரிய, அத்தியாவசிய சேவைத்துறை கள் சீர்குலைந்துவிடுகின்றன.

ஏற்கனவே போரினால் வீடு வாசல் களை இழந்து முகாம்களிலும், உறவி னர் வீடுகளிலும் வசிப்பவர்களும் உடல், உளப்பாதிப்புள்ளாகி நோயாளிகளாகியு ள்ளோருமானஅப்பாவிமக்கள் ‘பனை யால் விழுந்தவனை மாடேறி மிதித்தது’ போல மீண்டும் மீண்டும் துன்ப துயரங் களைஅனுபவிக்க நிர்ப்பந்திக்கப்படுதல் சமூக நீதியாகாது.

எனினும் பிரச்சினைகள் வெடித்தால் தான் தமது தொழில் பெருகும் என்று எண் ணும் கீழ்த்தரமான செய்தித்தொழிலாளி கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

### தொழில்சங்க நடவடிக்கைகள் என்ன சாதிக்கும்?

உழைக்கும் ஊழியர்படை மாவட்ட ரீதி யாக அல்லது மாகாண ரீதியாக மாபெரும் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை முன் னுக்கு நகர்த்தி அதற்கு ஊடாக அரசாங்க நிறுவனங்களையும் அதிகாரிகளையும் தூய்மைப்படுத்தி புனிதப்படுத்தி விடலாம் என்றுயாராவது கனவு கண்டிருந்தால் அது சில விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும்.

ஆனால் அது கூட அந்த ஊழியர் படை, தம்மையும், தமது மக்களையும் தாமே பாதிப் புக்குள்ளாக்கியுள்ளதாகவே முடிவடைந்து விடும்.

ஒரு சில அதிகாரிகளை வீட்டுக்கு அனுப் புவதன் மூலமோ மாற்றிவிடுவதன் மூலமோ சமூக ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் ஒரு சங்கிலித்தொடராக ஆழமாகப் புரை யோடியுள்ள சீரழிவுகளையும் ஊழல் மோச டிகளையும் மாற்ற முடியாது.

எமது வடக்கு –கிழக்கு பிராந்தியத் துக்கான ஒரு பொருத்தமான அரசியல், நிர்வாக அதிகார அலகு ஒன்று இடைக் காலத் தீர்வாகவோ அன்றேல் நிரந்தரத் தீர் வாகவோ கண்டுபிடிக்கப்படாதவரையில் ஏற்கனவே ‘ஊழல் கறை’ படிந்த அதே நிர் வாக இயந்திரத்தை வைத்துக்கொண்டு காலத்தை ஓட்டுவதே துர் அதிஷ்டமான ஒரே வழியாகும்.

அதிருப்தியாளர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் சரியானவை என எடுத்துக் கொண்டாலும் கூட அதே பழைய பேர்வ ழிகளின் ‘அனுபவசாலித்தனத்தை’சில வாரங்களிலோசிலமாதங்களிலோ வீட் டுக்கு அனுப்பி விட முடியாது.

மாநகரசபை விடயத்திலும் இக்கார ணியைப் புறந்தள்ள முடியாது.மேலும் அரசியல் பின்புலங்களும் இதன் பின் னால் இருக்கலாம்.

### பொழுது போக்க சம்பளம் தரும் மீள்நியமனம்

போராட்ட யதார்த்தத்தின் பிடியினால் வளவாய்ப்புக்களிலிருந்து வடக்கு–கிழக் கின் மனிதவளம் பெருமளவு வடிந்தோடி விட்டது. அதன் நிமித்தம் மீள்நியமனம் வழங் கப்படும் மூத்த அதிகாரிகளே வடக்கு– கிழக்கு மாகாணசபையின் கீழ் இயங்கும் பல்வேறு அமைச்சுக்களின் பணிகளை ஆற்றுகின்றனர்.

இவ் அமைச்சுக்களின் கீழ்வரும் நிறு வனங்கள், திணைக்களங்களிலும் மீள் நியமனம் பெறுவோர் சாதகமான சூழ் நிலைகளையே அனுபவிக்கின்றனர்.

வடக்கு– கிழக்கு நிர்வாகத் தலைநகர மான திருகோணமலை, ஓய்வு பெற்ற பின் மீள்நியமனம் செய்யப்பட்ட அதி காரிகளினால் நிரம்பியிருக்கும் போது தத் தமது அமைச்சுக்களின் கீழ்வரும் திணைக் களங்கள்,நிறுவனங்களுக்கும் முதிர்ச்சி அனுபவம் என்ற அடிப்படைகளை முன் வைத்து மீண்டும் மீண்டும் மீள்நியமிக்கப் படுவோரின் மூலமாகவே பதவிகள் நிரப் பப்படும்.

இந்நியமனங்கள் தொடர்பில் வழமை யான தனிப்பட்ட செல்வாக்குகள் போன் றன ஆதிக்கம் செலுத்துவதும் வெளிப் படையாகத் தெரிகின்ற விடயங்கள்.

இந்த ஆதிக்கக் காரணிகள் நிறைவான அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூட பாரதூரமாகச் செல்வாக்குச் செலுத்து கின்றன. விடுதலைப் போர், அரசாங்கத் தின்'விடுவிக்கும்' போர்,சமாதானத்துக் கான போர் என்பவற்றுக்கிடையில் அல்லா டிக்கிடக்கும் வடக்கு–கிழக்கின் பொது நிர் வாகத்தின் நிலமை இன்றும் மோசமானதாக வே இருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகம்,யாழ் பொது மருத்துவமனை என்பன வடக்கு–கிழக்கு மாகாணசபையின் அதிகாரத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் அல்ல. உயர்கல்வி அமைச்சின் கீழ் வரும் பல்கலைக்கழகங் கள் மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக் கழகத்துக்கும், மத்திய சுகாதார அமைச்சு பொதுமருத்துவமனைக்கும் பொறுப்பாக உள்ளது.

இந்நிறுவனங்கள் தொடர்பான நிர் வாகச் சீராக்கல்கள் தொடர்பான அனைத்து முடிவுகளும் கொழும்பை மையப்படுத்தி யனவாகவே உள்ளன.

அதனால் ஏற்படும் தாமதங்களும் புரிந் துணர்வு இல்லாத்தன்மைகளும் பொது மக்களுக்கானசேவைகளை மேலும் மேலும் பாதிப்படையச் செய்து விடும்.

கொழும்பு அரசியல் சக்திகளை இங்குள்ள அதிகாரவர்க்கம் மிகச் சாதகமாக்கிக் கொள் ளுகின்றது.

இவ்வாறாக மாகாண அரசு, மத்திய அரசு என்கின்ற நிர்வாகப் பதங்கள் வடக்கு–கிழ க்கு பிராந்தியத்தைப் பொறுத்தவரை பயனற் ற நிர்வாகப் பதங்களாகவே உள்ளன.

மக்களின் சமூக பொருளாதார மேம் பாட்டுக்குரிய அரசியல் அலகுகள் இவை அல்ல. அப்பிராந்தியத்துக்கான பொருத் தமான அதிகார பகிர்வு மூலமாகவே வடக்கு– கிழக்கு சமூகம் தமது பிராந் தியத்துக்கான அரசியல், நிர்வாக அதி காரத்தைத் தாமே அனுபவித்து அமுலாக் கும் வகையில் சட்டரீதியான விவகாரங் களைக் கட்டுப்படுத்தி கையாளவும் பொருத் தமான சட்டவிதிகளை ஆக்கவும் அந்த அதி காரக் கையளிப்பு இடம் பெறும் வகை யில் இடைக்கால ஏற்பாடொன்றின் மூலம் அவசரமாக நிலைமைகள் சீராக்கப்படா விட்டால் வடக்கு–கிழக்கின் அரசாங்க நிறுவனங்கள் பலவழிகளிலும் தமது ஆக்கபூர்வத் தன்மைகளை இழந்து விடும் வாய்ப்புக்கள் உள்ளன.

அதிருப்திகள்,பிளவுகள், முரண்பாடு கள்,சிக்கல்கள் என்பன தொடர்ந்தும் அதி கரிக்கும் போது மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாரைம் , அபிவிருத்தி என்பன வே அதிகளவில் பாதிப்படையும்.

வேலை நிறுத்தங்களும், பகிஷ்கரிப்பு களும் மேலும் மேலும் சம்பந்தப்பட்ட தரப்புகளை வடக்கு கிழக்கு பிராந்தியத் தின் அரசியல் விடுதலை, சமூக விடுதலை என்பவற்றுக்குப் பாதகங்களை விளை விக்கும். இது சகதி அரசியல் சக்திகளின் தலையீட்டுக்கு வழிகோலும்.

–யாழ்.ஆத்மா–

## ஒரு வித்தியாசமான அமைதி வழி!

பல்வேறு சந்தர்ப்பங்களின் போது எமக்கு ஏற்படும் வன்முறை உணர்வினால் ஏற்படுகின்றபாதிப்புக்களைபின்புஎண்ணி நாம்கவலைப்படுவதுண்டு.

மனதை அமைதி வழியில் பேணிக் கொள்வதற்காக ஆன்மீக வாதிகளும் உள வியலாளர்களும் கூட பல ஆலோசனைக ளையும், செயன்முறைகளையும் நமக்கு வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

இங்கே படத்தில் கால்பந்தாட்ட மைதா னத்தில் ரசிகர்கள் அவ்வப்போது தமக் குள்ளே மோதிக்கொள்வதைத் தவிர்ப் பதற்காக அழகிகள் அரைகுறை ஆடை களுடன் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதை படம் வெளிப்படுத்துகிறது.

ரிரசிகர்களின் மனதை போட்டி நிகழ்சி யின்போது எவ்வாறு அமைதியாக வைத்துக்கொள்ளலாம் என தனியார் நிறுவனம் ஒன்று தன் மூளையைக் கசக் கியதில் இந்தஐடியா அதற்கு வந்திருக்கிறது.





கூந்த 10ஆம் திகதியில் இருந்து ஜூலை 16ஆம் திகதி வரை நடைபெற இருக்கும் 16 நாடு கள் கலந்துகொள்ளும் ஐரோப்பிய கோப் பைக்கான கால்பந்துபோட்டியின்போது ரசிகர்கள் மத்தியில் எழக்கூடிய வன்முறை களை தணிப்பதை கவனத்தில்கொண்டே மைதானத்தின் ஒருபுறத்தில் இந்த இளம் யுவதிகள் காட்சிப்படுத்தலுக்காக அழைக் கப்பட்டிருக்கிறார்கள். எப்படியோ இந்த அழகிகளைப்பார்த்து ரசிகர்கள் வித்தியாச மான கலாட்டாக்களில் ஈடுபடாவிட்டால் சரிதான்.

அழகிகளைப் பார்த்து வீரர்கள் விளை யாட்டை கோட்டைவிட்டால் நிலமை இன்னும் தலைகீழாக அமைந்து விடும்.

பிள்ளை யார் பிடிக்கப் போய் நட்டுத கதையாக இது போகாமல் சம்பந்தப்பட்ட நிறுவனம் பார்த்துக்கொண்டால் சரிதான்

* * * *

# பித்தன் பதில்கள்

*கே.எஸ்.கே.உடப்பு.*

கே:– பித்தா! நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளும் என்னைக் காதலித்தாள். ஆனால் அவளுடைய அம்மா அவளுக்கு 'லண்டனில்' மாப்பிள்ளை பார்த்து



திருமணமும் முடித்து வைத்துவிட்டாள். அவளை என்னால் மறக்க முடியவில்லை. இனி நான் என்ன செயவது?

ப:– கடைக்குப்போய் நல்ல ஷம்போவாக வாங்கிக்கொண்டு வந்து நன்றாக தலையிலே தேய்த்து முழுகும். இப்போது தலை முழுகி ஆகிவிட்டதா....? இனி வேறு புதிய அயன் பண்ணிய சட்டையாகப் பார்த்து எடுத்து அணிந்து கொண்டு புறப்படும். வேறொன்று மாட்டா மலாபோகும்.

*சு.அனிதா – செம்பியன்பற்று.*

கே:– அன்பின் பித்தா! கிராமத்து மக்களைப் பார்த்து – நகர மக்கள் பட்டிக்காட்டான் என்று கூறுகிறார்களே? ஏன்?

ப:– அம்மணி – நம்மவர்களின் லொள்ளு அது. என்ன செய்ய முடியும். புங்குடுதீவு, வேலணை, கரம்பன் பகுதிகளில் வாழ்பவர்களைப் பார்த்து தீவான் என்பார்கள். ஆனால், நாமெல்லாம் இலங்கையரே. அதேபோல் வன் செயல்களால் ஒரு தீவு என்பதையும் மறந்து வருகிறார்கள். இடம் பெயர்ந்து எங்கேயாவது நகரப் புறத்தில் லொச்சுகளிலோ அல்லது நெருப்புப்பெட்டி போன்ற வீடுகளிலேயோ தங்கி இருப்பார்கள். அதன் பின்பு தாங்கள் ஏதோ நகரத்திலே பிறந்து வளர்ந்தவர்கள் போல் பந்தா பண்ணுவார்கள்.

கெட்ட வேலைக்கு ஆணடிமை என்று பட்டம் சூட்டி கிளர்ச்சி, எழுச்சி, ஆர்ப்பாட்டம், போராட்டம், துள்ளாட்டம், குதியாட்டம் இவையெல்லாம் தேவையா?

*ந.கஜநிதி – மம்யூனிற் மல்லாவி.*

கே:– பித்தா! எனது இந்த சந்தேகத்தை தீர்ப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆண்கள் ஒரு இடத்திலே காதலித்துக்கொண்டு பின்னர் இன்னொரு இடத்துக்கு சென்று அங்கேயும் பெண்களைச் சுற்றுகிறார்களே ஏன் பித்தா?

ப:– மீனவர்கள் கடலுக்குச் செல்வார்கள். அங்கே ஒரு இடத்திலே வலையை வீசுவார்கள். அதில் மீனைப்பிடிப்பார்கள். பிடித்த அவ்வளவும் போதும் என்று வீடு திரும்பி விடுவார்களா? இல்லையே! இன்றும் கொஞ்சம் நல்ல மீன் – இன்னும் கொஞ்சம் பெரிய மீன் கிடைக்காதா என்று வேறிடங்களில் வலை வீசிப் பார்ப்பார்களோ இல்லையே .... அது... அது அதேதான்... இது.... இது... இது...!

*மு.சிவரூபன் – வவுனிக்குளம்.*

கே:– டியர் பித்தண்ணா! நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் எமது ஊரைச் சேர்ந்தவள். ஆனால் பெரிய இடம். எனது இந்த காதலை எனது நண்பர்கள் பேராசை என்கின்றார்கள். ஆனால், அவர்கள் ஸ்நேகா, ரம்பா. தேவயானி ஆகியோரை தாம் காதலிப்பதாக சொல்கின்றார்கள். பித்தா இதில் எது பேராசை?

ப:– சிவரூபன்..... உமது காதல்தான் பேராசை. உமது நண்பர்களின் காதல் நிறைவேறாத ஆசை.

*எஸ்.பி.ஜி.றேகன் – தாண்டியடி, கோமாரி*

கே:– ஏன் பித்தனே? ஆண்களின் உடைகளை பெண்கள் அணிவது போல் – பெண்களின் உடைகளை ஆண்கள் அணிந்தால் எப்படி இருக்கும்?



ப:– ஐயா றேகன்.. இந்தக்காலத்தில் தான் ஆண்களின் உடைகளை பெண்கள் அணிகிறார்கள். ஆனால் பண்டைய காலங்களில் பெண்களின் உடைகளைத்தான் ஆண்கள் அணிந்தார்கள். உங்கள் ஊர்களில் நாட்டுக் கூத்து, அல்லது சரித்திர நாடகங்கள் போடும்போது பார்த்ததில்லையா? ராசா – மந்திரி எல்லாம் காஞ்சிபுரம் சாறிகட்டியபடி மேடையில் வந்து யாரங்கே மாதம் மும்மாரி பொழிகிறதா என்று பந்தாபண்ணுவார்களே! பார்த்ததில்லையா?

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான – குறும்பான – யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜூலை 04 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



கேள்வி:– பெண்களை பீடித்திருப்பது பணமா? குணமா?

பதில்:– பணம் தான். இந்தக் காலத்துப் பெண்கள் பணத்துக்கு விலை போகிறார்கள்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில்மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாட்ராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

ஒரு கலவரமோ குழப்பமோ ஏற்பட்டு நகரப் புறத்தில் அடி விழுந்தால் – பெட்டி படுக் [redacted]

*பா.பிரதீபன் – வவுனியா.*

[redacted] யர் பித்தா! இப்போது உறங்கும் [redacted]

வான்... Wish you all the best.

*ம.அமுதினி – வட்டக்கச்சி.*

கே:– பித்தா! வாழும் வயதில் விதவை ஆனவள் கறுப்புப்பொட்டு இடுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் – பிளிஸ் பதில்!



ப:– எனக்கு பிடிக்கவே – பிடிக்காத விடயங்களில் ஒன்று இது... பொட்டு என்று வைக்கத்துணியும் நீங்கள் பின்னர் ஏன் கொஞ்சம் பிற்போக்குத்தனமாக கறுப்புப்பொட்டு வைக்கிறீர்கள். குங்குமப் பொட்டையோ அல்லது சிவப்பு நிற ஸ்டிக்கர் பொட்டையோ வைக்க வேண்டியதுதானே! விதவைகள் வெள்ளைப் புடைவை கட்ட வேண்டும். நகைகள் அணியக் கூடாது. பூ பொட்டு வைக்கக்கூடாது என்பதெல்லாம் மலையேறிவிட்டது. இப்போ காஞ்சிபுரம் சரசரக்க – கொத்து மல்லிகை தொங்க – தாலியும் போட்டுக் கொண்டு பவனிவரும் காலமிது. இந்த நேரத்தில் போய் கறுத்தப்பொட்டுக்காக – கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதுசரி அமுதினி விதவைகள் வெள்ளைப் புடவைகட்டி, பொட்டு, நகை இல்லாமல் திரிவதைப் பார்த்தால் அடடா தனிமையில் தவிக்குதே கணக்கு பண்ணிப் பாப்பமா என்று அடுத்த வீட்டுக் காரனுக்குத் தோன்றுமா இல்லையா?.... இது தேவையா?....

*யோ.நிக்சன் – மல்லாவி.*

கே:– பித்தன் சேர் – நீங்கள் ஒரு புத்த பிக்குவாக இருந்தால் தற்போது நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு என்ன பங்களிப்புச் செய்வீர்கள்?

ப:– எதிர்ப்பேன். ஏனென்றால் என்னையும் துகிலுரிந்து சாத்து சாத்தென்று சாத்தி – தர்ம அடி போட்டு வைத்திய சாலையில் அனுமதித்து விடுவார்களே! எனது உடம்பு தாங்காதுப்பா.... புத்த பிக்குகளை கண்டதும் தலை தாழ்த்தி – இடுப்பைவளைத்து கும்பிடுபோட்டதெல்லாம் அந்த காலம். – இப்போ சற்றேனும் ஏறுமாறு என்றால் அடி – உதை தான்.....

*இ.ராம்குமார் – கொடிகாமம்*

கே:– பித்தனே.... குழந்தையின் சிரிப்பிலே கடவுளைக் காணலாம் என்கிறார்களே – மிருகங்களின் சிரிப்பில் கடவுள் தெரிவதில்லையா?

ப:– கொடிகாமத்திலே மிருகங்கள் சிரிக்குமா என்ன?

*க.அருணா – யாழ்.பல்கலைக்கழகம்.*

கே:– அன்பின் பித்தா! அடுத்த சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று சுபவேளையில் உம்மிடம்வந்து கைவிசேஷம் வாங்கலாமென எண்ணியுள்ளேன். எந்த நேரத்தில் உங்களைச் சந்திக்க வரலாம்?

ப:– ஆஹா... என்னை நேரிலே வந்து சந்திக்க பலர் பல்வேறு முயற்சிகளும் மேற்கொண்டனர். நான் இடம் கொடுக்கவில்லை. நீர் புது மாதிரியான ஒரு பிளான் போடுகிறீரா? ஆஹா இந்த டக்கா.... டிக்காவெல்லாம் நம்மகிட்ட வேகாதுங்க.

*ஜன் சிவசம்பு – முழங்காவில்.*

கே:– பித்தா! ஒரு ஜோக் பிளீஸ்?

ப:– விமானமொன்று வானத்தில் பறந்து கொண்டிருந்தது. பல் நாடுகளின் உல்லாசப் பயணிகளும் அதில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அந்த விமானத்தின் கப்டன் விமானப் பயணிகளைப் பார்த்து நாம் கேட்கும் நேரத்தில் அருகேயுள்ள ஜன்னல் வழியாக வெளியே கையை நீட்டி எந்த நாட்டுக்கு மேலாக விமானம் பறந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் உங்கள் பயணச் செலவு முழுவதையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றார்.

போட்டியில் கலந்து கொள்ள ஒருவர் முன் வந்தார். அவரைப்பார்த்து இப்பொழுது விமானம் எந்த நாட்டின் மேலால் பறக்கிறது என்று கேட்டார் கப்டன். ஜன்னலுக்கு வெளியே கையை விட்டு துளாவிப் பார்த்த பயணி சொன்னார் பிரான்ஸ் என்று. கப்டனால் ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை. எப்படிக் கண்டு பிடித்தீர்கள் என்று கேட்டார். "எனது கையிலே ஈபில் டவர் தட்டுப்பட்டது'' என்றார் பயணி



தொடர்ந்து பல மணி நேரப் பறப்பின் பின்பு மீண்டும் பயணியிடம் கப்டன் கேட்டார், தற்போது எந்த நாட்டுக்கு மேலாக விமானம் பறந்து கொண்டிருக்கிறது? பயணி இப்போது கையை வெளியே விட்டு துளாவியபின் சொன்னார். அமெரிக்கா. கப்டனுக்கு இப்போதும் ஆச்சரியம். இப்போது எப்படிக் கண்டுபிடித்தீர் என்று கேட்டார் கப்டன். லிபர்ட்டி எனப்படும் சுதந்திர தேவியின் சிலை எனது கையிலே தட்டுப்பட்டது என்றார் பயணி.



அடடா இவ்வாறான நாடுகளுக்கு மேலே போனால் பயணி சுலபமாக இடங்களை அடையாளம் கண்டு விடுவார் எனவே இனி கொஞ்சம் கஷ்டமான இடத்துக்கு செல்வோமென திட்டமிட்டார் கப்டன். நீண்ட நேரப் பயணத்தின் பின்பு பயணியிடம் கேட்டார் கப்டன் இப்போது சொல்லும் பார்ப்போம் தாம் பறந்து கொண்டிருப்பது எந்த நாட்டுக்கு மேலாக? பயணியோ கையை வெளியே விட்டு நீண்ட நேரமாக துளாவியபடியே இருந்துவிட்டு கையை உள்ளே எடுத்துவிட்டு முகத்தை தொங்கப் போட்டபடி இருந்தார். கப்டனுக்கோ பரம சந்தோஷம். ஆஹா பயணியை மடக்கி விட்டோமே என்று நினைத்தபடி கேட்டார், எந்த நாடு என்று கண்டுபிடித்து விட்டீரோ? பயணி கவலையுடன் சொன்னார் இலங்கை.

கப்டனுக்கோ ஆச்சரியமான ஆச்சரியம். உமது முகத்தைப்பார்த்து நாட்டைக் கண்டு பிடிக்கவில்லை என்றல்லவா நினைத்தேன். எப்படிக் கண்டு பிடித்தீர். உமது கையால் தொடுமளவுக்கு உயரமான கட்டடம எதுவும் இலங்கையில் கிடையாதே என்றார். பயணி ''ஐயா நான் கையை ஜன்னலுக்கு வெளியே நீட்டியபோது என் கையில் கடிகாரம் மோதிரம் எல்லாம் இருந்தன. பின்பு கையை உள்ளே எடுத்து பார்த்தபோது அவை இரண்டும் இல்லை. எனவே இது இலங்கை''

*எஸ்.மோகனதாஸ் – முறிகண்டி*

கே:– பித்தன் அவர்களே! குடும்பப் பிரச்சினை தாங்க முடியவில்லை. எனவே சன்னியாசியாக போக முடிவெடுத்துள்ளேன். யாரிடம் சென்று உபதேசம் பெறுவது?

ப:– ஐயா...... ரா.. ரா.... சா... நானும் அப்படி ஒருவரைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். ஒருவரும் மாட்டமாட்டேன் என்கிறார்களே. தயவுசெய்து அப்படி யாராவது மாட்டினால் எனக்கும் கொஞ்சம் பிடித்துத் தாருங்கள்... பெரீய்...ய.... உதவி... ராசா...

எம்.தினேஷன் – உடுப்புக்குளம் – *அலம்பல்.*

கே:– ஹாய் பித்தன் சேர்! மனைவி, காதலி இவர்களில் யார் வரும்போது வாழ்க்கையில் திருப்பம் ஏற்படும்?



ப:– காதலி வரும்போதுதான் வாழ்க்கையில் திருப்பங்கள் வர ஆரம்பமாகின்றன. பின்னர் மனைவி வரும்போது வரும் திருப்பங்கள் எல்லாம் திரும்பவே முடியாத திருப்பங்களாக மாறிவிடுகின்றன.

## பித்தனின் கேள்வி

கேள்வி:– ஜனாதிபதி கூறியதுபோல் 3 மாதங்களுக்குள் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படுமா?

## வாசகர் பதில்கள்

*தி.ராஜ்மோகன் – கிளிநொச்சி.*

சந்திரிகா அம்மையாரின் கணக்கின்படி 3 மாதம் என்பது 3 வருடங்களைக் குறிக்கும்.

*வ.பவானி – வற்றாப்பளை.*

ஒப்பேறாத ஒன்றை ஒப்பேற்றுவதாகக் கூறுவதில் அம்மையார் மேதையல்லவா?

*ம.மதி – அடம்பன்.*

பல வருடங்கள் போரிட்டும் புலிகளை வெல்ல முடியாத சந்திரிகா அம்மையார் 3 மாதத்துக்குள் இப்பிரச்சினையை முடிப்பாரா?

*த.முருகானந்தம் – கொழும்பு.*

நாடாளுமன்றத்துக்குள்ளே இருப்பவர்களே வேலையில்லாது அடிபடுகிறார்கள். இப்படி நிலைமை இருக்கும் போது நாட்டில் உள்ள பட்டதாரிகளுக்கு எங்கே வேலை கொடுக்கப் போகிறார் அம்மையார்?

*வி.வானதி – திருகோணமலை.*

நம்பிக்கைதான் வாழ்க்கை என்பதை பட்டதாரிகள் உணரவேண்டும் என்பதற்காக வேலை கொடுக்காது போனாலும் பரவாயில்லை, நம்பிக்கையைக் கொடுப்போம் என்ற எண்ணப்பாட்டில் தான் அம்மையார் இப்படியொரு உறுதி மொழியை கூறியுள்ளார்.

# கீதாஞ்சலியின் பரதநாட்டிய அரங்கேற்றம்



செல்வி கீதாஞ்சலி துரைராஜாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இவரது அரங்கேற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ் வருகை தந்திருந்ததுடன், சிறப்பு விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக (கல்வி பீடம்) பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரன் சமுகமளித்திருந்தார்.

இந்த அரங்கேற்ற நிகழ்வுக்கு ஸ்ரீமத் வசுந்தரா தோமஸ் (சென்னை - கலாஷேத்ரா) நட்டுவாங்கம் வழங்கினார். மிருதங்கம் ஸ்ரீ. வி.ஜம்புநாதன், வாய்ப்பாட்டு ஸ்ரீ ஹரிபிரசாத் (சென்னை - கலாஷேத்ரா), வயலின் ஸ்ரீ. எஸ். திபாகரன் ஆகியோர் வழங்கினர்.

செல்வி கீதாஞ்சலி துரைராஜா சைவமங்கையர் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை அற்றிய நாட்டிய ரத்னா திருமதி. நிருத்த சொரூபி தர்மகுலேந்திரனின் சிஷ்யை ஆவார்.

இவர் குருபத்தியும், பரதக்கலையை கற்க வேண்டும் என்ற ஆர்வமும் மிக்கவர். நிருத்த சொரூபி தர்மகுலேந்திரன் அவர்களிடம் நடனம் பயின்றவர்களுள் முதன்மையான மாணவிகளுள் இவரும் ஒருவர். தொடர்ந்தும் நடனம் பயிலும் ஆவலினால் சென்னை பரத சூடாமணி அடையார் கே.லக்ஷ்மனிடம் சில காலம் நடனம் பயின்று பின்னர் அவரின் வழிகாட்டலில் சென்னை கலாஷேத்ராவில் தொடர்ந்து நான்கு வருடங்கள் கற்று டிப்புளோமா பட்டம் பெற்றார்.



அரங்கேற்ற நிகழ்வுக்கு கலாஷேத்ரா இயக்குனர் எம்.ராஜாராம், பரத சூடாமணி அடையார் லக்ஷ்மன், சுவாமி ஆத்மகனானந்தா, திருமதி நிருத்த சொருபி தர்மகுலேந்திரன் ஆகியோர் ஆசிச் செய்தி வழங்கியிருந்தனர்.



கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் பெயரில் ''ஸ்ரீ ஞானவைரவர் பக்திப்பாமாலை பாகம் II'' என்ற இறுவட்டு (சி.டி) தொகுதிக்கு பாடல்களைப் பாடியதுக்காக தென்னிந்திய பிரபல பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் செல்வக் குமாருக்கு ஆலய பரிபாலனசபையினரால் அண்மையில் கௌரவம் வழங்கப்பட்டது.

ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ம.றமேஸ்குமார் வாழ்த்துக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கிறார்.


WWW.WTRUK.COM

தாய் மண்ணே வணக்கம்........ தமிழ் மண்ணே வணக்கம்........

தாயகத்தில் இருந்து தரணி எங்கும் ஒலிக்கும் ஒரே வானொலி....

உலகத்தமிழர் வானொலி

World Tamilar Radio

24 Hours Online Radio

www.wtruk.com

இணையத்தளத்தினூடாக

இலங்கைச் செய்

உடனுக்குடன் வ

உங்கள் வானெ



??? Sneha Talk

Listen WTR

நடிகை,

Live

WWW.WTRU




யாழ்ப்பாணம்

# இப்படியும் ஒரு பிள்ளை

ஒரு ஊரிலே ராமு என்று ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். பிள்ளைகள் சிறியவர்களாக இருக்கும் போதே அவரது மனைவி இறந்து விட்டார்.

மூன்று பிள்ளைகளும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள். மூவரையும் நல்ல முறையில் வளர்த்திருந்தார் பெரியவர். பிள்ளைகளுக்குத் தெரியாமல் சிறிது செல்வம் சேர்த்து வைத்திருந்தார் அவர். திடீரென அவர் நோய்வாய்ப்பட்டார். இனிமேல் நீண்ட நாள் வாழப் போவதில்லை என்பது அவருக்கு புரிந்து போயிற்று.

உடனே தனது மூன்று மகன்களையும் அழைத்தார்.



"நல்லபடியாக உங்கள் மூன்று பேரையும் வளர்த்து நான் ஆளாக்கிவிட்டேன். இனி ரொம்ப நாள் நான் உயிரோடு இருக்க மாட்டேன்" என்று தெரிகிறது. நான் கண்ணை மூடுறதுக்குள்ள உங்களிடம் ஒரு விசயம் சொல்லவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ரொம்ப கஷ்டப்பட்டு நான் கொஞ்சம் செல்வம் சேர்த்து வைச்சிருக்கிறேன். அந்த செல்வத்தை உங்களில் ஒருத்தருக்குத் தரப் போகிறேன்" என்றார்.

மூன்று பிள்ளைகளும் அப்பா சொல்வதையே உன்னிப்பாக கேட்டுக்கொண்டிருந்தனர். அவர் தொடர்ந்து சொன்னார்.

"உங்களில் யார் மக்களுக்கு நல்ல உதவிகளைச் செய்கிறீர்களோ அவர்களுக்கே அந்த செல்வத்தை தரப் போகிறேன். இதற்காக உங்களுக்கு ஆறு மாதம் அவகாசம் தருகிறேன்" என்றார்.

இதைக் கேட்ட மூத்தவனான நகுலனும் இரண்டாவது மகனான தேவனும் உற்சாகம் கொண்டார்கள்.

"அப்பா இதோ இப்போதே புறப்படுகிறேன் ஆறுமாசம் கழித்து வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு நகுலன் புறப்பட்டான்.

"உங்கள் செல்வம் எனக்குத்தான் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது அப்பா" என்று அளவு கடந்த தன்னம்பிக்கையுடன் சொல்லிக் கொண்டு வெளியேறினான் தேவன்.

ஆனால், கடைசி மகன் காந்தி மட்டும் அங்கே இருந்தான்.

"காந்தி! நீ போகலையா?" என்றார் அப்பா. "இல்லையப்பா" என்றான் காந்தி.

ஆறு மாதங்கள் கழிந்தன மூத்த மகன் நகுலன் வந்தான். தான் செய்த உதவிகளை பட்டியல் இட்டான். வாழவழியற்று தனியே இருந்த கிழவனுக்கு உதவியதாகவும் இன்னும் பற்பல உதவிகள் செய்ததாகவும் மூச்சுவிடாமல் சொன்னான்.

இரண்டாவது மகன் தேவனும் வந்து சேர்ந்தான். அவன் பங்குக்கு அவனும் உதவிகள் செய்த பட்டியலை போட்டான்.

எத்தனையோ ஏழைகளுக்கு உதவி செய்தேன், அதில் ஒருவரின் வீடு தீப்பற்றி எரிந்தபோது நானே நீர் அள்ளிஊற்றி அணைத்தேன் என்றெல்லாம் கூறிக் கொண்டே இருந்தான் தேவன்.

அப்போ "நீ யாருக்கும் உதவி செய்யப் போகவில்லையா?" என்று மூன்றாவதுமகன் காந்தியைப் பார்த்துக் கேட்டார் அப்பா.

இல்லையப்பா.....! உங்களை வயதான காலத்தில் தனியாக விட்டுச் செல்ல எனக்கு மனசில்லை. எனக்கு எந்தச் சொத்தும் வேண்டாம். நீங்கள் தான் எனக்கு சொத்து. பெற்றவர்களுக்குப் பிறகுதான் மற்றவர்கள் எல்லாம்" என்றான் காந்தி.

அவனது பேச்சைக் கேட்டு அப்பா நெகிழ்ந்து போனார்.

"மகனே! உன் உயர்ந்த உள்ளத்தைப் பாராட்டுகிறேன். பெற்றவர்களைப் பேணிக் காக்க வேண்டும் என்பதற்கு நீயே எடுத்துக் காட்டு எனவே என் செல்வத்தை எல்லாம் அடையத் தகுதியானவன் நீதான்" என்றார். ஆனால், அவர் சொன்னதை காந்தி ஏற்கவில்லை. "வேண்டாம் அப்பா. உங்கள் செல்வத்தை மூன்று பேருக்கும் சமமாகவே பிரித்துக் கொடுங்கள். அதைத்தான் நான் விரும்புகிறேன்" என்றான்.

"உன் விருப்பப்படியே செய்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார் தந்தை.

சகோதரர்கள் இருவரும் அன்பு மிகுதியுடன் காந்தியைகட்டி அணைத்துக் கொண்டனர்.

ம.வினிதா
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

# சிறார்களின் சிந்தனைக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 5 | 7 | 4 | 8 | 4 |
| 6 | 20 | 40 | 32 | 16 | 2 |
| 24 | 5 | 8 | 4 | 4 | 2 |
| 3 | 5 | 4 | 2 | 8 | 16 |
| 8 | 25 | 32 | 16 | 32 | 2 |
| 24 | 100 | 8 | 4 | 30 | 15 |

அருகே உள்ள அட்டவணையில் உள்ள அடுத்து வரும் இரண்டு எண்களை பெருக்குவதன் மூலம் விடை பெறப்படுகின்றது. அவ்வாறு எத்தனை பெருக்கங்கள் உள்ளன? கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்? (உதாரணம்: 4x6=24, 2x15 =30) உங்களால் கண்டுபிடிக்கப்படும் பெருக்கங்களை நீங்கள் ஓர் தபால் அட்டையில் எழுதி எமக்கு அனுப்பலாம். அதிகூடிய சொற்களை எழுதும் மூவருடைய பெயர் விபரங்கள் இச் சிறுவர் பகுதியில் பிரசுரிக்கப்படும். கடந்த வாரம் வெற்றி பெற்றோரது பெயர்: 1) கசி, வவுனியா. 2) சி.கயந்தன், அளவெட்டி அருணோதயா கல்லூரி. 3) க.விந்தன், தரம் 9, கொக்குவில். 4) செ.அமல், தரம் 8, யாழ். மத்திய கல்லூரி. 5) எம்.சிந்துஜா, தரம் 10, மு/ முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி.

நீங்கள் உங்களது பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி:

"சிறுவர் பகுதி"
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# அறிவியல் உண்மைகள்

இரவு நேரங்களில் மரங்களின் கீழ் படுப்பது ஆபத்து ஏன்?

இரவில் ஒளித்தொகுப்பு நிகழ்வதில்லை, சுவாசம் மட்டுமே நிகழ்கின்றது. சுவாசத்தின் போது காபனீரொட்சைட் வெளிவிடப்படுகின்றது. ஒளித்தொகுப்பு நடைபெறாததால் அடர்த்தி கூடிய காபனீரொட்சைட்டின் செறிவு மரங்களின் கீழ் அதிகளவில் காணப்படும். காபனீர் ஒட்சைட்டு மனிதரின் உடல் நலத்திற்கு தீங்கு பயக்கும்.

மாப்பொருள் பரிசோதனையைச் செய்யும் பொழுது இலை அற்ககோலில் அவிக்கப்படுவது ஏன்?

பச்சை இலைக்கு அயடீன் விடும் பொழுது நீலநிறம் தெளிவாக தெரியாது. இலையில் உள்ள பச்சையம் நீரில் கரையாது. பச்சையம் அற்ககோலிலே கரையும்.

*டொ. அர்ச்சனா, தரம் – 09, தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி.*

# செல்லும் தூரங்கள்

| | |
|---|---|
| சிறுத்தை | மணிக்கு 112 கி.மீட்டர் |
| மான் | மணிக்கு 95 கி.மீட்டர் |
| சிங்கம் | மணிக்கு 88 கி.மீட்டர் |
| முயல், நரி | மணிக்கு 75 கி.மீட்டர் |
| குதிரை | மணிக்கு 64 கி.மீட்டர் |
| வேட்டை நாய் | மணிக்கு 34 கி.மீட்டர் |
| எருமை | மணிக்கு 55 கி.மீட்டர் |
| ஓநாய் | மணிக்கு 45 கி.மீட்டர் |
| யானை | மணிக்கு 35 கி.மீட்டர் |
| கங்காரு | மணிக்கு 25 கி.மீட்டர் |

ஜெ.ஸ்ரீபன்,
மே/ப. அ.பிரான்சிஸ்,
இரணைப்பாலை

# சின்னங்கள் சில..

| | |
|---|---|
| தீப்பந்தம் | - ஒலிம்பிக் |
| வெள்ளைப்புறா | - சமாதானம் |
| ஒலிவ் மர இலை | - சமாதானம் |
| சக்கரம் | - தர்மம் |
| கறுப்புக் கொடி | - சோகம்/எதிர்ப்பு |
| தாமரை | - பண்பாடு/ நாகரீகம் |
| தலைகீழான கொடி | - துன்பம் |
| சிவப்பு விளக்கு | - ஆபத்து |
| பச்சை விளக்கு | - செல்லுதல் |
| மஞ்சள் விளக்கு | - தயாராகு |

*இ. பேபி நிஷாந்தினி*
*தரம் - 10, கிளி/அக்கராயன் மகா வித்.*

# சிறார்களின் கைவண்ணம்



[redacted]

கே. ஆர்.
யாழ்ப்பாணம்

ப.சசிதா
பிரமந்தனாறு

# அறிந்து கொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| உருகும் உள்ளத்தில் உதிப்பது | – | அன்பு |
| இறுகும் உள்ளத்தில் எழுவது | – | அகந்தை |
| அன்பு விளைவிப்பது | – | ஒற்றுமை |
| அகந்தை விளைவிப்பது | – | வேற்றுமை |
| வேற்றுமையால் விளைவது | – | துன்பம் |
| வருவதும் போவதும் இரண்டு | – | துன்பம், இன்பம் |
| வந்தால் போகாதவை | – | புகழ், பழி |
| போனால் வராதவை | – | மானம், உயிர் |
| தானாக வருவது | – | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | – | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | – | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது | – | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | – | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | – | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | – | இறப்பு, பிறப்பு |
| அறிவித்தால் அறியும் பொருள் | – | பசு |
| அறிவித்தால் அறியமுடியாதது | – | பாசம். |

*கஜநிதி நல்லையா, தரம் 11, மு/மல்லாவி மத்திய கல்லூரி.*

# ஐவகையானவை

* ஐவகை நிலங்கள்

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்.

* ஐம்பெரும் பூதங்கள்

நிலம், நீர், தீ, காற்று, வானம்

* ஐம் பெரும் காப்பியங்கள்

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி.

* ஐவகைப் பாக்கள்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா

ஐம்பெருங் குழு

அரசர், அமைச்சர், புரோகிதர், ஒற்றர், தூதுவர்.

*எஸ்தர் ஜெபிக்கா,*
*தரம் 9,*
*யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.*

# அடம்பிடிக்கிறதா குழந்தை!

அடம்பிடிப்பது குழந்தைகளின் கூடப்பிறந்த குணம். ஒவ்வொருவரும் குழந்தையாக இருக்கும்போது அடம்பிடித்திருக்கத்தான் செய்வார்கள். ஆனால் அதை நினைத்துப்பார்க்காமல் தங்கள் குழந்தைகள் அடம்பிடிக்கும்போது கம்பை எடு, தடியை எடு என்று அதட்டுவார்கள்.

ஓரளவு விவரம் தெரிந்த குழந்தைகள் கூட அடம்பிடித்து, நடு வீதியில் உருண்டு புரண்டுவிடுவார்கள். எப்படியாவது தான் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்களது நோக்கம்.



உங்கள் குழந்தை உங்களிடம் பிஸ்கட் கேட்டு மதிய நேரத்தில் அடம்பிடிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் உடனே, இது சாப்பிடும் நேரம், பிஸ்கட் தரமாட்டேன் என்று கூறினால், எப்படியாவது பிஸ்கட் வாங்கிவிட வேண்டும் என்று குழந்தை நினைத்து அடம்பிடிக்கத் தொடங்கிவிடும்.

மாறாக, பிஸ்கட் தரமாட்டேன் என்று சொல்லாமல் சிறிதளவு வெண்ணையோ, சிறுதுண்டு கரட்டோ கொடுத்துப்பாருங்கள். அம்மா தனது கோரிக்கைக்கு இணங்குகிறாரே என்று நினைத்து, அடம்பிடிக்க மாட்டார்கள். நீங்கள் கொடுத்ததை வாங்கிச்சாப்பிட்ட பின்பு சோறு கொடுத்தால், குழந்தை சாப்பிடும் உணவின் அளவும் பெருமளவு குறையாது.

குழந்தை ஒரு பொருளைக் கேட்டு உங்கள் தலைமயிரைப்பிடித்து இழுக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் குழந்தை செய்யும் செயல் உங்களுக்கு வலியைத்தருகிறது என்பதை உங்கள் முக பாவனை மூலம் உணர்த்துங்கள். அதற்கும் குழந்தை இணங்காவிட்டால் நீங்கள் முடியைப்பிடித்து இழுத்ததால் எனக்கு வலிக்கிறதுஎன்று குழந்தைக்குச் சொல்லுங்கள்.

அந்தப்பிரச்சினையை அத்தோடு விட்டுவிட்டு, அவன் உங்களோடு நேசமாக இருக்கும்போது அவனது முடியை இலேசாக இழுத்துக்காட்டி, வலியை உணரச் செய்யுங்கள். இதன் மூலம் குழந்தைக்கு தாயின் மன உணர்வு புரியும். அடுத்து அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளும்.

என்ன சகோதரிகளே, உங்கள் குழந்தையும் மிகவும் அடம்பிடிக்கிறதா? கொஞ்சம் அவர்கள் வழியில் சென்று அவர்களைத் திருத்த முயலுங்கள். நிச்சயம் அவர்கள் புரிந்து செயற்படுவார்கள்.

---

# அழகான ஆரோக்கியம் பெற...

பொதுவாக அழகையும், நிறத்தையும் போற்றிப் பாதுகாத்து தங்களை என்றும் மாறாத இளமையும், அழகும் உடையவர்களாகக் காண்பித்துக்கொள்ள விரும்பும் பெண்களில் எத்தனை பேர் தங்களின் பாதங்களைப்பற்றியும், அவைகளைப்பராமரிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியும் மனதில் நினைத்து பார்க்கின்றனர் என்று கேட்டால் எத்தனை பேர் இதற்குத் தகுந்த பதில் சொல்வார்கள்?

ஆம். எமது உடலின் முழு எடையையும் தாங்குவது பாதங்கள் தான். முகத்தின் அழகைக்கூட்ட எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் ஒரு சதவிகிதமாவது நாம் எமது பாதங்களின் பராமரிப்புக்கு கொடுக்கின்றோமோ என்பதை எண்ணிப் பாருங்கள். கால்களும் பாதங்களும் அழகும், ஆரோக்கியமும் பெற்றால் தான் எமது உடலும் கூட ... அழகும் ஆரோ... க்கியமும் பெறும்.

பாதங்களைப் போது...மான அளவு கவனம் ... எடுக்காதுவிட்டால் குதிக்கால் வெடித்து, பாதங்கள் கறுத்து, சுருங்கி, களையிழந்து காணப்படும் நிலை ஏற்படும். பாதங்களில் பிரஷர் பொயிண்டுகள் உள்ளன. இவைகளில் முறையாக மசாஜ் செய்தால் இரத்த ஓட்டம் சீரடையும்.

கால்களில் உள்ள தேவையற்ற உரோமங்களை வேக்சிங் முறை மூலம் நீக்கிவிடுதல் முக்கியமானது.

சிலருக்கு கால் முட்டிகளைச்சுற்றி உள்ள பகுதிகள் கருமை படர்ந்து காணப்படும். இதுபோன்ற பாதிப்பினால் அவதிப்படுபவர்கள் ஒரு துளி மஞ்சள்பொடியும், சில துளிகள் தேனும் சேர்த்து நன்கு குழைத்து கருமை அதிகமாகப் படர்ந்துள்ள இடங்களில் நன்றாகத் தடவி 15நிமிடங்கள் வரை படியவிட்டு பின்பு வெதுவெதுப்பானநீரில் கழுவி வர சிறந்த பலன் தெரியும்.

பருமனாக இருந்து பின்பு உடல் மெலிவோரின் தொடையில் கோடுகள் போல் அடையாளம் தோன்றும். இது பார்க்க மிகவும் விகாரமாக இருக்கும். நல்லெண்ணையில் மஞ்சள் தூள் கலந்து சிறிது பாதாம் எண்ணெயும் சேர்த்து நன்கு கலந்து சற்று வெதுவெதுபாகச் சுடவைத்து அப்படியே சுருக்கங்களின் மீது தடவி மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு 15 நிமிடங்கள் வரை செய்து பின்பு வெதுவெதுப்பான நீரை மெதுவாக அதன் மீது ஊற்ற வேண்டும். தடவியுள்ள மஞ்சளின் நிறம் மங்கும் வரையில் இப்படி வெதுவெதுப்பான நீரைத் தொடர்ந்து ஊற்ற வேண்டும். இவ்வாறு தினமும் தொடர்ந்து செய்துவர விரைவிலேயே சுருக்கங்கள் மாறி பழைய நிலையைப் பெறலாம்.

வெறுங்காலுடன் நடப்பது, நீண்ட நேரம் நீரில் நிற்பது, கால்களை முறையாகச் சுத்தம் செய்யாதது, அதிகமான உடல் எடை, விட்டமின் சத்துக்குறைதல் போன்ற காரணங்களால் பாதங்களில் வெடிப்பு ஏற்படலாம்.

பாதங்களுக்குக் கூடுதலான சக்தி வேண்டும் என்று விரும்புவோர் தினமும் கடல் மணலில் பாதங்கள் பதியப்பதிய நடக்கலாம். இப்படித் தொடர்ந்து நடப்பதால் இளமையும், ஆரோக்கியமும், பலமும் கூடும். தளர்வென்பது இருந்த இடம் தெரியாமல் மறையும்.

கால் விரல் நகங்களில் தொடர்ந்து நெயில் பொலிஷ் போடுதலைத் தவிர்க்க வேண்டும். தொடர்ந்து இதனைப் பாவிப்பதால் அவைகளின் நிறம் மங்கும் வாய்ப்பு உள்ளது. பெரிய பாத்திரமொன்றில் வெதுவெதுப்பான நீரை ஊற்றி, சிறிது நல்லெண்ணை, தரமான ஷம்போ சில துளிகள், எலுமிச்சைச்சாறு சிலதுளிகள், வினிகர் சிறிதளவு ஆகியவை



களை விட்டு நன்கு கலந்து அதில் பாதங்களை 10 முதல் 15 நிமிடங்கள் வரை ஊற வைத்து பின்பு பாதங்களைச் சுத்தம் செய்யலாம்.

சிலருக்கு நகங்களைச்சுற்றிலும் கருமை படர்ந்து காணப்படும். இது போன்ற நிலை விட்டமின் சத்துக்கள் குறைபாட்டினாலேயே தோன்றுகின்றது. சுத்தமான தேங்காய் எண்ணெயை மிதமாகச் சுடவைத்து கருமை படர்ந்த இடங்களின் மீதுதடவி மசாஜ் செய்துவர கருமை மறையும்.

நகங்களின் மீது சிலருக்கு வெள்ளையாகப் பூப்போல் தெரியும். உடலில் கல்சியம் சத்துக்குறைபாட்டாலேயே இவ்வாறு தோன்றுகிறது. கீரை வகைகளைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதுடன் பால் அதிகம் பருகலாம்.

காலணிகளைத் தெரிவு செய்யும்போது குதி உயர்ந்த வகைகளைக்கூடுமானவரை தவிர்த்தல் வேண்டும்.

---

# மனக்கவலை பிரச்சினைக்குத் தீர்வாகுமா?

வீட்டுக்கு வீடு வாசல்படி என்பர். எப்போதும் ஏதாவது ஒரு பிரச்சினையை தலையுள் வைத்துக்கொண்டு எந்த நேரமும் கவலைப்பட்டுக்கொண்டிருப்பது பலரின் வாடிக்கை. பொதுவாக மனக்கவலை ஏற்படுவதற்கு பல முக்கிய காரணங்கள் உண்டு. ''ஐயோ இப்படி ஆகிவிட்டதே'' என்று மனதுக்குள் பலர் குமைந்துகொள்வார்கள். இன்னும் சிலர் எனக்கு மட்டும் இப்படி ஆகிவிட்டதே என்று எந்த நேரமும் கவலைப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.



மனக்கவலை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கடியே ஆகும். அதனால் பலர் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாமல் தவிப்பார்கள். அதைத் தீர்க்க முடியாமல் தவிக்கும்போதுதான் மன நெருக்கடி, மன உளைச்சல் அதிகமாகிறது.

அதனால், இவ்வகையான மனக்கவலையைக் குறைப்பதற்கான சில ஆலோசனைகளை இன்று பார்ப்போம்.

*உங்களைப்பிறருடன் ஒப்பிட்டுப்பார்த்து அட நாம் இப்படி இருக்கிறோமே என்று உங்களை நீங்களே தாழ்மைப்படுத்திக்கொள்ளாதீர்கள். எனக்குள்ளும் தனித்தன்மை, திறமை உண்டு. அதன் மூலம் ஓர் உயர்ந்த நிலையை எட்ட முடியும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

*சிலருக்கு ஒரே நேரத்தில் பல பிரச்சினைகள் வந்து துன்பத்தைக்கொடுக்கும். அப்போது எல்லாப்பிரச்சினைகளுக்கும் அதன் தன்மை, முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் வரிசைப்படுத்தி, கிடைக்கும் ஓய்வு நேரத்தில் ஒவ்வொரு பிரச்சினைக்குமாக தீர்வுகாண முயலுங்கள்.

*நேற்று நடந்த தவறை இன்று நினைத்து வருந்துவதைக் கைவிடுங்கள். நடந்தது நடந்துபோனது தான். எனவே முடிந்துபோன ஒன்றை நினைத்து வருந்துவதில் எந்தப்ப யனும் கிடையாது. அதே போல் நாளை என்ன நடக்கும் என்று நினைத்துக் கவலை யும் கொள்ள வேண்டாம். இன்று மட்டும் தான் உங்கள் கையில் இருக்கிறது. அதனை மன தில் வைத்து எல்லா முயற் சிகளையும் எதிர்கொண்டு வெற்றி காணுங்கள்.

*சிலருக்கு எப்போதும் எதிர்மறையான சிந்த னையே தோன்றும். அதைத் தவிர்த்து நல்லதே நடக்கும், எல்லாம் சரியாக நடந்தேறும்என்று எண்ணப்பழகிக்கொள்ளுங்கள். எப்பொழுதும் நேர்ம றையான சிந்தனையோடு நாளுக்கு நாள் ஏற்படும் நிகழ்வுகளை எதிர் கொள்ளுங்கள். உங்களது சிந்தனைகள் நேர்மறை யாக இருந்தால் உங்க ளால் நிச்சயமாக துன்பத் தையும் இன்பமாக மாற்றி யமைக்க முடியும்.

*உங்களது ஓய்வு நேரத்தைப் பிறருக்கு உதவி செய்வதில் செலவிடுங்கள். இதனால் மகிழ்ச்சி அதிகமாகி உங்களது துன்பங்கள், கவலைகள் எல்லாம் குறையும்.


*தினமும் காலை, மாலை இருவேளை களிலும் 10முதல்15 நிமிடம் வரை தியானப் செய்துவாருங்கள். அப்போது உங்களிடம் மனநிம்மதி ஏற்படும். அந்த நிம்மதி அன்றை ய நாள் முழுவதையும் உங்களது சிந்தனை யை தூய்மையாகவும் வைத்துக்கொள்ள உத வும்.

*சிந்தனை, செயல், கொள்கை, ஆழ்ந்த பற்று ஆகியவை ஒருவரது வாழ்வில் இருந் தால் அவரது வாழ்க்கை அமைதிப் பூங்காவா க, தெளிந்த நீரோடையாகத்திகழும். அங்கே மனக்கவலைக்கும் மன நெருக்கடிக்கும் இட மிருக்காது.

---

## இவ்வார பொன்மொழி

*அறியாமையே கஷ்டங்கள் அனைத்துக்கும் காரணம்*



## பெண்

சசி

# இவ்வாரக் கோலம்

## சொற்சிலம்பம் போட்டி இல.114

சொற்சிலம்பம் 113 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜூலை05ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூலை12ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை19ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.112க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.114

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| 10 | | ■ | 11 | | | | ■ |
| 12 | | 13 | | ■ | | ■ | 14 |
| | ■ | 15 | | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | | |
| 19 | | | ■ | 20 | | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.112

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 சு | 3 வ | 4 த | ம் | ■ | 5 க | 6 தி |
| 7 க | த் | தி | ரி | ■ | 8 க | ரு | ணை |
| 9 ச | தி | ■ | 10 ச | 11 ப | ல | ம் | ■ |
| ம் | ■ | 12 க | ன | ல் | ■ | 13 பு | 14 சி |
| ■ | 15 வா | ர | ம் | ■ | 16 த | லி | த் |
| 17 மா | ன | ம் | ■ | 18 க | லை | ■ | த |
| 19 த | ர | ■ | 20 நா | ணா | வி | 21 த | ம் |
| 22 வி | ம் | ப | ம் | ■ | 23 தி | சை | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.114

**இடமிருந்து வலம்**

1. இன்று நாட்டில் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் துறை.
5. தோழன்/ கூட இருப்பவன்.
7. மரத்துண்டு/உடலையும் கூறுவர்.
8. செய்தி/புதினம்.
10. திசையின் சுருக்கம்.
11. அடையாளம்/ குறி.
12. தலை காக்கும்.
15. வயல்.
16. சேர்.
17. நிறை/ எடை/சுமை.
18. ஊனம்.
19. சேமம்.
20. பெரிய பழம் தருவது.
21. தூர அலகு.
22. அழுது அரற்றுதல்

**மேலிருந்து கீழ்**

1. புராணம் பாடுபவர்/ விஷ்ணு சமயத்தவர்.
2. கெட்டது செய்பவர்.
3. ஒரு புள்.
4. ஒரு கிரகம்.
5. பிணம்.
6. அரையின் அரை/ உடலைத் தாங்குவது.
9. நித்திரையில் வருவது.
11. ஓர் இராசி.
13. இதுவும் அதுவே.
14. வாய் ஓயாமல் தொண தொணவென்று பேசுதல்.
16. தாண்டு.
17. கசப்பான மரக்கறி வகை.
18. வெளியில் பூசுவது.
19. பாரம்.
20. சில அல்ல.

## சொற்சிலம்பம்-111 பரிசு பெறுவோர்.

1. த.தெய்வேந்திரம்,
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
2. பா.மதிவதனி,
468, 10ஆம் யூனிட்,
தரும புரம், பரந்தன்.
3. திருமதி.ரஞ்சினி சிவஞானம்,
43/1, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

1. வி. இராஜ வினோதன்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
2. இ.சங்கீதா,
கொம்மாதுறை,
செங்கலடி.
3. தோமஸ் ஜேசுதாசன்,
திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.
4. ஆர்.காயத்திரி,
28, ஸ்கந்தபுரம்
கிளிநொச்சி.
5. எஸ்.கே.அன்ரனி தாஸ்,
கூழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
6. திருமதி.எம்.சீ. ஆரோக்கியநாதன்,
8ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.
7. சீ.ராஜ்குமார்,
சாந்தசோலை,
வவுனியா.
8. க.கமால்தீன்,
புன்னக்குடாவீதி,
ஏறாவூர்—03.
9. செ.அருந்ததி,
சிவன் கோவில் வீதி,
புத்தூர்.
10. ஜெ.சண்முகராஜா,
அருந்தாவத்தை வீதி,
கொழும்பு—15.

# மொடலிங் டெனிஸ் வீராங்கனைகள்

அமெரிக்க டென்னிஸ் வீராங்கனைகளான செரினாவில்லியம்ஸ் மற்றும் அவரது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் டென்னிஸைத்தவிரமொடலிங் மற்றும் நடிப்பிலும் ஆர்வம் கொண்டவர்கள். வீனஸ் மொடலிங் மற்றும் வீட்டு அலங்காரம் பற்றிய கல்வியைக்கற்றவர். டென்னிஸ் தவிர மற்ற நேரங்களில் வீனஸ் ஆடை அலங்காரம் பற்றிய விஷயங்களில் அதிக ஆர்வம் காட்டுவார். தனது படைப்புகளை விற்பதற்கு என்றே தனி நிறுவனம் ஒன்றையும் தொடங்கி இருக்கிறார்.



அக்கா வீனஸ் வில்லியம்ஸை விட கொஞ்சம் தடாலடியானவர் செரினா வில்லியம்ஸ். களத்தில் புயபலம் காட்டும் இவர் கவர்ச்சியாக உடை அணிந்து ரசிகர்களை கிறங்கடிப்பதில் வல்லவர். டென்னிஸ் தவிர நடிப்பதிலும் இவருக்குத் தீவிர ஆர்வம் உண்டு. நடிப்பின் மீதுள்ள ஆர்வம் காரணமாக கல்லூரியில் சேர்ந்து நடிப்புக் கலையில் டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இது தவிர காட்சி தொடர் ஒன்றிலும் அவர் நடித்துக்கொண்டிருக்கிறார்.

காயம் காரணமாக அக்கா—தங்கை இருவரும் சமீப காலமாக டென்னிஸ் ஆட்டங்களிலிருந்து விலகியிருந்தனர். சில மாத இடைவெளிக்குப் பிறகு செரினா. பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் சாம்பியன் ஆட்டத்தில் களம் இறங்கியிருந்தார்.

பாரிஸ் நகரில் நடைபெற்ற பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் ஆட்டத் தொடரில் ஆடத் தொடங்கு முன்பு விளம்பர நிறுவனத்துடன் இணைந்து புதியடெனிஸ் உடைகளைத்தேர்ந்து எடுத்தார் செரினா.

கால் அழகைவெளிப்படுத்தும்குட்டையான பாவாடை, கை அழகையும் இடுப்பு அழகையும் வெளிப்படுத்தும் ஸ்லீவ்லெஸ் ஜாக்கெட், தலை முடி காற்றில் பறந்துவிடாமல் தடுக்கும் வளையம் மற்றும் உடைகளுக்கு ஏற்ற வர்ணத்தில் தயாரான பெரிய காது வளையம் ஆகியவற்றுடன் களம் இறங்கினார் செரினா.

இது குறித்து செரினா கூறும் போது,

''பாரிஸ் மிகச்சிறந்த அற்புதமான நகரம். நவீன ஆடை அலங்காரங்களின் பிறப்பிடம். அந்த இடத்தில் நடைபெறும் டென்னிஸ் தொடரில் கலந்துகொள்ளும் போது அதற்கு ஏற்ப நாமும் உடை அணிந்து கொள்வது தான் பொருத்தமாக இருக்கும்'' என விளக்கம் அளித்தார்.


## கட்டாரில் வேலைவாய்ப்பு


கட்டாரிலுள்ள மிகப்பெரியதொரு முன்னணி கம்பனிக்கு கீழ்க்காணபவர்கள் வேலைக்குத் தேவை

| Category | Quantity | Salary |
|---|---|---|
| Multi Skilled Operator | 3 | QR. 1400/= |
| Heavy Equipment Mechanic | 3 | QR. 1200/= |
| Aluminum Fabrication Helper | 15 | QR. 750/= |
| Welders | 5 | QR. 750/= |
| Carpenter/Bench Fitter | 10 | QR. 750/= |

Rocky's Management (Pvt) Ltd.
1444/B, 1/1, Kotte Road, Rajagiriya.
Contact for Details on : (011) 2863386, 2871669



# மாபெரும் கணனி மலிவு விற்பனை





காலம்: 21.06.2004 தொடக்கம் 21.07.2004 வரை
நேரம்: காலை 8.30 தொடக்கம் மாலை 8.30 வரை
இடம்: x52, 2 ஆம் குறுக்குத்தெரு வவுனியா.



தொலைபேசி:
0242221649, 0244589696
0777238535, 0777258460

விரையுங்கள்! விரையுங்கள்!!

NORTHERN Technology (pvt) LTD

கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கணனிக்கும் பரிசுகளை வெல்லுங்கள்

# காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினையை வைத்து அரசியல் லாபம் தேட முயலும் ஜெயலலிதா!

தமிழகத்துக்கும் கர்நாடகாவுக்கும் இடையிலான காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினை தமிழக அரசியல் வாதிகளின் சுயநலத்தை காட்டுவதற்கென்றே இருக்கிறது போலும்.

தேர்தலில் படுதோல்வி கண்ட ஜெயலலிதா அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு, காவிரி நீரைக் கொண்டு அரசியல் செய்யப் பார்த்தார். கர்நாடகத்திலும் மத்தியிலும் ஆள்வது காங்கிரஸே; எனவே தமிழகத்துக்கு நீரைப் பெற்றுத் தருவது காங்கிரஸுக்கு முடிந்த காரியமே என்று கூறத் தொடங்கினார்.

மேலும் ''தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. என தமிழகத்தில் காங்கிரஸ் அல்லாத 30 எம்.பிக்கள் உள்ளனர். இவர்களின் ஆதரவு மத்திய அரசுக்கு மிகவும் இன்றியமையாதது. மொத்தம் பெரும்பான்மைக்கு தேவையான 272 இடங்களை விட 4 இடங்களே அரசுக்கு கூடுதலாக உள்ளன. இவர்கள் 30 பேரும் காலைவாரினால் மத்திய அரசின் கதி அதோ கதியாகும். எனினும், மத்திய அரசை வற்புறுத்த இவர்கள் எவருமே தயாராகவில்லை. அமைச்சுகள் ஒதுக்கப்பட்ட போதுதான் விரும்பிய கப்பல்துறை அமைச்சையும், நிதித்துறை இணை அமைச்சையும் தராததற்காக காங்கிரஸுடன் முரண்பட்ட தி.மு.க. நீர்ப்பாசனத்துறையை கேட்டுப் பெற்றிருக்கலாம். ஏன் அவ்வாறு செய்யவில்லை'' என்றார்.

இதற்கு கருணாநிதி சொன்ன பதில் ''இரு மாநிலங்களுக்கும் இடையில் பிணக்கு இருக்கும் போது அதில் ஒரு மாநிலத்துக்கு சம்பந்தப்பட்ட அந்த அமைச்சை வழங்க முடியாது. அதனால்தான் இரண்டும் அல்லாத மூன்றாவதொரு மாநிலத்தவருக்கு வழங்கப்பட்டது'' என்பதாகும்.

இது சாமர்த்தியமான பதில். ஆனால், உண்மையில் தங்கள் பதவிகளை தூக்கி எறிந்து தமிழகத்துக்கு காவிரி நீர் பெற்றுத் தர இவர்களுக்கு இஷ்டமில்லை என்பது தெளிவாகிறது.

ஜெயலலிதாவோ இதற்கு ஒருபடி மேல் போய் தமிழகத்தின் 40 எம்.பிக்களும் அ.தி.மு.கவை சாராதவர்கள். மத்தியிலே காங்கிரஸ் அரசு. காவிரிநீர் பெற்றுத் தருவது தி.மு.க. உள்ளிட்ட தமிழக கட்சிகளின் பொறுப்பு என்று கூறினார்.

ஜெயலலிதாவைப் பிடித்த போதாத காலம் தேர்தல் தோல்வியுடன் மட்டும் முடியவில்லை. மத்திய அரசு ஆய்வுக்கமிட்டி அது இது என்று காலத்தை இழுத்தடிக்கத் தொடங்கவும் கர்நாடகத்தில் கொட்டு கொட்டென்று மழை கொட்டவும் மிதமிஞ்சிய நீரை கர்நாடகம் திறந்தே விட்டு விட்டது. காங்கிரஸ், தி.மு.க. கட்சிகளுக்கு


ரஜனிகாந்
விஜயகாந்த்

தர்மசங்கடம் இதனால் இல்லாமல் போய் விட்டது.

எனினும், மழை திடீரென்று நின்றால் நீர் வரத்தும் கட்டுப்படுத்தப்படும். எனினும் குருவைப்பயிர்ச் செய்கைக்கு இது போதும் என்றே சொல்லப்படுகிறது.

ஆக ஜெயலலிதா கையில் எடுத்த புதிய ஆயுதமும் வாய்க்காமல் போய்விட்டது. 1991 இலும் நரசிம்மராவ் பதவி ஏற்றபோது காவிரிநீர் வராவிட்டால் எதிர்ப்புக்காட்டி தமிழகத்தின் கங்கிரஸ் சார்பிலான அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என் ஜெயலலிதா கூக்குரலிட்டார். வாழப்பாடி ராமமூர்த்தியும், கே.வி.தங்கபாலுவும் பதவி விலகினர். சிதம்பரம் மசியவில்லை; சிதம்பரத்தின் காருக்கு அ.தி.மு.கவினர் கல்லும் எறிந்தனர். அன்றிலிருந்து சிதம்பரம் ஜெயலலிதா உறவு கசந்தது கசந்ததுதான். இதே ஜெயலலிதாதான் 1998 இல் வாஜ்பாய் அரசுக்கு ஆதரவளித்து வந்தபோது காவிரிநீர் தருவதை வற்புறுத்த வேயில்லை. மாறாக தி.மு.க.வின் தமிழக அரசை பதவி நீக்கம் செய்யுமாறு வலியுறுத்தினார். அதற்கு வாஜ்பாய் மறுத்ததால் அரசைக் கவிழ்த்தார்.

ஆனால், அப்போது கவிழ்த்துவிட்டு அவர் கூறிய காரணங்களில் ஒன்று காவிரி நீர் தரவில்லை என்பது. எனினும் அதை ஒரு கோரிக்கையாக ஜெயலலிதா வாஜ்பாயிடம் வற்புறுத்தவேயில்லை என்பது வேறு கதை.

இவ்வாறு தமிழக கட்சிகள் காவிரி விடயத்தில் போடும் தப்புத்தாளத்துக்கு எல்லையேஇல்லை. காங்கிரஸ் கட்சியோ காவிரி தண்ணீரை திறந்து விடப் பண்ணினால் 1967 க்குப் பின்பு கிடைக்கவே கிடையாது போன தமிழக ஆட்சி அதிகாரம் கிடைக்கவா போகிறது; மிஞ்சினால் ஒரு நான்கு ஐந்து லோக்சபா ஆசனங்கள் கூடக் கிடைக்கும். ஆனால், கர்நாடக மக்களை பகைக்க முடியாது என்கிறது. தமிழகம் போலன்றி கர்நாடகத்தில் காங்கிரஸ் வலுவான கட்சி. இம்முறை சட்டசபைத் தேர்தலில் தோற்றபோதிலும் முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் கட்சியுடன் சேர்ந்து காங்கிரஸ் கூட்டரசு அமைத்துள்ளது. இந்த நிலையில் காங்கிரஸ் நினைத்தாலும் தண்ணீர்தர தேவகவுடா கட்சி இணங்காது. பெரும் தர்ம சங்கடத்தில் இருந்த காங்கிரஸுக்கு மழை கை கொடுத்துள்ளது.

இதற்கிடையில் ரஜனியுடன் முரண்பட்டு தேர்தலில் ரஜனியின் சவாலுக்கு மத்தியில் வெற்றி கண்ட பா.ம.க. இப்போது அரசியல்


ஜெயலலிதா

சபலம் பிடித்த மற்றொரு நடிகரான விஜயகாந்தை எதிர்க்கத் தொடங்கியுள்ளது. தேர்தலில் வெல்லாமலே அமைச்சர் பதவி பெற்றதாக பா.ம.க. தலைவர் மகனை விஜயகாந்த் சாடியதால் பா.ம.க. தொண்டர்கள் சீற்றமுற்று விஜயகாந் ரசிகர் மன்றத்தை தீயிட்டு கொளுத்தியுள்ளனர். நீர்ப்பாசன அமைச்சை கேட்டுப் பெறாததற்காக தி.மு.கவையும் விஜயகாந்த் குறை கூறினார்.

சினிமா நடிகர்கள் அரசியல் சாதனைகள் செய்வது எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவு[illegible] முடிந்து விட்டது என்ற உண்மை ரஜ[illegible], விஜயகாந்த் போன்ற நடிகர்களுக்கு கசக்கிறது. ஆனால், என்ன செய்வது, அது தான் உண்மை.

பா.ம.க்வை எதிர்த்து ரஜினி, விஜயகாந்த் இணைந்து அரசியல் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், அரசியல் நெளிவு சுழிவுகள் வாஜ்பாய் போன்ற பழுத்த அரசியல் பழங்களுக்கே முற்றாகப் புரியாத போது இவர்கள் எவ்வளவு தூரம் சாதிக்க முடியும் என்பது கேள்வியே.

– எஸ்.சுரேந்திர ஜித் –

# சினிமாவும் சீரழிவும்

இன்றைய இளைய சமுதாயம் சினிமாவுக்குள் சிக்கிச் சீரழிவது வேதனைக்குரிய விடயமாகவே காணப்படுகிறது.

இந்த சினிமா மோகத்திலிருந்து தமது பிள்ளைகளை மீட்டெடுப்பதற்காக பெற்றோர்கள் கடுமையாக முயற்சித்தாலும் அது முடியாத காரியமாகி முழிபிதுங்கி நிற்கின்றனர்.

இன்றைய சினிமாவைப் பொறுத்தவரையில் ஆபாசக் காட்சிகளே அதிகமாக இருக்கின்றன. காதலர்கள் கட்டிப்புரளுகின்ற காட்சிகள் மட்டுமல்ல, பேசும் வசனங்களிலும், பாடல்களிலும் இரட்டை அர்த்தமும் ஆபாசமுமே நிறைந்து உள்ளன. இவ்வாறான அருவருக்கத்தக்க விடயங்களைத்தவிர வன்முறைகளை தோற்றுவிக்கும் சண்டைக்காட்சிகள், கொலைகள், கற்பழிப்புகள் போன்றவைகளும் சினிமாவில் இல்லாமல் இல்லை.




இவ்வாறான போக்கு எமது இளைய சமுதாயத்தினரை வன்முறையாளராக தூண்டுவதோடு தமது பண்பாடு, கலாசாரம் சிறப்புக்கள் போன்றவற்றிலும் பெரும் பாதிப்புக்களை தோற்றுவித்து நிற்கின்றது.

வக்கிரமான எண்ணங்களை விதைத்து இளைய சமுதாயத்தினரை மோசமான பாதைக்கு இட்டுச் செல்லும் சினிமாவை நிராகரிக்கும் நிலை எமது நாட்டில் எவருக்கும் இல்லைபோலும்.

எனவேதான் இது விடயதில் பெற்றோர்கள் பெரிதும் பாடுபட்டவர்களாகவும், பாதிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

''கல்வி அறிந்து தன்பிள்ளை நல்நிலையில் வரவேண்டும்'' என்று எல்லாப் பெற்றோரும் ஆதங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இவைகளையெல்லாம் முதன் நிலைப்படுத்தாத இளைய சமுதாயம் சினிமாவால் கெட்டுச் சீரழிந்து கொண்டிருக்கிறது.

காலவிரயம், பணவிரயம் என்பவையெல்லாம் இவர்களுடைய கணிப்புக்குள் இல்லை. கல்வி மீது இவர்களுக்கு இருக்கிற நோக்கும் அண்மையில் இல்லை.

இவ்வாறான போக்கு நீடிக்குமானால் எமது இளம் சமூதாயத்தை காப்பாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வரும்காலம் தர மறுத்துவிடும். எனவே இவ்விடயத்தை பெற்றோர்களை விட சம்பந்தப்பட்ட அந்த இளையவர்களே தம் கவனத்தில் எடுப்பார்களேயானால் மாற்றமொன்று மறுதலிக்கும். இல்லையேல் நிச்சயம் சினிமா இவர்களைச் சீரழிக்கும்.

– கே.ஆர்.சுதர்ஷன் –

# தனிமனித அமைதியே உலக அமைதிக்கான அடித்தளம்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் உளரீதியாக பல பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ளனர். இது தவிர மனித நேயம் என்பதும் வெகுவாகக் குறைந்து கொண்டே செல்கின்றது. இவர்களுக்கு என்ன சொல்லவிரும்புகின்றீர்கள்?

**பதில்:–** யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தங்களது அன்பான கணவன், மனைவியரை, சகோதரர்களை, உறவினர்களை இலங்கையர்கள் இழந்துள்ளார்கள். இது மனம் வருந்தத்தக்க ஒரு விடயமே. இவற்றிலிருந்து விடுபட வேண்டும், இந்த நாடு அமைதி சமாதானமாய் வாழவேண்டுமேயாகில் தனிமனித சமாதானம் முதலில் உருவாக வேண்டும். அவ்வாறு தனிமனித அமைதி சமாதானம் உருவாகும் போது குடும்ப அமைதி சமாதானம் உருவாகும், அது சமுதாய அமைதியை உருவாக்கி ஈற்றில் முழு நாடுமே அமைதி சமாதானம் பெறும். எனவே கடந்து போனவைகள் கடந்தவையாய் போக, நடக்கவிருக்கின்ற காரியங்கள் நல்லதாய் நடைபெற மனதைவளப்படுத்தி நாடு வளம்பெற இந்நாட்டுப்பிரஜைகள் முயலவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**கேள்வி:– மனவளக்கலையை பயில்வதற்கு மதம் சார்ந்த ஏதாவது விதிமுறைகள் உண்டா? அது பற்றிக் கூறுங்கள்?**

**பதில்:–** மனவளக்கலை என்பது மனம் சார்ந்தது. எனவே இதற்கு மதம் ஒரு தடை அல்ல. இந்தியாவில் மனவளக்கலை பயில்பவர்கள் வெவ்வேறு மதங்களிலே இருந்து வந்தவர்கள். அவர்கள் ஒன்றாகவே இருந்து பயிற்சி பெறுகின்றனர். எனவே மனவளக் கலை பயில்வதற்கு சமயம் ஒரு தடை அல்ல. எப்படிப்பட்ட சமயம் சார்ந்தவர்களும் மனதால் ஒன்று பட்டுவாழ்வதே மேலானது. எனவே சமயப் பிரிவினைகள் இங்கு கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

**கேள்வி:– சில மனிதர்களிடத்தே நிறைவான சொத்துக்கள், சுகங்கள், அடுக்கு மாடிகள், மாடமாளிகைகள், அழகான அன்பான மனைவி பிள்ளைகள் இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையிலே நிம்மதி இன்றி அலை[illegible] திரிகின்றனர். இதுபற்றி என்ன சொல்[illegible] போகின்றீர்கள்?**

**பதில்:–** உங்கள் கூற்று சரியானது. இன்று என்னதான் சுகபோகங்கள் சொத்துக்கள், பணம் இருந்தாலும் மனிதன் நிம்மதியாய் வாழவில்லை. காரணம் அவனது மனம் பக்குவப்படவில்லை. முழுமையடையவில்லை. பணத்துக்கு மேல் பணம் தேடும் ஆவல், மாடிக்கு மேல் மாடி கட்டும் அவா, இப்படியாக அவர்கள் மனம் போதும் என்று திருப்தி அடைவதில்லை.

இவர்கள் மனதை வளப்படுத்திக் கொண்டால் மாத்திரமே வாழ்வில் நிம்மதியை அடைய முடியும். எனவே எது வாழ்வில் இருந்தாலும் மனம் இதமாக இல்லை எனில் நிம்மதி இல்லை. எனவே மனதை வளப்படுத்தி பக்குவப்படுத்திக் கொண்டால் போதும் என்ற மனோநிலையுடன் அமைதி சமாதானமாக வாழமுடியும். இதற்கு மனவளக்கலையில் பங்கு கொண்டு பயிற்சி பெறுவது வாழ்வில் சிறந்த பயனைத்தரும்.

**கேள்வி:– மனவளக்கலை பற்றி இன்னும் ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?**

**பதில்:–** தனியனித அமைதி, குடும்ப அமைதியை ஏற்படுத்த வேண்டும், குடும்ப அமைதி, சமுதாய அமைதியை ஏற்படுத்த வேண்டும். சமுதாய அமைதி நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும். நாட்டின் அமைதி உலக அமைதியை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு இவ்வையகம் மலா அமைதி பெற்று சீரும் சிறப்புடனும் வாழ மனதை வளப்படுத்தப் பழகிக்கொண்டு மனிதனை மனிதன் அன்பு செய்து சமாதானத்துடன் வாழ வேண்டும்.

# மலையகக் கண்ணோட்டம்



– இரா.புத்திரசிகாமணி –

# தொழிலாளர் கல்விப்பிரிவு என்பது கண்துடைப்பா?

மலையகத்தில் உள்ள எல்லாத் தொழிற் சங்கங்களிலும், தொழிலாளர் கல்விப் பிரிவு என்ற ஒரு பிரிவு கட்டாயமாக இருக்கத்தான் செய்கிறது. தொழிலாளர் கல்விப்பிரிவுக்கு என ஒரு டிரக்டர், டைப்பிஸ்ட், கிளார்க், ஒரு பியோன் எனவும் இருக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களிடம் மாதாமாதம் வசூலிக்கப்படும் தொழிற்சங்க சந்தாவில் பெரும்பகுதியை ஏப்பம் விடுவது இந்த தொழிலாளர் கல்விப்பிரிவு தான்.

வெளியில் இருந்து பார்ப்பவர்கள் ஆகா! இதுவல்லவா தொழிற்சங்கம். தமது அங்கத்தினர்களின் கல்வி வளர்ச்சிக்காக தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி செயற்படுகின்றனர் எனப்பாராட்டுகின்றனர்.

இந்தத் தொழிலாளர் கல்விப்பிரிவு இதுவரை எத்தனை தோட்டப் பாடசாலைகளுக்குப் போய்ப் பார்த்துள்ளது? எத்தனை பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களைக் கொடுத்துள்ளது? எத்தனை பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களை நியமித்துள்ளது?

பஸ்ஸில் சென்று படிக்க முடியவில்லை என்று படிப்பைக் கைவிட்ட எத்தனை பிள்ளைகளுக்கு தொழிலாளர் கல்விப்பிரிவு டிக்கட்டுக்களை வாங்கிக் கொடுத்தது?

நாங்கள் இதை எல்லாம் செய்துள்ளோம் என்று கூற எந்த தொழிற்சங்கத்துக்கும் துணிவு இல்லை. காரணம் அவர்கள் எதையுமே செய்யவில்லை என்பது தான் உண்மை.

மலையக தொழிற்சங்கங்களில் உள்ள தொழிலாளர் கல்விப்பிரிவுகளும் அதன் பணிப்பாளர்களும் என்ன செய்கின்றனர்.

தொழிற்சங்க அறிவையூட்டுகின்றோம். தலைமைத்துவத்தைப் பற்றிப் படிப்பிக்கின்றோம். தொழில் சட்டங்களைப் பற்றி தெளிவுபடுத்துகின்றோம். தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொழில் உறவைப்பற்றிப்படிப்பிக்கின்றோம் என்று கூறிக் கொண்டு மலையகத்தில் தொழில் புரியும் இளைஞர் யுவதிகளைக் கொழும்பு, கண்டி, ஹட்டன், கொட்டகலை என அழைத்து கருத்தரங்குகளை நடத்துகின்றனர். ஐந்து நாட்களோ ஒர வாரமோ ஹோட்டல்கள் அல்லது தெழிற்சங்கத் தலைமையகங்கள் என தங்கவைத்து மூன்று வேளையும் நல்ல உயர்ரக சாப்பாட்டையும், வீடு திரும்பும்போது செலவுக்கு ஒரு தொகைப் பணத்தையும் கொடுத்து அனுப்புகின்றனர். இன்றும் ஒருபடி மேலே போனால் எல்லோரையும் ஒன்றாக வைத்து ஒரு குரூப் போட்டோ எடுத்து அதனை ஒரு மட்டையில் ஒட்டி சேட்டிபிக்கட் எனக் கையில் கொடுத்து அனுப்பி விடுகின்றனர். இதோடு அவர்களின் கடமை முடிந்துவிடுகிறது.

இதைத்தான் இந்த மலையக தொழிற் சங்கங்களின் தொழிலாளர் கல்விப்பிரிவுகள் செய்து வருகின்றன. இதைவிட வேறு எதையும் சாதித்துக் கிழித்துவிடவில்லை.

இந்தக் கருத்தரங்குகளில் கலந்து கொண்ட தொழிலாளர்களுள் எத்தனை பேர் தாம் தெரிந்து கொண்டதை ஏனைய தொழிலாளர்களுக்கு சொல்லிக் கொடுத்துள்ளனர்.

கருத்தரங்குகள் முடிந்து தோட்டங்களுக்கு திரும்பியவர்கள் இரண்டொரு நாட்களுக்கு தாம் சாப்பிட்ட உணவுகளைப்பற்றியும், கிடைத்த சலுகைகள் பற்றியும் தாம் பார்த்த இடங்களைப் பற்றியும் பேசுவார்கள். அதன் பின் இப்படி ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டதையே மறந்து விடுவார்கள்.

இதற்காகவா இந்த தொழிற் சங்கங்கள் தனித்தனியாக தொழிலாளர் கல்விப் பிரிவுகளை வைத்து நடத்துகின்றன? லட்சம் லட்சமாக ஏப்பம் விடுகின்றன?

இப்படி எல்லாம் கல்விச்சேவை புரிகின்றோம் எனப் படங்களையும், பத்திரிகைகளில் வந்த செய்திகளையும் காட்டி வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து கோடி கோடியாகப் பணம் பெறுகின்றனர்.

அதைச் செய்தோம், இந்தப் புரொஜக்ட் செய்தோம் என்று காகிதத்தில் கணக்குக் காட்டி கரன்ஸிகளை ஏப்பம் விடுகின்றன.

தோட்டத் தொழிலாளர்களின் .சந்தாவை சுருட்டி வரும் தொழிற் சங்கங்கள், அவர்களை விற்று சர்வதேச தொழிலாளர் அமைப்புகளிடம் பல கோடிகளை சுரண்டி சுகபோகம் அனுபவிக்கின்றன.

உண்மையாகவே இவர்கள் என்ன செய்ய வேண்டும் ? தொழிலாளர்களின் சந்தாவில் வாழும் இவர்கள் அந்த அப்பாவிளுடைய குழந்தைகளின் கல்வி வளர்சியைப் பற்றி எதையாவது சிந்தித்து செயற்பட்டால் என்ன?

மலையகத்தில் இப்பொழுது பெரும் தொகையானோர் க.பொ.த. சாதாரண தரத்திலும், உயர்தரத்திலும் திறமையாக சித்தி அடைந்துள்ளனர். ஆனால் அவர்கள் அதற்கு மேல் உயர்கல்வியைத் தொடர முடியாத நிலையில் தத்தளிக்கின்றனர்.

அடிப்படைக் காரணம் கொழும்பு ,கண்டி போன்ற நகரங்களுக்குச் சென்று படிப்பைத் தொடர முடியவில்லை. இப்பெரிய நகரங்களில் தங்குமிட வசதி இல்லை. பல ஆயிரங்களை வாடகையாகச் செலுத்தித் தங்கிப் படிக்கக் கூடிய பொருளாதார வசதி இல்லை.

மலையகப் பெற்றோர் தாம் பெறும் அற்ப சம்பளத்தில் தமது பிள்ளைகளை உயர்தரம் வரை படிக்க வைப்பதே இமாலய சாதனை . அப்படி இருக்க இவர்கள் படிப்புக்கான செலவை செய்வார்களா அதோடு தங்குமிட வாடகையாக பல ஆயிரங்களை செலவிடத் தான் முடியுமா?

இப்படியான காரணங்களால் படிக்கும் ஆர்வமுள்ள பல மலையக இளைஞர், யுவதிகள் மேற்கொண்டு படிக்க முடிய வில்லையே என குமுறிக் கொண்டு இருக்கின்றனர். அப்படியே சில பெற்றோர் வாடகை அறைகளிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்க வைத்தாலும் இளம் யுவதிகளுக்கான பாதுகாப்பு இல்லை.

தோட்டத் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கும் தொழிற் சங்கங்கள் கோடிகோடியாக சந்தாப் பணத்தைப் பெறும் தொழிற்சங்கத் தலைவர்கள், கொழும்பில் ஒரு மாணவர் விடுதியைக் கட்டினால் என்ன? தனிப்பட்ட முறையில் மலையக மாணவ, மாணவிகளுக்கு என விடுதி ஒன்றை அமைக்க முன் வாருங்கள். அங்கே மலையக இளம் சமுதாயம் தங்கிப் படித்து தம்மை வளர்துக்கொள்ள வழியமைத்துக் கொடுக்க முயலுங்கள்.

உங்களிடம் இருப்பது பணம். இதற்கு மேலும் தொழிலாளர் கல்விக்கென சர்வதேச அமைப்புகளிடம் இருந்து பெறும் பல கோடிகள். இவற்றை எல்லாம் கொண்டே நீங்கள் சகல வசதிகளுடனும் கூடிய விடுதி ஒன்றல்ல பல கட்ட முடியும். உங்களுடைய சொந்தப்பணத்தைக் கொண்டு கட்ட வேண்டாம். அந்த உயர்ந்த நல்ல எண்ணமும் உங்களிடம் கிடையாது. இது உலகறிந்த உண்மை.

எனவே பெயருக்கு தொழிலாளர் கல்வி, அதற்கொரு பணிப்பாளர் என்று ஊரையும் உலகையும் ஏமாற்றாமல் உருப்படியாக எதையாவது செய்ய முன்வாருங்கள்.

கருத்தரங்கு நடத்துகிறோம், புரொஜக்ட் செய்கிறோம் என்று ஏமாற்றிப் பணம் பெறுவதை விட்டுவிட்டு எங்களுடைய தொழிலாளர்களின் குழந்தைகளின் உயர்படிப்புக்காக தலைநகரில் விடுதி ஒன்றை அமைக்கப் போகிறோம் என்று கூறுங்கள். பல நிறுவனங்கள் கோடி கோடியாகக் கொட்டத் தயாராகவே இருக்கின்றன. அதைப் பெற்றாவது இந்த நல்ல காரியத்தைச் செய்யுங்கள். அப்போது இந்த மலையக இளம்சமுதாயம் உங்களை என்றென்றும் மறக்காது. இதைச் செய்வார்களா இந்த மலையகத் தலைவர்கள்.

இந்த தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அடிக்கடி வெளி நாடுகளுக்கு செல்கின்றனர். திரும்பி வந்த பின் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் வசதியாக வாழ்கின்றார்கள். அங்குள்ள தொழிற்சங்கங்கள் பாடசாலைகளை நடத்துகின்றன. சொந்தமாக பாடசாலை பஸ் சேவைகளை நடத்துகின்றன. மாணவர் விடுதிகளைக்கட்டி தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கி உள்ளன. இலவசமாக உணவு வழங்குகின்றன என எல்லாம் வாய் கிழியக்கூறுகின்றனர்.

ஆனால் இங்கு மலையக சிறார்கள் உயர்கல்வி பெறமுடியாமல் தவிப்பதை மட்டும் ஏனோ கண்டும் காணாதது போல் இருந்து விடுகின்றனர். இது தான் ஆச்சரியம்.



# டேஸ்ட் கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் பஜாருக்குப் போவதற்காக மெயின் ரோட்டுக்கு வந்தார். அப்போது சிவாவும் நடராஜனும் இன்னும் சில இளைஞர்களும் எதிரே வந்து கொண்டிருந்தனர். எல்லோரும் ஒரேகுரலில் ''வணக்கம் அண்ணே'' என்றனர்.

''வணக்கம் வணக்கம் என்ன காலையிலேயே எல்லோரும் கூட்டமாகக் கிளம்பி விட்டீர்கள்?'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே! நம்ப தோட்டத்துப் பிள்ளைகள் காலையிலேயே பாடசாலைக்குப் போகப் பயப்பட்டாங்க. அது தான் நாங்கள் துணைக்குப் போய் விட்டுட்டு வந்தோம்'' என்றார்கள் இளைஞர்கள்

''என்ன சிவா இது எத்தனை நாளைக்குத்தான் இப்படி வேலை வெட்டிய விட்டுப் புட்டு காவலுக்குப் போகப் போறீங்க? அதுக்கு ஒரு முடிவு வேணாமா? இல்ல அதுக்கு வேற வழி வேண்டாமா?'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே! இந்தப் பேப்பரைப் பாருங்க. அதுல ஒரு நல்ல வழி கிடைத்திருக்கு'' என்று சுடர் ஒளி பேப்பரை நீட்டினான் சிவா.

''என்ன தம்பி, அப்படி என்ன போட்டு இருக்கு? கொண்டா பார்ப்போம்'' என்று பேப்பரை வாங்கிப் படித்தார் தணி அண்ணன்.

''அடடே நல்ல ஆலோசனையாகத்தான் இருக்குது. இது வரை எவருமே கேட்கத் துணியாததை சந்திரசேகரன் ஐயா துணிச்சலுடன் கேட்டு இருக்கார். அதைப் பாராட்ட வேண்டும்'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணே இங்க பாருங்க, பச்சைக் கட்சி அரசாங்கமானால் என்ன? நீலக்கட்சி அரசாங்கமாக இருந்தால் என்ன? இவுங்க யாருமே நம்ப பாதுகாப்பைப் பற்றி சிந்திக்க மாட்டாங்கள். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்கள் சிறுபான்மையாக இருக்க எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்களவர்களுக்குதுப்பாக்கி கொடுத்தார்கள். அங்கு ஊர் காவல் படைகளை அமைத்தார்கள். இன்னும் ஆயுதங்களை வைத்து இருக்காங்க இல்லியா?'' என்றாள் திலகா.

''ஆமாம் ஆமாம் இன்றும் கூட அவர்கள் ஆயுதங்களையும் துப்பாக்கிளையும் வைத்துக் கொண்டு தான் திரியிராங்க'' என்று ஆமோதித்தார் தணி அண்ணன்.

''இங்க பாருங்க அண்ணே குரங்கு முகம் எல்லாம் ஒரே முகம் என்பது போல இந்த சிங்கள அரசாங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களுடைய பாதுகாப்பைப் பற்றி சிந்திப்பதே இல்லை. இது ஏன்'' என்றான் இதுவரை அமைதியாக இருந்த நடராஜன்.

''நடா இந்த கட்சிக் காரங்களுக்கு தமிழர்களுடைய ஓட்டு மட்டும்தான் தேவையே ஒழிய நம்மைப் பாதுகாக்க வேணும் என்கின்ற நோக்கமே கிடையாது.'' என்றாள் திலகா.

''திலகா சொல்லுறதும் சரிதான். இங்க பாரு மேல் கை பக்கம் தமிழ் ஆட்கள் பெரும்பான்மையா இருக்காங்க. ஆனால், தென் பகுதியில் சிங்களக் குடியேற்றக் கிராமங்களுக்கு நடுவில தான் நாம் இருக்கோம். சுற்றிவர சிங்களவர்களுக்கு மத்தியில் எலிப் பொறியில் சிக்கிய மாதிரி மாட்டிக் கொண்டு இருக்கோம்'' என்று கூறினான் நடராஜன்.



''அதனால தான் இப்படி சிங்கள கிராமங்களுக்கு இடையில் எல்லைப்புற தோட்டங்களில் இருக்கும் நமக்கும் ஆயுதம் கொடுக்க வேண்டும். தற்பாதுகாப்புக்காக துப்பாக்கி வைத்திருக்கலைசன்ஸ் கொடுக்க வேண்டும் என்று சந்திரசேகரன் ஐயா கேட்டு இருக்கார்'' என்றான் சிவா.

''தம்பி நீங்க சொல்றது எல்லாம் சரிதான். மயிலே மயிலே இறகு போடு என்றால் இறகு கிடைக்காது. அடித்துப் பிடித்துப் பறிக்க வேண்டும். எந்த அரசாங்கமும் நமக்கு ஆயுதம் கொடுக்காது. துப்பாக்கி வைத்திருக்கலைசன்ஸும் தராது'' என்று நிறுத்தினார் தணி அண்ணன்.

''அண்ணன் சொல்லுறதைப் பார்த்தா நமக்குப் பாதுகாப்பே கிடைக்காதா? என்றாள் திலகா.

''இங்க பாருங்க நீங்க எல்லோரும் இளைஞர்கள். துடிப்பானவர்கள். அரசாங்கமோ கட்சிகளோ நமக்குப் பாதுகாப்பு அளிக்காது நாமே சுயமாகப் பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அப்படீன்னா தோட்டங்களில் உள்ள எல்லா இளைஞர்களும் ஒன்று கூடி இளைஞர் படை அணி ஒன்றை உருவாக்க வேண்டும். நம்ப தாத்தாமார் மாதிரி சிலப்பம், மல்யுத்தம், கராட்டி, சிலம்படி, வர்மம் எனப் பயிற்சி பெற வேண்டும். தற்பாதுகாப்புக்காக நாமே சுயமாக ஆயுதங்களைச் சேர்க்க வேண்டும். இரவு நேரங்களில் தோட்டப்புற எல்லைகளில் ரோந்து செல்ல வேண்டும். அப்போது நம்மைப் பார்த்ததும் பயப்படுவார்கள்'' என்றார் தணி அண்ணன்.

''அண்ணன் அருமையான யோசனை தான் இது. வடக்கு கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு எந்த அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியது? பயிற்சிகளைக் கொடுத்தது. அரசின் கெடுபிடிகளும், பாதுகாப்புத் துறையினரின் அட்டகாசங்களும் தான் இன்னும் தமிழ் இளைஞர்கள் முன் அரசாங்கத்தையே மண்டியிட வைத்து விட்டன'' என்றார் சிவா.

''தம்பி இப்பதான் சரியாகப் புரிந்து கொண்டாய். இன்னும் காலம் கடத்தக் கூடாது. உடனடியாக செயலில் இறங்க வேண்டும். தோட்டம் தோட்டமாக இளைஞர் படையணிகள் உருவாக வேண்டும். அப்போது நாட்டுப் புறச் சிங்களவர்கள் என்ன அரசியல்வாதிகள் கூட நம்பக்கம் வரப் பயப்படுவார்கள்'' என உணர்ச்சிவசப்பட்டவராகக் கூறினார் தணி அண்ணன்.

தணி அண்ணனின் உற்சாகமும், ஆதரவும் இருக்கும் வரை நமக்கு என்ன கவலை. அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பது இல்லையே. உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதே இல்லை எனக் கிளம்பி விட்டது இளைஞர் கூட்டம்.



# சொல்லாதே இது இரகசியம்!

*சர்வமதத்தவர்களும் சேர்ந்து வழிபடும் மலை உச்சியில் உள்ள பாடசாலையின் அதிபர் ஒரு மன்மதராசனாம். ஆளுக்கு ஆள் ஆசைப்படும் கட்டுடல் கொண்டவராம். ஆனால், சகதர்மினியோ அதற்கு நேர்மாறானவராம். அடக்கத்திலும் நடத்தையிலும் நிறைகுடமாம்.*

*என்றாலும் இந்த அதிபரோ எந்த ஒரு விழாவுக்கும் சகதர்மினியுடன் செல்வதே இல்லையாம். ஆனால், பாடசாலையில் உள்ள தாய்க்குலங்கள் கலந்து கொள்ளும் எந்த விழாவையும் அவர் விட்டு வைப்பதில்லையாம்.*

*அண்மையில் லிட்டில் இந்தியன்ஸ் என அழைக்கப்படும் வசந்த நகரில் இடம் பெற்ற திருமண வைபவத்துக்கு இந்த அதிபர் சென்றிருந்தாராம். அங்கே பாடசாலையில் பணிபுரியும் தாய்க்குலம் ஒன்று குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு அந்த அதிபருடன் உரையாடிக் கொண்டிருந்தாராம். அப்போது அங்கே வந்த ஒரு பெரியவர் ''அம்மா வெடிங்குக்கு வந்தீர்களா? இப்படித்தான் குடும்பத்தோடு வர வேண்டும். குழந்தை அப்படியே அப்பாவை உரித்து வைத்த மாதிரி இருக்கு'' என்று வாயார வாழ்த்திவிட்டுப் போனாராம்.*

*பாடசாலையில் அப்படி இப்படி அடிபட்ட கதையை அந்தப் பெரியவர் உறுதிப்படுத்தி விட்டாராம். தாய்க்குலமோ சர்வசாதாரணமாக ''கிழடும் சரியாத்தான் சொல்லிப் போட்டுது. நல்ல வேளை மனிசன் பக்கத்தில் இல்லை'' என்று கூறி உதட்டைக் கடித்தாராம். இது எப்படி ஐயா சங்கதி?*

மாகாண சபைத் தேர்தல் 2004 - கொழும்பு மாவட்டம்

"தமிழ் மக்களின் விகிதாசார ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க, நிர்வாக திறமைமிக்க ரவியை தெரிவு செய்யுங்கள்"




நேர்மையான சேவைக்கு எங்கள் தெரிவு !



திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்

011 4734401 - 3, 011 2399566 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



# வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

Hungry Plus

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.




ஹங்ரி பிளஸ்

பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290





EXPOAiR எக்ஸ்போ எயார்

your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது ரோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com



இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை



# SHARP

கண்ணுக்கும் காதுக்கும் இனிமையானது

பிரவுன்ஸ்

கண்ணுக்கும் காதுக்கும்



21EFGI
PURE FLAT SCREEN
AV STEREO
MULTISYSTEM

பொருசன நூலகம் யாழ்ப்பாணம்



CDE600V
5 DISC CD CHANGER
SIDE FIRING BASS SPEAKERS
3000 WATTS, MP3 COMPATIBLE



BG
கட்டாய படுத்தப்பட்ட உத்தரவாதம்

Hot Line: 4716860

சிறந்த SHARP Audio, Video உற்பத்திகள்

SHARP நிறுவனத்தின் உத்தியோகபூர்வ ஏகமுகவர்
பிரவுன் எண்ட் கம்பனி லிமிட்டட்
481, டி.பி. ஜயா மாவத்தை கொழும்பு10, தொலைபேசி: 2697111, 2698411 பெக்ஸ்: 2675065
Duty Free Arrival: 2257797 Departure: 2256603 ஈமெயில்: electronics@brownsgroup.com
இப்பொழுது நாடுபூராவும் பரவியுள்ள பிரவுன்ஸ் காட்சியறைகளிலும், Duti Free காட்சியறைகளிலும், பிரவுன்ஸ் முகவர்களிடமும்

ARTBOX



இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஜூன் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட